63

பெரிய

# முஹ்யித்தீன்மாலை

(ஐந்து முனாஜாத்துகளுடன்)

கொளும்பு கெ. 190, செட்டித் தெரு
புஸ்தகம் படம் வியாபாரம்
ப. முஹ்யித்தீன் பிச்சை சாகிபவர்கள்
கேட்டுக்கொண்டபடி

114



மதுரைஜில்லா - திருப்பரங்குன்றம்
நயினா முஹம்மது புத்தகசாலையாரால்
பதிப்பிக்கப்பட்டது.

1930

இதன் விலை அணா 12

ACL-TNA
01852

சென்னை சர்க்கார் சுகாதார மந்திரி அவர்களாலும், அநேக
ஜமீன்தார் பிரபுக்கள், ஜட்ஜுகள், வக்கீல்கள், டாக்டர்களாலும்,
தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்ற

# தண்டபாணி வைத்தியசாலையின்

## மருந்துகள்

### மஹா மன்மத சிந்தாமணி லேகியம்

இந்த லேகியத்தில் முறைப்படி சுத்தி செய்த 108-வகை சரக்குகளும், அநேக வித்துவகைகளும், பிசின்களும், சாலாமிசிரி முதலான இந்திரியக் கட்டுள்ள அநேக சரக்குகளும், பால், சீனி, நெய், தேன் சேர்த்து லேகிய பாகமாய்ச் செய்யப்பட்ட ஔஷதம். இதற்குப் பத்தியம் கிடையாது. அபாரமான தாது புஷ்டியும், நீடித்த போக சக்தியும், இழந்த பலத்தையும் கொடுக்கக்கூடியது.

இந்த லேகியத்தை சுண்டக்காயளவு தினந்தோறும் சாப்பிட்டுக்கொண்டு வருபவர்களுக்கு வாத பித்த சிலேத்மங்களை ஒன்றுக்கொன்று மீறவிடாமல் சமப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவைக்கொடுத்து மூளையை விர்த்தி செய்து இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி, அறிவு சுடருண்டாக்கி, மனதிற்கு அதிக சந்தோஷத்தையும், ஆனந்தத்தையும் கொடுக்கும்.

நீடித்த வியாதியினால் பீடிக்கப்பட்டு ஜீர்ண சக்தியும், ருசிகரமும் குறைந்தவர்களுக்கும், திரேகம் பலவீனப் பட்டவர்களுக்கும், இடுப்பு வாய்வு, கீல்வாய்வு ரோகஸ்தர்களுக்கும், இருமல், இளைப்பு முதலிய கப சம்பந்தமான ரோகஸ்தர்களுக்கும், அதிகமான ஆகாரமும், போகமும் விரும்புவோருக்கும், தூக்கமில்லாதவர்களுக்கும், சதா வியாகூல மடைந்தவர்களுக்கும், சொற்பன ஸ்கலிதமுண்டாகும் பால்யர்களுக்கும், நற்சிந்தையை வேண்டுபவர்களுக்கும், ஞானவான்களுக்கும் உபயோகப்பட்ட பரமானந்த ஔஷதம் இது ஒன்றே. ஒரு சேர் ஒரு மண்டலம் உபயோகிக்கலாம். முதல் நெம்பர் 1-சேர் டின் ரூ. 3.

### அமிர்தம்

குடலைப் பற்றிய எல்லா வியாதிகளையும் போக்கும். அன்றாடம் மலப் பிரவர்த்தியைக் கிரமமாய் செய்து, மூலாதார உஷ்ணம், மூல வியாதிகள் முதலிய எல்லா வியாதிகளையும் போக்கும். 1-சேர் டின் ரூபா 2—0—0

### பிரமமேக நிவாரணி

எவ்வளவு காலம் நீடித்த வெள்ளை, வெட்டை, நீர்க் கடுப்பு வியாதிகளையும் உடனே குணப்படுத்தக்கூடியது.
9-வேளை மருந்து புட்டி 1-க்கு ரூ 2-4-0

### தங்கரேக் குளிகை

தாது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. 100 மாத்திரை ரூ. 15. 50-க்கு ரூ. 8—8—0. 25-க்கு ரூ. 5.

### தண்டபாணிப் பற்பொடி

ஒரு மாதம் உபயோகிக்கக்கூடிய டப்பிகள் டஜன் 1-க்கு ரூ. 1—8—0.

### அமிர்தரசம்

சகல நோய்களுக்கும், வலிகளுக்கும், உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கக் கூடியது. துளிக்கணக்கில் உபயோகிக்க மணிக்கணக்கில் சுகம். 1 புட்டி விலை ரூ. 1-8-0.

### வில்வாதி தைலம்

இத்தைலம் வாரத்திற்கு இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் மூளையை குளிர்ச்சி செய்து சிரசைப்பற்றிய எல்லா வியாதியையும் போக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | அவுன்ஸ் டின் | 1-க்கு | ரூ. | 1—3—0 |
| 12 | ,, | | ,, | 2—4—0 |
| 24 | ,, | | ,, | 4—0—0 |

[வி. பி. வேறு.] அன்னிய நாட்டார் தபால் செலவு உள்பட முன்பணம் அனுப்ப வேண்டியது.

குறிப்பு:—சகல நோய்களுக்கும் ஸ்நானபான அநுபான பத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாக்ஷிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

**தண்டபாணி வைத்தியசாலை,** தபாற்பெட்டி 292, மதராஸ்

# இஸ்லாம்

(4-ம் பதிப்பு)

## (பல சித்திரப் படங்களுடன்)

MAY 1930

இது ஒரு மகா சிறந்த தமிழ் நூலாகும். இதில் இஸ்லாத்தின் சம்பந்தமான ஐந்து பாலகளும் (கடமைகளும்) மிகத் தெளிவாகவும் புத்திக்கும் யுக்திக்கும் மிகப் பொருத்தமாகவும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கடமையின் சார்பான தத்துவமெல்லாம் விஸ்தரிக்கப்பட்டிருப்பதுடன் அனுஷ்டானத்திற்கு வேண்டிய விவரங்களனைத்தும் சாங்கோபாங்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இஸ்லாத்தின் கடமைகள் சார்பான எந்த விஷயத்தையும் இதில் அதி சுலபமாக எடுத்துத் தெரிந்துகொள்ளலாம். அதிசியமான இடங்களில் அரபு வாக்கியங்களும் அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புகளும் நிரம்பக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலுள்ள மஸ்அலாக்களெல்லாம் சரியான மூலக்கிரந்தங்களிலிருந்து தழுவிப் படிப்போருக்கு அதி எளிதில் விளங்குமாறு மிக விளக்கமாகப் புதிய முறையில் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

இதில் தொழுகைக்கு வேண்டிய (1) நிலைநிற்றல் (2) தக்பீர் கட்டத் தொடங்குதல் (3) தக்பீர் கட்டுதல் (4) ருகூஉ செய்தல் (5) ஸஜ்தா செய்தல் (6) ஸஜ்தாவின் பார்வை (7) ஸஜ்தா பக்கப்பார்வை (8) இருப்பின் முன் பார்வை (9) இருப்பின் பின் பார்வை (10) ஸலாம் கொடுத்தல் ஆகிய 10 நிலைமைகளும் இதுவரையில் பார்த்திராத அதி விசித்திரமான சித்திரப்படங்களால் ஆங்காங்கே விளக்கப்பட்டிருக்கின்றன. இதனால் ஒவ்வொருவரும் பிறர் உதவியின்றித் தாமே தொழுகையைக் கற்றுக்கொள்ளலாம். இப்படிப்பட்ட நூதனமான ஏற்பாட்டை இதுவரை ஒருவரும் கண்டிரார், இவை வாங்கிப் பார்ப்போருக்கே இதன் அருமையும் பெருமையும் விளங்கும்.

இதன் அனுபந்தத்தில் குர்ஆனின் அல்ஹம்து ஸூராவும் இறுதி பத்து ஸூராக்களும் எல்லோரும் படிக்கும்படியான விதத்தில் மகா அழகான அரபு எழுத்துக்களால் தமிழ் அர்த்தத்துடன் எழுதப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட ஸூராக்களையும் அர்த்தங்களையும் இம்மாதிரி இதுவரை ஒருபோதும் ஓரிடத்திலும் கண்டிருக்கமாட்டீர்கள் என்பது திண்ணம். இப்படிப்பட்ட நூல் இத்தமிழ் நாட்டில் வெளியானது இதுதான் முதல் முறையாகும்.

இதுபோன்ற நூல் இதுகாறும் இத் தமிழுலகில் வெளியானதேயில்லையென்போமாயின் அஃதொன்றும் ஒருபோதும் மிகையாகாது. எம்முடைய புத்தகங்கள் அச்சிடப்படும் வழக்கம்போல் இந்நூலும் மிகப் பளபளப்பான காகிதத்தில் காண்போர் கண்ணைப் பறிக்கும்படியான விதத்தில் அச்சிடப்பட்டு அதி நேர்த்தியாகக் கெட்டி அட்டையால் டக்ஸீன் காலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. 156 பக்கங்கொண்ட இவ் வழகிய நூலின் கிரயமாகிய ரூபா 1. மிக மிகக் குறைவென்பது இதை வாங்கிக் கையிலெடுத்துக் கருத்திலிருத்துபவர்க்கே நன்கு விளங்கும். சில பிரதிகளே அச்சாய் இருக்கின்றன. அதிசீக்கிரம் செலவழிந்து விடுதல் கூடும். தினமொன்றுக்கு அளவுகடந்த ஆர்டர்களுக்கு அனுப்பி வருகிறோம். முந்திக்கொள்பவருக்கு இன்றே ஒரு பிரதி கிடைக்கும். பிந்திக்கொள்பவருக்கு நாங்கள் உத்தரவாதியல்லேம். இப்படிப்பட்டவர்கள் மறுபதிப்பு வரையில் காத்திருக்கும்படி ஏமாந்துபோக நேருமாதலின் இன்றே எழுதுங்கள். நாளைக்கே ஒரு காப்பி கிடைக்கும். ரூ. 1—4—0 விலை வைக்கவேண்டிய இப்புத்தகத்துக்கு இப்பொழுது இறக்கமாக வைத்திருக்கும் கிரயமோ ரூ. 1 தான்.

**தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை,**

நெ. 22, பிராட்வே, மதராஸ்.

# வாசனைத் திரவியங்கள்

**50 வருஷங்களுக்குமேல் அனுபவ பிரசித்திபெற்ற ரிஜிஸ்டர்ட் யானைமார்க் வாசனைத் திரவியங்களை உபயோகியுங்கள்**

1. **சந்தனாதித் தைலம்:**—மூளையைக் குளர்ச்சி செய்து கூந்தலை வளரச்செய்வதில் நிகரற்றது 8-பலம்டின் 1-க்கு ரூ. 1-0-0.

2. **அரைக்கீரை விதைத் தைலம்:**—இது சிரசுநோய், கண்நோய், கூந்தல் குற்றங்களை அகற்றி கூந்தலை கருமை நிறத்துடன் வளரச்செய்து தேகக் குளிர்ச்சியையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். 8-பலம் டின் 1-க்கு ரூ. 1—0—0.

3. **மிளகாய்த் தைலம்:**—இது கபாலத்தி லுண்டாகும் தலைவலி கண்ணீல் நீர்வடிதல், கண் புகைச்சல், காதுமந்தம், காதில் இரைச்சல் கண்ணில் சதைபடருதல் முதலியவைகளை இரண்டு மூன்று ஸ்நானத்தில் தீர்க்கும். 8-பலம் டின் 1-க்கு 2—0—0.

4. **ஷபாரஞ்சன் பேயின்பாம்:**-இது தலைவலி, கீல்வாய், முதுகுவலி, சுளுக்கு, நரம்புவலி, பல்வலி, வீக்கம்; வெட்டுக்காயம், இருமல், ஜலதோஷம் முதலியவைகளினால் கஷ்டப் படுகிறவர்களுக்கு வரப்பிரசாதம்போன்றது. ஒருமுறை உபயோகித்து உண்மையறியுங்கள். டப்பி 1-க்கு 0—8—0.

5. **கலவைச் சந்தனம்:**—எங்கள் பரிமள பொருள்களில் சிறந்தது என்று இதை உபயோகித்த ஒவ்வொருவரும் போற்றுகிறார்கள். இதைஉபயோகிக்கும் அன்பர்கள் சுகானந்தக் களிப்படைந்து மெய்மறந்து பரவசமாவார்கள் என்பது ஒரு முறை பரீக்ஷித்தால் தெரியவரும். படி 1-க்கு ரூ. 2 முதல் 20 வரை கலந்து கொடுக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1 நெ. கலவை சிறு சந்தனவில்லை | 100-க்கு | 6—0—0 |
| 2 நெ. ஷை பெரிய ஷை | 100-க்கு | 6—0—0 |
| சந்தனப் பவுடர் டப்பி | | 0—4—0 |

இன்னும் வாசனைப்பாக்கு, வாசனைச் சுண்ணாம்பு, கேசர் பவுடர், ஸ்நானப்பவுடர், தசாங்கம், பற்பொடி, நாஷனல் ப்ளவர் டஸ்டு, ஊதுபத்திகள், அத்தர் தினுசுகள் முதலான சரக்குகளும் விலைசகாயமாய் கிடைக்கும். மற்ற விபரம் பார்க்க வேண்டுமானால் எங்கள் பெரிய கேட்லாக்குக்கு எழுதவும்.

**நாஷனல் ப்லவர் டஸ்ட்:**—உடுப்பு வகையறா பெட்டிகளில் அந்துபாச்சை முதலிய பூச்சிகளினால் ஏற்படும் இடையூறுகளை நிவர்த்திக்க அதற்கு தகுந்த சரக்குகளைக் கொண்டு தயாரித்த இப்பொட்லத்தை உபயோகித்துவரின் ஷை பூச்சிகளையும் தொத்து வியாதிகளையும் வரவொட்டாது தடுப்பதுடன் பரிமளத்தை உண்டாக்கும். இதனது பெருமையை ஒருமுறை உபயோகித்தால் தெரியவரும். பாக்கெட் 1-க்கு 0—2—0.

**எம். காதர் சாஹிப் அண்ட் ஸன்ஸ்,**

அத்தர் வியாபாரிகள், கீழ்ச்சித்திரைவீதி, மதுரை.

பெரிய

# முஹ்யித்தீன் மாலை

(ஐந்து முனாஜாத்துகளுடன்)

இஃது
சோதாக்குடியிலிருக்கும் மகா கனம்பொருந்திய
பக்கீறு மதாறுப் புலவரவர்கள்
இயற்றியது.

கொளும்பு செட்டித்தெரு, நெ. 190
புஸ்தகம் படம் வியாபாரம்
ப. முஹ்யித்தீன் பிச்சை சாகிபவர்கள்
கேட்டுக்கொண்டபடி

மதுரை ஜில்லா திருப்பரங்குன்றம்
நயினா முஹம்மது புத்தகசாலையாரால்

சென்னை
சென்னை கார்டியன் பிரஸில் அச்சிடப்பெற்றது.

1930

இதன் விலை அணா 12




பகுதாதில் அடங்கியிருக்கும் முஹயித்தீன் அப்தல்காதிர் ஜைலானி (ரலி) அவர்களின் தர்கா.

MAY 1930

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

கனம்பொருந்திய நெயினா முஹம்மது ஆலிம் சாகிபவர்களிடம்
உரை வாங்கிப்

## பக்கீர் மதாறுப்புலவர் அவர்கள் இயற்றிய

# முஹ்யித்தீன் மாலை

5 - MAY 1930
OFFICE OF THE

### காப்பு விருத்தம்

பூவினில் மருவும் பொற்பார் மணியினு ளொளியும் போலென்
ஞுவினி லறிஞர் நெஞ்சி லுறைந்திடு நாதன் தன்னைப்
பாவினி லுவமை யொவ்வாப் பயன்மறை யுதவ ருட்பூங்
காவினை நலமருள் வாழ்வைக் கத்தனைத் துதிசெய் வாமே. (1)

### தொங்கல்

எல்லாம்படைத்தவன் கிருபையாலேயிரஸூல் முஹம்மதுநபியைப்போற்றி
நல்லோர்யார்களோடசுஹாபிமார் நாதர்தமையெல்லாமுவந்துவாழ்த்தி
மல்லிமலர் வாச முஹ்யித்தீனின் மலரடி யென்றன் சிரமேல் வைத்து
வல்லோனுதவியால்மணிமாலையின் வரலாறதனையேயுரைசெய்வாமே. (2)

இந்த மணிமாலை படித்தபேரு மின்பமாகவே கேட்டோர்களும்
அந்தமில் ஹக்கனுதவியாலே யாலந் தனிலுள்ள முஸிலீம்களே
யெந்த நாளினும் பறக்கத்தாக யிரஸூல் ஷபா அத்தும் சுவர்க்கப்பதி
தந்தே யிறையவன் கிருபைசெய்வான் தாலந்தனிலான தீனோர்களே. (3)

திங்கள் வதனத்த ரிரஸூலுல்லா சிறந்த கலைமுறை பனிரெண்டினில்
சங்கை யாகிய பகுதாதினிற் றவத்தி லிருந்தாரே அபுசாலிகு
எங்கும் நிறைந்தவ னருளினாலே யேகி நாதருஞ் ஜெயிலானியிற்
செங்கை யுளநீர் பாத்திமாவைத் திருமணஞ்செய்தே யிருக்குநாளில். (4)

அறுபதாண்டாகச் சேயில்லாம லவர்க ளிருவரு மிறையைப் போற்றி
வருந்தியிருக்கின்றநாளதனில் வல்லோன்கிருபையால்பாத்திமாவும்
சிறந்த அமலாகிக்குதறத்தாகத் திங்களதுபோலேகிரேகமாகி
இறையோனுதவியென்றிருவர்களு மின்புற்றிருக்குநாள்ஜெயிலானியில். (5)

வல்லோன்கிருபையால்பாத்திமாவும் வணக்கந்தான்செய்து துயிலும்நேரம்
நல்லோர்கிலுறவர்கனவில்வந்து நவிலுவாரப்போதமுதம்போலே
யெல்லாபறக்கத்தும்பெற்றமாதே யிசைநம்முதாமார்பாலர்நாமம்
எல்லாவொலிகட்குமேலொலியா யிலங்குமுஹ்யித்தீனென்றோதினர். (6)

கனவுதான்கண்டேபாத்திமாவும் கணவர்க்குறைசெய்யமகிழ்ச்சியாகத்
தனமும்பறக்கத்துமிகவுண்டாகிச் சங்கையாகிய நாலாமாதம்
மனமுநலமுள்ளமாதர்வுமே விரவிக்காகவேகுடங்கொண்டேகக்
கனமும்பொருந்தியபூதம்வந்தே கறுத்தகிரிபோலேமுன்பிலாக. (7)

அன்னநல்டமாதா பயமதாகி ஆயாசங்கொண்டே நிற்கும்போது
தன்னாலொரு வேங்கை வெடிவாலோடும் சரகெதியாக வோடிவந்தே
முன்னும் பூதத்தினுடலைக்கீறி மூர்க்கமாகவே யெடுத்தெறிய
இன்னிலமீதிற் காணாதாலே யிறைவிமனைவந்தே யிருக்குநாளில். (8)

பனிரண்டாண்டுக்கு முன்பதாகப் பறிபட்டேகிய தொறுவானதும்
தனியேதான்வந்து மனைமீதினிற் சங்கையாகவு நிற்கும்போதி
லினிதாயாவரும் புதுமையானு ரிறையோன் குதரத்தென்றிருபேர்களும்
கனிவாயிருக்கையில் ஜெயிலானியிற் காரணமுள்ள சரிதைசொல்வாம். (9)

மனைகள்தனிலேதான் பாத்திமாவு மன்னரபுசாலி கவருமாகத்
தனியோன் கிருபையாற்றுயிலும்போது தாலமிருளாகி விரவானதிற்
றுணிவாய்த்திருடனு மனையில்வந்து துலங்குமுடைமைகள் திருடியவன்
மணியின்மாளிகை விட்டகல மாதாவயிற்றுறும் பாலர்சொல்வார். (10)

எந்தன்மாதவே களவாளியு மிலங்குமுடைமைக ளெடுத்தேகிறான்
சுந்துமணியானவென் தாயாரே சிறந்ததலை வாசலடைமினென்றார்
அந்த மொழிகேட்டு பாத்திமாவு மப்போதெழுந்தேகித் தலைவாயிலை
வந்தாரடைத்தவர் நிற்கும்போதில் மனமுந்துணிவுடன் திருடன்றானே. (11)

ஏகியவனுமே தலைவாயிலை யிருகாங்கொண்டு திறக்கும்போதில்
யூகமாகிய பாத்திமாவு முடையோனிருக்கிறா னெனநினைந்தார்
வாகாய் வயிற்றுறும்பாலகரும் வல்லோன் குதறத்தாற் காத்தைநீட்டிச்
சேகையுடன்வந்த திருடன்றன்னைச் செல்வரடிக்கவே அவனிறந்தான். (12)

ஏதுகார்ணந் தன்னைக்கண்டே யியம்பினாரப்போ கணவனார்க்குப்
போகவிருவரும் வந்துபார்த்தும் புலம்பினார்களே மன்கலங்கி
நீதிபெரியோனே யாகுதாயே நிலத்திலொருவருமறிவாறில்லை
யேதுநாம்செய்வோ மிறையவனே யெப்படியுயிர் பிழைப்போமென்றார். (13)

அன்னகாலையிற் சகலபேரு மதனையறிந்துதா னரசர்க்கோத
மன்னர் கோர்பமாய் அபுசாலிகை வாகாயழைத்துத்தான் வரச்சொல்லியே
முன்னும்சேவகர் தமையனுப்ப மூர்க்கமாகவே யவர்கள்வந்து
தன்னால்மனங்களு மயங்கிநின்ற தவத்தோர்தங்களை யழைத்தேகினார். (14)

முன்னாற் கொண்டுவந்து சுல்தானிட முடுகியிருவரை நிறுத்தும்போது
மன்னர்தான் கேட்டா ரபுசாலிகே வள்ளல் முஹம்மது கோத்திரமே
தன்னா லொருபொய்க ளோதிடாமற் சாற்று நிசந்தனை மிக்நீதரே
முன்னா ளிரவிலே களவாளியு மிறந்தவகை யென்னவென் றுகேட்டார். (15)

ஈது மொழிகேட்டங் கபுசாலிகு மிதயமிக வாடியுரை செய்குவார்
கோது மிகவான திருடன்வந்து குலமா னுடைமையை யெடுத்தேகையில்
மாது வயிற்றுறும் பாலர் சொல்ல வந்து தலைவாச லடைக்கும்போது
வந்து மிகவான களவாளியும் வாசற் றிறந்தேக நினைக்குநேரம். (16)

மருவின் குழன்மாதர் வயிற்றிலான மதலை யடிக்கவே யவனிறந்தான்
தருவின் மயில் சொல்ல யானறிந்தேன் சங்கை மிகவுள்ள அரசேயென்றார்
இருந்த ஜனங்களும் சுல்தானுமேயிது வெறும் பொய்கள் சொன்னாரென்றும்
பெருகுந் தவமுள்ள பாத்திமாவைப் பின்னா லழைத்துதான் கேட்கலானார். (17)

காட்டு மானுக்குப் பிணையாய் நின்ற ஹபீபு முஹம்மது கோத்திரமே
வீட்டில் களவாளி யிறந்தவிதம் விபரந்தனைச் சொலும் நிசமென்றோதக்
கோட்டி யாகிய வசனங் கேட்டுக் குலமா னமுதவாய் திறந்துசொல்வார்
கேட்டீர் நிசமென்னப் புவிமீதிலே கிருபை மிகவுள்ள சுல்தான்கேளீர். (18)

எந்தன் மனையிலே திருடன்வந்தே யிலங்கு முடைமைக ளெடுத்தே கையில்
அந்தமில் ஹக்கன் கிருபையாலே யருளினா ரெந்தன் வயிற்றின் பாலர்
சந்திப் பாகித் தலைவாசலைச் சாற்றியா னிற்கும் சமயத்திலே
வந்தான் களவாளி முன்பதாக வயிற்றிலு றும்பா லடித்தா ரென்றார். (19)

சங்கையா யோதும் வசனங்கேட்டுச் சகல பெயர்களும் பிசகென்றோதத்
திங்கள் வதனத்தின் பாத்திமாதஞ் சிறந்த வுதரத்தின் பாலர் சொல்வார்
எங்கள் தாய்தந்தை வசனமெல்லாம் யாரும் நிசமென்றே நினையாதாலே
பங்கமின்றிய வபுசாலிகு பாலர் முஹ்யித்தீன் யானென்றால். (20)

ஈது வசனங்க ளறிந்த போதங் கிருந்த சுல்தானும் மந்திரியும்
ஆதிபெரியவன் குதறத்தென்றே அனைவோர் மனங்களு மதிமயங்கி
யேது பிழைகளும் பொருத்தாளுவா யேகனே யுந்தன் குதறத்தென்றும்
நீதம் பொருந்திய விருவர்களே நீங்கள் மணிமாட மேகுமென்றார். (21)

வந்தேயிருவரு மனையிலாகி வல்லோன்தனைப் போற்றி யிருக்கு நாளில்
அந்த மிலியவன் கிருபையாலே அறமும் வளர்ந்தேறச் ஜெயிலானியிற்
சந்திர னுதயம் போல் பாத்திமாவும் தனியோன் தனைநித்தம் மிகவணங்கி
யெந்த நாளிலும் பறக்கத்தாக விலங்கும் பத்துமாதந் தானாகியே. (22)

இருக்கு நாளினிலாதிநாய னியம் புவானப் போதம ரொருக்குத்
திருக் கணுடையவனி சிரோமணியாய்ச் செல்வர் முஹ்யித்தீ னுதிப்பதாலே
பெருக்க மாகியவான லோகம் பிருதவ் சதனையே யலங்கரித்தே
யிருக்கு மெரியின்ன நாகமேழு மொழுங்காயடைத் திடுமென வோதினான். (23)

திட்டமாகிய வசனங் கேட்டுச் சிறந்த வானோர்கள் மனமகிழ்ந்து
மட்டி லடங்காத கனல்ததும்பு மறத்தோர் நரகங்க ளடைத்துப்பூட்டி
யெட்டுச் சுவர்க்கமு மலங்கரித்தா ரிலங்கும் சுந்துசுப் பட்டினாலே
கட்டி லதுமெத்தை மரகதத்தாற் ககனத் தரம்பையர் சிங்கரித்தார். (24)

ஈது படிநிற்க வானலோக மிறையோன் கிருபையால் ஜெயிலானியில்
நீதம் பெருகிய ஹிஜ்ரத் தாண்டு நேராய் நானூற்று எழுபத்தொன்றில்
சீத மிகவுள்ள ரமலான் மாதம் சிறந்த தலைநோன்பு கிழமைதிங்கள்
மாது பாத்திமா வயிற்றிருந்து வல்லோன் சுவனத்தின் துயிலுடுத்தி. (25)

உதித்தார் முஹ்யித்தீ னப்துல்காதி றும்பருள வானோர் புவியில்வந்து
பதித்த மணிமுத்தா யிலங்குமான பாலர் தமையுமே யெடுத்தேகியே
மதிக்க முடியாத வயிரங்களு மரகதமான சுவர்ன மீதில் [யே.
புதியோன்தன் ஹௌலல் கவுதரூற்றிற் பெரியோன் குதுபைய் முழுக்காட்டி

சுந்து சதனாலே கதர்துடைத்துத் துய்யோ னருளினால் தவிசில்வைத்தே
யெந்த அமரோரும் கூர்லீன்களு மிருகாந் தொட்டு முத்தியிட்டே
சந்திர வதனத்தின் தயாபரரே தனியோன் முஹம்மது பேரனாரே
சிந்தை பூரித்தோம் வதனங்கண்டு சிறந்த பாத்திமா வீன்ற கண்ணே. (27)

எல்லா வொலிமார்க்குமே லொலியே யிறையோனருள் பெற்ற நவமணியே
அல்லா அறுஷிலேது யிலிங்கோவே அபுசாலிகு தவந்தனில் வந்தோரே
நல்லோர் யாவரும் போற்றும் பூவே நபிமா ருவந்திடுங்கனி வர்க்கமே
வல்லோ னொலி வினிற்சுடர் மணியே மதியே முஹ்யித்தீனென் றோதியே. (28)

மின்னுமலர்ப் பாதமிகவும் போற்றி விண்ணோர் யாவரு மிருக்கு நேரம்
என்னும் பெரியவன் குதறத்தாக வியம்பு வானப் போதம ரோர்க்கெல்லா
மின்னுடன்னிலே குதுபொலிக்கே யேதாமொரு கண்ணே றணுகிடாமற்
றன்னான் மிகத்திட்டி கழித்து மாதா சமுகந்தனில்வைத்து வார்மினென்றான். ()

ஈது மொழிகேட்டு வானோ ரெல்லா மிலங் குந்துயிலா லேதிட்டி சுற்றிச்
சீதமதியான பாலகரைச் சிறந்தவா னோர்களெடுத்து வந்தே
மாது பாத்திமா சமுகம்வைத்தார் மயக்கந்தீர்ந் தன்னை தெளிவதானார்
போதாவுள்ள மகனை நோக்கிப் பெரியோன்றனைப் போற்றி மாதாவுமே. (30)

தறஜா மிகவுள்ள குது பொலிக்கே தாயார் பாலுண்ணக் கொடுத்த போதில்
வரிசையாகிய நோன் பானதால் வள்ளல் முஹ்யித்தீனப் துல்காதிற்
மருவின் மலர் வாசர் பாலுண்ணாமல் மாதாமடியின் மேலிருக்கும் நேரம்
இறையோன் பறக்கத்தென் றின்பமாகியிலங்கும் பாத்திமா மகிழ்சியானார். (31)

பருகும் பாலதுசஹர் நேரமும் பாங்காய்மகரிபு நேரத்திலும்
பெரியோன் கிருபையா லொருமாதமும் பிரியத்துட னோன்பு தானிருந்தே
மிறையோன் பறக்கத்து மிகவுண்டாகி யேகன் குதுபொலி வளரும் நாளில்
வருஷமது பின்புர மலானிலே மதியுந்தோனாமலிருக்கு நேரம். (32)

அந்த மிலியவ னப்துல்காதி றமுத முண்ணுமல் நோன்பிருந்தார்
சந்திர வதனத்தார் தமையும்பார்த்துச் சகலஜனங்களு நோன்பாகினுர்
சிந்தை யுவப்பான கைத்தாயரும் சிறந்த முஹ்யித்தீ னுண்டங்கையை
மந்த ரக்கதிர்மணித் தொட்டிலில் வாசமாய் வைத்தே தாலாட்டினுர். (33)

## தாலாட்டு

மாணிக்கத் தொட்டிலின்மேல் முஹ்யித்தீனெனுலி நித்திரையிற்
காணிக்கையா யவர்கள்கதம் காண்பாரோ கூர்லீன்கள்
ஏணிப் படியேறி யிலங்குமிகு றூஜில்நபி
தானேனிடம் பேசவவன் தாலாட்டுங் கண்மணியே
எட்டுச் சுவர்க்கத் திலங்குமது கிந்திலாய்ப்
பட்டு முடுத்திப் பாரிலுதித்த கண்ணே
மட்டி லடங்காத வானோர்கள் போற்றி செய்ய
அட்டத் திசைமீதி லனைவர்க்கு மேலொலியே.

## தொங்கல்

தாலாட்டருள வேகைத்தாயாருந் தனியோன் முஹ்யித்தீன் துயின்றெழுந்தார்
ஆலமுஹம்மது நபிபோரை அருமையுடனேதான் மருகில்வைத்தே
காலைமீதினில் முஹ்யித்தீனைக் கைத்தா யிடுக்கியே வரும்போதிலே
மேலே கதிரவ னுதயமாக விளையாடப் பிடித்துத் தாவென்றுர். (34)

என்னுங் குதுபொலி நாயகமே யென்னல் முடியாதென் றவருமோத
தன்னல் முஹ்யித்தீன் மருங்கைவிட்டுத் தனியே பாந்தேகும் சமயத்திலே
முன்னுற் கதிரவ னெதிரிலாகி முதலோ னருளினுல் வலஞ்சுற்றியே
மின்னு மலர்ப்பாதந் தன்னைப்போற்றி வியக்கந்தான் செய்தான் கதிரவனே. (35)

ஈது படிநிற்கக் கைத்தாய்தானு மிறையோன் குதுபையுங் காணுததால்
மாதா யிடம்வந்து வாலாறேத மனதுகலங்கியே தந்தை தாயார்
ஏதுநாம் செய்வோ மிறையவனே யெங்கள் ரகுமானே யாகுதாயே
சோதி பெரியோனே துயிலுணில்லாத் துய்ய பாாபாச் சுடர்மணியே. (36)

## பதம்

அறுபதாண்டிலும் செல்வரில்லாமல் நாம் ஆதியைப் புகழ்ந்து
தினமுகந்து முனங்கள்நொந்து மகனேயிறை யாதியே யாதியே
அருள் புரிந்தாய் கனியே.

என்னசெய்குவோ மூங்களின் தாய்தந்தை யிருதயக்கனியே
நவமணியே தவமிருந்தகுதுபே நாங்கள் எங்கே தான் எங்கேதா
னுமைத்தேடுவோ மகனே.

கத்தாவாயிறை சித்தங்களானதும் காரணமிஃதோ மதியறிவோம்
குதுபொலியேமகனே யென்னகாலமோ அறிகிலேமே
கனியே.

்க்தம்வாசங்கமழ்நபிபோரைக் காணக்கடலைமறைநேசரின்
துரைராஜரை யொலியே இப்போகாணவே கிருபை
செய்வாய் றகுமானே.

## தொங்கல்

இந்தவிசனமா யிருபேர்களு மிடைந்துமனம்வாடி யழுகும்போது
வந்துமனைமீதில் முஹ்யித்தீனு மதிபோலிருக்கவு மவர்கள்கண்டே
தந்தை தாயாருமுத்தியிட்டுச் சங்கையாகவே மிகவும்போற்றி
அந்தமிலியவன் குதறத்தென்று மவர்கள்மனத்தெண்ணியிருக்கு நாளில். (37)

வானின்மதிபோலே பூவிமீதினில் வளர்ந்து முஹ்யித்தீ னப்துல்காதிற்
நானிலத்தனில் வயதுமூன்றில் நாதர்கிலு றுநபிச முகம்வந்தே
கோனின்பாத்தி மாமகனார்க்கங்கே குர்ஆனுமோதியே கொடுத்துவந்தார்
தேனினமுதவாய் திறந்தோதியே செல்வரிருந்தங்கே வளருநாளில். (38)

## முஹ்யித்தீ னப்துல்காதிறவர்கள் பகுதாதுக்குப்போய்ச் ஷெய்கு ஹம்மா தவர்களிடத்தில் குர்ஆனோதிய காரணம்

## தொங்கல்

அஞ்சுவயதானபோதினிலே அருமைமிகவான அப்துல்காதிர்
தஞ்சமுடையவன் தனைத்தொழுது சங்கையாகவே யிருக்குநேர
மிஞ்சுபுகழான ஆதிநாயன் விளப்பந்தான் செய்தான் குதுபைநோக்கிக்
கஞ்சமலர்த்தடபகுதாதிற்போய் ஹம்மாதொலிபாலிலோதுமென்றே. (39)

ஆதிபெரியவனுரையைக்கேட்டே யண்ணல் முஹ்யித்தீனப்துல்காதிற்
மாதாபிதாவின்பால் குதுபுநாதர் வழுத்தினாப்போதிதுசேதியை
நீதரிருவருமனமகிழ்ந்து நேர்மையாகவுமுறைசெய்குவா
ரேதுகாரியமனமுற்றாலு மியம்பாதேபொய்க ளெமதுகண்ணே. (40)

தீர்கநிசமொன்று பகுதாதிற்போய்ச் செல்வரேயோதிவாருமென்று
நாற்பதுதங்கக் காசெடுத்து நல்லமகனார் தம்செலவுக்காகக்
கூற்பாயொருதுயிற்றினில் முடிந்து குதுபுசோலியாத் தனிலேவைத்து
மார்கர்தவறாத வெங்கனியே பகுதாதினிலோதும் செலவுக்கென்றார். (41)

மல்லிகைவாசர் முஹ்யித்தீனு மாதாகொடுத்திடும் சோலியாவை
நல்லோர் காத்தினால் தனைவாங்கி நாதர்தந்தோளில் மிகவும்போட்டே
யெல்லாபேருக்கும் பயணஞ்சொல்லி யெழுந்தார் யாபாரி தங்களோடு
வல்லோன் கிருபையால் பகுதாதுக்கே வர்த்தகாளுடனேகும்போதில். (42)

காடுவனங்களும் சோலைகளும் கடுகிடந்திடும் நேரத்திலே
பரடியூர்வந்தே யெதிராகவும் பாங்காயதிலிருந்தேகும்போது
நாடும்யாபாரி நாற்பதாளும் நல்லோரொட்டகமிருநூறுடன்
கோடும்பூஞ்சோலைக்காவும் நீங்கிக் குதுபுமவர்களும் வருகுநேரம், (43)

சுற்றி வளைந்தார்கள் களவாளிகள் சுயமதாகிய முசிலிம்களாம்
கத்தியதனாலும் கிறிசினாலும் கடினமா யோங்க வெழுபது பேர்
வித்தியாசமா யவர்கள் பேசி விரட்டி யடிக்கவே யெடுத்தா ரோட்டம்
முத்துமணிபோலே முஹ்யித்தீனு முக முந்துலங்கியே நிற்கும்போதில். (44)

தொறுக்கள் தனிலுள்ள துயிலானதிற் சுமக்கும் பாரங்கள் தானெடுத்து
பெருக்க மாகிய களவாளிகள் பெயர்ந்து வழிகூடும் சமயத்திலே
திருக்கணுடையவன் குதுபொலியைத் திருடர் தான் கண்டங்குரை செய்வார்க
ளிரவு காலத்தின் மதிபோலவே யிளங்கும் பாலரே நீர்யாரென்றார் (45)

மேலோன்முஹ்யித் தீனிதனைக்கேட்டு விளம்புவாரப்போ தமூர்தவனையால்
ஆலமுஹம்மதுநபிதம்போ ரண்ணல்முஹ்யித்தீ னெனதுநாமம்
வாலாயம தாகவழி நடந்து பகுதாதேகிறேன் யானென்றோதச்
சோலியாவினி லிருக்குமான சொத்தென்னவென்றார் கள்வாளிகள். (46)

அந்த மொழிகேட்டு முஹ்யித்தீனு மருமையாகவே யுரைசெய்தன்
செந்தன் சோலியாமிப் பையிலேதா னிருத்தல்நாற்பது தங்கக்காசு
சொந்தமாய் நீங்களெடுத்தே கொள்ளும் சோரரேயென்று முன்னேவைத்தார்
வந்ததிருடர்கள் மனமிரங்கி வழுத்துவாரப்போ துரிமையாக. (47)

நல்லோர் குழந்தாய் நீருண்மைசொன்னீர் நமக்கு மிக்கவேண்டா முமதுக்காசு
எல்லாபுறக்கத் தும்பெற்றகோவே யிரஸூல்முஹம்மது பேரனாரே
வல்லோனருள்பெற்ற தயாபரரே பகுதாதுக்கு நீர்போகுமென்றே
உல்லாசமதாகத் திருடரேக வுரைப்பார் முஹ்யித்தீனப்துல்காதிர். (48)

அந்தவிர வினிலவர்களைப்பார்த் தருளுவாரெங்கள் குதுபொலியும்
வந்து திருடிய முஸ்லிம்களே மார்க்கமறியாமற் களவுசெய்தே
யெந்தநா ளினுமிதுதொழிலா யிருப்பது மக்கழகல்லவே
இந்தத்தொழில்தனை மறந்துநீங்க ளிஸ்லாந்தனைப்பேணிக் கொள்வீரென்றார் (49)

சங்கையாகிய குதுபுசொன்ன சாரமறிந்துதான் திருடர்சொன்னார்
எங்கள் தொழில்விட்டாற் சிறுபாலரே யெப்படி நாங்கள் பிழைப்போமென்று
திங்கள்வதனத்தார் கோபமானார் திருடரவர்கள் கண்தெரிந்திடாம
லெங்கள் முஹ்யித்தீனாண்டகையே யென்னசெய்வோமென் றழுதுசொல்வார். ()

### பதம்

வந்த காலமோ கானகத்தில் மயங்கலானோமே
எங்கள் வாசபோசரே.

விந்தைசேர் வயல்சூழ்பகுதாதையில் வந்தமாதவா அருள்தந்த சீதகா
சொந்தமான அடிமைகண்களுந் துலங்கச்செய்வீர் யெங்கள் கலக்கந்தீரவே.
எங்களொளியே தங்கமேருவே என்னசெய்வோம் நாங்களிந்தகோத்தில்
சங்கைபொருந்தும் காரணரென்றுந் தானறியேமேயிந்தத் தாலமீதிலே.
எத்தலத்திலும் நற்றவங்களை யேய்ந்துமாதவாசுரர் தாங்கும்நீதவா
பத்தினிபெற்ற பாலரேயுங்கள் பாதம்பணிகிறோம் முகம்பார்த்தருள்வீரே.

### தொங்கல்

எங்கள் முஹ்யித்தீனாண்டகையே யேழைக்குடி நாங்கள் நாயகமே
தங்கள் பதங்களைக் கண்டபோது தனித்தகளவை மறந்தோம் நாங்கள்
சிங்கக்குட்டி நிந்தயவென்றோதச் செல்வரிறையோன்பால் துவாவிரந்தார்
சங்கையாய்ச்சொல்லுந் திருடர்க்கெல்லாம் தாலந்தனிலேதான் கண்தெரிந்தே. ()

வந்து சகலோரும் பாதம்போற்றி வாணிபத்தோரை யருகழைத்தே
இந்தினெழிலான துயிலையெல்லா மெடுத்தவிதம்போலே தொறுவிலேற்றி
யெந்த நாளினுமிது தொழிலை யாங்கள் மறந்திட்டோம் முஹ்யித்தீனே
அந்தமிலியவன் கிருபையாலே அனைவோர்பயண மேகுமென்றார். (52)

நல்லோர் யாவிருங்குதுபைப்போற்றி நடந்துபகுதாதூர் தன்னில்வந்தே
வல்லோன் முஹ்யித்தீனுண்டகையை வர்த்தகரெல்லாமுவந்து வாழ்த்தி
யெல்லாம்பிறக்கத் துலங்குமான யெழிலின்மாளிகை தனிலேவைத்து
மல்லமலர் வாசக்கதத்தைப்போற்றி வர்த்தகரெல்லாம் சேர்பிற்சார்ந்தார். (53)

ஈதிப்படிநிற்க அபுசாலிகு மிளங்கும் பாத்திமாதாமுமாக
நாதர்முஹ்யித்தீன் தம்மைத்தேடி நலமார் பகுதாது தன்னில்வந்தே
நீதமகனார்பால் வந்துமாதா நேர்மையாகவே மிகவும்போற்றி
யோதும்ஹம்மாது ஷேகிடமென் றுரைத்தாமுதவாய் தனைத்திறந்தே. (54)

அன்னகாலையில் குதுபொலியு மாதியருளாலே மிகருபேகித்
தன்னால்ஹம்மாது ஷேகிடத்திற் சங்கையாகவுந் தீனோதினார்
என்னுமிறையவன் கிருபையாலே யெழுபதுபாலரோது நாளி
லின்னிலமீதில் முஹ்யித்தீனி ளிளங்குகாரணச்சரிதை சொல்வாம். (55)

## ஹம்மாது ஷேகிடத்தில் முஹ்யித்தீ னப்துல்காதிறவர்கள் ஓதி வருகையில் நடந்த காரணம்

### தொங்கல்

கத்தா பெரியவன் கிருபையாலே ஹம்மாது ஷேகு தங்கள்பாலிற்
சுத்தம் பொருந்திய முஹ்யித்தீனுந் துலக்கமா யோதி வருநாளிலே
சித்திர வடிவான வொருமடவாள் சிறந்த சாகிபு பாலில்வந்தே
பத்தியுட னின்று சலாமுரைத்து பகருவா ளப்போ திளமயிலாள். (56)

### பதம்

ஆலமீதினி லென்துயர் தன்னை ஆண்டவன் அறிவான் ஜெகத்தினிலே
மிகத்தெளிவே சாகிபே திரு ஆதியினிடங்கேட் பீர்தவமே
பூமிதன்னிலே யெனக்கோர் பாலகன் புதியவன் கொடுக்க அருள்புரிவீர்
திருவடிவே சாகிபே யெந்தன் புன்மையை யெவரறிவார் புவியில் (57)

### தொங்கல்

மாதன் கழுதிடும் வசனங் கேட்டு வடியார் ஹம்மாது ஷேகோதுவார்
கோதுபடுமுன்றன் வயிற்றுக்குட் குழந்தையில்லையே இவ்வுலகிலென்றார்
ஈது மொழிகேட்டங் கிளமாது மேங்கியழுதாளே குரலோசையாய்க்
காதிர் முஹ்யித்தீன் மனமிரங்கிக் காரிழை முகம்பார்த்துச் சொல்வார். (58)

ஆதி யருளினாலொருபாலக னருளாய்க் கொடுப்பதுண் டானதினால்
நீதி பெரியவன் தன்னைப்போற்றி நிலத்திலிருக்குமென் றோதிடவே
நாதர் ஹம்மாதுஷேகொலியு நமதுவார்த்தையைப் பிசகென்றெண்ணச்
சீதமதிமாது மனங்குளிர்ந்து சிறந்தமனையில் வந்திருக்கும் நாளில். (59)

இறையோனுதவியா லமலுண்டாகி யிலங்கமேனியுங் கதிருண்டாகித்
தரையில்மாதமும் சரியதாகச் சந்திரனதுபோலே மகனையீன்றாள்
மறையோர் யாவரும் புதுமையானார் வள்ளல்முஹ்யித்தீன் காரணத்தைக்
கருதி ஹம்மாதுஷேகொலியும் கருத்தில் விசனமா யிருக்குநாளில். (60)

## பகுதாதிலொரு மிஸ்கீனானவர் முஹ்யித்தீ னப்துல்காதி ரவர்களுக்கும் ஹம்மாது ஷேகோலியவர்களுக்கும் விருந்துசெய்த காரணம்

## தொங்கல்

அந்த நேரத்தி லொரு மிஸ்க்கீ னருமையுடன் வந்தே யுரைசெய்குவார்
சந்திர வதனத்தின் முஹ்யித்தீனும் சான்றோர் ஹம்மாது ஷேகொலியும்
வந்தே யெனதிட மனைமீதினில் வயிற்றுப்பசியாற வேணுமென்றார்
செந்தா மறைப்பாத மிருவர்களும் செப்பினா ரப்போ நல்லதென்றே (61)

நல்லோர் மிஸ்கீனு மனையில் வந்து நாட்ட மிகவானார் மனைமீதினி
லில்லாத் தன்மையா யிருக்குதிப்போ தென்ன செய்வோமென்று மவரெழுந்தே
யெல்லாக்கடையினுங் கடன்கேட்டதில் யாதாமொரு காசுமகப்படாமல்
வல்லோன் புறமென்று மதிமயங்கி வந்தார் வீதியில் மிஸ்க்கீனாரே (62)

நாட்டம் நிறைவேற வேணுமென்று நாயனிடத்திலே மிகவுமோதித்
தேட்ட மாகவுந் தெருவீதியிற் றிருடி யொருசேவற் றனையறுத்தே
காட்டமிகவான கறிசமைத்துக் காஜத் துடனவர் தானெழுந்தே
யேட்டிலடங்காத விறையவனை யெண்ணி மனந்தனில் நடந்தவரும் (63)

வந்துமிகுறுபில் குதுபைப்போற்றி வாகார் ஹம்மாது ஷெய்கைவாழ்த்தி
அந்த மிலியவன் கிருபையாலே யழைத் தவர்களை மனையில் வைத்துச்
சிந்தைபூரித்து நளபாகமாய்ச் சிறந்த வஜிபனம் பசியாறென்றார்
சந்திர னெழிலான முஹ்யித்தீனும் சாற்றுவா ரப்போ தமுதம்போலே (64)

உருத்தாய் விருந்தாக்கு மிஸ்கீனாரே யுள்ள சேதிகள் சொல்லவேணும்
அருத்தே சாவலைக் கறியாக்கினீர் ஆருட பொருளென் றெனக்கோதுவீர்
கருத்தால் விளங்கிய மிஸ்கீனாரும் கவலுவா ரப்போ தொலியின்பாலே
வருத்தமாகிய வயிற்றுவலி மயக்கத்தா லிப்புவிமீதிலே (65)

வேதனை தீரச் செகந்தனிலே வெகுநாள் மருந்துகள் தின்றுபார்த்தேன்
வாதனை தீரா மயக்கத்தாலே வைத்தேன் பிரார்த்தனை யுங்கள் பேரில்
ஏது வாகவே வலியுந்தீர்ந் திரண்டு மாதங்கள் தானாச்சுது
நீத ரிருவருக்கும் விருந்து செய்ய நிலத்தி லெனதிடம் பொருளில்லாததால் (66)

அடிசி லாக்கவே யரிசியுண்டு மதற்குத்தக்கதோர் கறியுமில்லைக்
கடனும் வெகுபேர்க ளிடத்திற்கேட்டேன் கையிலொரு காசுந்தருவாரில்லை
பிடித்தேன்வீதியி லொருசாவலைப் பெரியோன் கொடுத்தானென் றதையறுத்தே
படைத்தோ னுதவியார் கறிசோறாக்கிப் பாங்காயுங்களை யழைத்தேனென்றார்.

அங்கே ரந்தனிற் காவற்கார னனேக துப்பினு லறிந்தவனும்
தன்னால் மிஸ்கீனின் மனையில்வந்து தாரும் சாவலென் றவனிழுத்தான்
தன்னும் பெரியவன் கிருபைதங்கி யிலங்கு முஹ்யித்தீ னப்துல்காதிர்
தங்கள் பாதத்தின் குறட்டினாலே சமைத்த இறைச்சியி லடித்தேசொல்வார் (68)

அறபி யவர்சாவ வித்ருவென்று ரப்போ தெழுந்தே கூச்சலோடும்
சூரர்கள் பதிராஜ ரிவரேயென்று சொன்னு னரபுங் கலிமாத்தன்னை
சரிசை யர்கவே யடிசிலுண்டு வாகா யவர் மனைகள் சேர்ந்தார்
அரபி சேவலைக் கரத்திலேகியே மகிழ்ந்திருந்தாரே. (69)

## இறந்தமடமா னுயிர்பெற்ற காரணம்

### தொங்கல்

ஈது படிநிற்க முஹ்யித்தீனு மிலங்கும் ஹம்மாது ஷேகொலியும்
நீதம் பொருந்திய மிசுருபிடைய நேர்மையா யோதி யிருக்குகாளிற்
சிதம் பொருந்திய சோலைசூழும் சிறந்த பகுதாதி லொருமடவாள்
பாத காணிக்கை முன்னால் வைத்தே பகர்வாள் சாஹிபு வதனநோக்கி (70)

### பதம்

மண்ணிலங் தனிலே யொருமைந்த னில்லாதால் எண்ணந்தானுகி யென்
கணவரேசுகிறார் கண்ணீரும்யான் விடுகிறேன் மிகுகாரண வொலியே
காரணீகரே பூரணமதிபாரின் மீதிலே பாவையால்விதி பார்த்தருள்
புலவீர் மலர் பங்கயக்கதிரே. (71)

வாச பொற்பதமே யுங்கள் மலரடி பணிந்தேன் காஜத்தின்படியே
ஆதிஹக்கவனிடத்தில் தேசரே கேட்டு மதி நிகழ்த்துவீ ரொலியே
நிகழ்த்தும் வாசரே ஜெகத்தின் மீதிலே மகத்துவ முள்ள
வசனநாதரே மனுடர் விசனமிந்த நானிலந்தனிலே. (72)

### தொங்கல்

எங்கள் தனக்கெல்லாந் தங்கமேரே யேகனருள்பெற்ற தயாபரரே
சங்கை பொருந்திய வொருபாலகன் தந்தாலதுபோது நவமணியே
செங்கை யேந்தியே துவாவிரந்து சிறந்த வசனங்களோதமட்டுந்
தங்குந் தலம்விட்டங் கேகமாட்டேன் சாஹிபே யென்று கண்ணீர்விட்டாள் (73)

பாதங் கழுகிற வாறுதன்னை வல்லோன் குதறத்தா லறிந்து சொல்வா
ரேது காரண மோதினுலு மிளமா னுனக்காகப் பாலரில்லைப்
பூத லந்தனி லுனக்குநாயன் போட்ட விதிகளும் சரியாகிட
வீத மொருவரு மிருக்கிறதால் விளங்கு மனையிற்போய்ச் சேருமென்றார். (74)

சோலை மயிலாளுமிதனைக்கேட்டுத் துடித்துத் தரைவிழுந் துரைக்கலுற்றாள்
பாலர் தவங்கேட்டு வருமிடத்திற் பாவி முடிவதோ யாரஹீமே

கால விதியினால் யாதும்வக்தேன் ஹம்மாது ஷேகு மிகநீதரே
ஆலந் தனிலேதா னனிருக்க ஆயுளை வாங்கித் தாருமென்றாள். (75)

ஹம்மாது ஷேகவ் வொலியுங்கேட்டுக்கவலுவா ரப்போ மடமானுக்குச்
சும்மா அழுகாதே தோகையாளே துய்யோ னெழுத்தினை மாற்றிக்கேட்க
தம்மால் முடியாது மயிலேயென்றார் நவிலுவாள் மாதுங் கண்ணீரோடே
வெம்மாத்திரம் பேர்கள்தான் சொன்னாலும் மித்தலம்விட்டும் போகமாட்டேன்()

அந்தமிலியிடந் துவாக்கேட்டுத்தா னருளும் சாஹிபே யென்றழுதாள்
இந்த விதமாக ஹம்மாதிடம் இயம்பும் போதங்கே சீஷாகி
சந்திர வதனத்தின் தயாபாராயச் சங்கையாய் வந்த முஹ்யித்தீனும்
சிந்தை தனிலவர் தயவுண்டாகிச் செப்புவாரப்போ மாதுபாலில் (77)

தந்தை தாரையர் ழுமாதே தழும்பனீ வேண்டாம் புவிமீதினி
லுந்தன் வசனம்போ லொருபாலக னுடையோன் தருவது நீசமாமென்றார்
வந்த காரணம் பெற்றேமென்று மாதே யழுகாமல் நீயேகென்றார்
சந்தேக நீங்கி மடமயிலால் சார்ந்து மனைமீதி லிருக்கு நாளில் (78)

ஹம்மாது ஷேகு மனந்தனிலே காதிர் முஹ்யித்தீன் தனை நினைந்தே
இம்மாத்திரம் பிள்ளை நம்மிடத்தி லிருந்து குருவேதுஞ் சங்கத்திலே
நம்மாற் சொல்கிற வசனங்களை நவின்றார் மாற்றங்கள் புவிமீதினில்
எம்மாத்திரங் கொண்ட ஒலியானாலு மிறையின் விதிமாற்ற வொருவருண்டோ ()

ஆதி பெரியவன் பண்பதனை யறிவோ மெனவெண்ணி யிருக்கும்போதில்
நீதர் ஹம்மாது ஷேகொலியு நிகழ்த்தும்படியான வசனம்போலே
மாது மௌத்தான வொருவாரத்தில் வந்த பெண்களும் குளிப்பாட்டியே
சீதமதிபோன்ற துயிலினாலே சிறந்த கபனிட்டு முடிந்தபின்னர் (80)

திருக்கண்ணுடையவன் சஹாதத்தோதிச்சிறந்த சந்தூக்கிலவர்கள் வைத்து
பெருக்கமாகவந்த தீனோரெல்லாம் பெரியோன் தனைப்போற்றி யெடுத்தேகியே
மருக்கொள் விரைமலர்ச் சந்தூக்கையும் வாகாயிறக்கியே தொழுதபின்னர்.
அருக்க னெழில்மேனி பிரகாசிக்க அண்ணல் முஹ்யித்தீ னவிடம் வந்தார் (81)

வந்தேசந் தூக்கைத் திறந்து நாதர் மய்யத்தனை நோக்கி யுரைசெய்குவார்
சிந்தை யுவந்துசேய் கேட்டமாதே செப்பு முன்னது நாமமென்றார்
அந்தநோத்தில் மய்யித்தான அன்ன நடைமாது மறியமென்றாள்
உந்தன் மனம்போலேயோராண்பெற்றே யுலகிலன் பதிக்கிருபேர்வென்றார் (82)

மாதுமுயிராகி மனையிலேக பகுதா துள்ளளோர்கள் புதுமையானார்
நாதர் முஹ்யித்தீ னப்துல்காதிர் நங்கை யெழுப்பிய காரணத்தை
நீதர் யாவரு மனம்பூரித்து நிகழ்த்துவா ரப்போ மகிழ்சியாகிப்
பூதலந்தனி லொலிமார்க்கெல்லாம் புதியோன் குது பொலி மேலென்றால் (83)

## வியாபாரிக்கு வாக்குகொடுத்த காரணம்

அந்த காலையில் முஹ்யித்தீனு மழகார் ஹம்மாது ஷேகொலியு
மென்று மிறையவன் கிருபையாலே யிலங்கு மிகருபி விருந்தேகையிற்
றன்னால் பகுதாதி லொருவர்த்தகர் சடிலங் தொறுகளிற் றுகிலுமேற்றி
இந்நாள் நல்வாக்கு கொடுங்களென்றே யிலங்கு மொலிகள்பாற் கேட்டபோதில்

அந்த நேரத்தில் ஹம்மாதுஷே கருளுவா ரப்போ வியாபாரிகட்
கிந்த யாத்திரை போகுவீரோ யெல்லாப் பொருள்களும் பறிகொடுத்து
வந்து சேருவீர் ஹயாத்தினேடே வர்த்த காளென்று ரெழுத்தும்போதிற்
றந்தாரை பதாகதி கண்ணீரோடத் தஸ்தக்கீரிடங் கேட்டாரப்போ. (85)

திங்கள் வதனத்தினபுசாலிகு செல்வர் முஹ்யித்தீ னப்துல்காதிர்
சங்கையாகவே வியாபாரிக்குச் சாறறுவாரப்போ தமுதம்போலே
தங்கா தெழுந்துதீர் சாமூரேகும் துகில்கள் தானயெல்லா நன்றாய் விற்றே
யுங்கள் தொறுவுடன் பொருளுங் கொண்டேயுடையோன் கிருபையால்
வருவீரென்றார். (86)

நலமா யிதுவார்த்தை கேட்டபோது நல்லோர் மனது மிகப்பூரித்துக்
கலையின் சடிலங்கள் தொறுக்களுடன் கடுகி நடந்தாரே பாதைமீதில்
மலையின் காடுகள் சோலைகளும் வாகா யேகியெ பதினேழாம்நாள்
விலைக ளுடன்விற்கும் துகில் பென்னுடை விளங்கும் சாமூரு தானேகினர். (87)

துகில்கள் தனையெல்லாம் விலைக்குவிற்றே துலங்கும் பொருளொடு தொறுவு
வயலின் வாவிகள் சோலைநீங்கி வந்தார் பகுதாதுக் கடுத்தபாலிற் [டனே
ஜெயமாய் வருகின்ற வர்த்தகாளும் சிலபோவருடன் தானிரங்கிச்
சுயத்தின் பொருளொடு தொறுவுடனே சோலை மீதினிற் றுயிலும்போதில் (88)

கண்டார் கனவது வர்த்தகாளும் களவாளிகள் வந்தங் கவரைச் சுற்றிச்
சண்டையாகவே வியாபாரியை தனித்தே யொடிக்கவும் பயமாகவும்
கொண்ட நித்திரை தனையும் போக்கிக் குதுபே அமானமென் றெழுந்து
மண்டலந்தனிற் றிருடர்களை வனத்திற் காணுத படியினலே. [பார்த்தார்

அந்த நேரமே தானெழுந்தார் அசதியாகவே பொருளை வைத்தே
வுந்தூர் தொறுவுடன் பகுதாதினில் வாகார் பணப்பையைக் காணுமலே
சிந்தை கலங்கியே திரும்பிவந்து சிறந்த பொருள்களு மெடுத்தேகினர்
கந்த ரங்களும் தொறுக்களையும் கட்டிப்பொருள்களை யெடுத்தேகினர். (90)

ஹக்க னருளாலே மனையில் வைத்துக் காலைதனிலேதான் பசியுமாறி
மிக்கப் புகழர்க வொருதட்டிலே விளங்கு அஷறபி நூறுவைத்தே
தக்க பெரியவன் கிருபையாலே கங்கையாய் வந்து மிகுருபினில்
ஹக்கன் கிருபையால் வந்தேனென்று ஹம்மாது ஷேகுபாலோதியே (91)

நாதர் தமக்குமே சலாமுஞ் சொல்லி நலமுடன் வைத்தார் காணிக்கையை
நீதர் ஹம்மாது ஷேகுரைப்பார் நேர்மையுடன் சொன்னா ரப்துல்காதிர்
பாதகாணிக்கை யவர்க்கே யல்லாற் பகரா தீரென்று மவர்பாற்சொல்லிப்
போதா வுடனெடுத் தேவைத்தார் புகழ்சேர் முஹ்யித்தீ னவர்கள் முன்பில். ()

நல்லோர் காணிக்கை தன்னைக்கண்டு நாதர் முஹ்யித்தீ னப்துல்காதிர்
வல்லோ னருளென்று வெளியார்கட்கு வழங்கினாரப்போ காசையெல்லாம்
மல்லிகையின் வாசர் மனக்கண்ணோக்க வர்த்தகாளுமே மகிழ்சியாகி
யெல்லா பறக்கத்துக்குந் குத்துபுக்கென்றே யெண்ணி வியாபாரி மனைகள்போனார்.

கத்தோ னருளால் குதுபொலிதங் காரணங்களுந் துலங்குநாளில்
மெத்த முனதிலே வருத்தமுற்று விசன மானாரே ஹம்மாதுஷேக்
உத்த வசனத்துங் கிடமுமில்லை யுடையோன் குதாத்தா யிருக்குதிப்போ
சித்த மானதை யறிவோமென்று சிறந்த பகுதாதி லிருக்கு நாளில் (94)

## முஹயித்தீனப்துல் காதிரவர்களை ஹம்மாது ஷேகோலி நதியிற் றள்ளிய காரணம்

வெள்ளிக்கிழமையாம் நாளதனில் விளங்கும் ஹம்மாது ஷேகொலியும்
பள்ளி தனிலிருந் தோதுமான பாலரெழுபது பேர்களுடன்
தெள்ளுமலர்கத் முஹ்யித்தீனுஞ் சிறந்த பகுதாது நதிக்கரையி
லுள்ள கந்தனி லிறையைப் போற்றி யுலுக்கொண்டிருக்கிற சமையத்திலே. ()

ஹம்மா தென்னுஷே கொலியுஞ்சொல்வார் காதிர் முஹ்யித்தீனாண்டகையே
ஜும்மா முழுக்குத்தான் முழுகுமென்றே சிறந்த காத்தினால் நதியிற்றள்ள
ஹம்மாதுகாம் சூகையாக ஹக்கு பெரியவன் செய்தானப்போ
திம்மாத்திரங்களு முரிமையானவிறையோன் குதுபென்னுமறியேனென்றார்.

நதியில் முஹ்யித்தீ னவர்கள் வீழ்க நாயன் குதாத்தா லிதற்கு முன்னே
பதிவாய் பனிரண்டு வருஷகாலம் பாதமரைத்தாங்க விருந்தமச்சந்
தெரியா முதலையு மோடிவந்தே கிருபை கடலுட்பாதந் தாங்கியே
மதியினழகான குதுபொலியை வாகாய் கரைசேர்த்து மச்சமேக (97)

அந்த நேரமே குதுபெழுந்தே யழகாய் நடந்துதான் மிகளுபேசி
வந்து ஹம்மாது ஷேகிடத்தில் வல்லோன் முஹ்யித்தீன் சலாமுஞ் சொன்னார்
சந்தாபம் நீங்கிப் பிரத்திகூறிச் சாஹிபு ஹம்மாது ஷேகொலியு
மென்தன் பிழைகளைப் பொருப்பாயாக என்றே மிகுராபி லிருந்துசொல்வார். ()

### பதம்

ஆதியவனது நீதரென்பது நீதரென்றும் யானறியேன் யாறஹீமே
ஏது பிழை நீ பொறுத்து பொருந்தே
ஆலநபி போரென்றும் யானறியேன் தஸ்தஹீரே
காலவிதி யானதினால் ஆனதினாற் காமீதிலும் சூகையாச்சே. (99)

## தொங்கல்

எல்லா வொலிமார்க்கு மேலொலியே யெங்கள் முஹையத்தீனப்துல்காதிர்
வல்லோ னருள்பெற்ற மணிவிளக்கே மனதி லாயாசம் நினைக்கவேண்டாம்
அல்லா அருள்பெற்ற தய்ாபரே அருமைதானுள்ள நவ்மணியே
நல்லோர் முஹம்மது போனரே காதரே யிமாம் செய்மினென்றார். (100)

ச்சுமொழிகேட்டு முஹ்யித்தீனு மிறையோன் கிருபையால் பகுதாதினில்
கர்தரியம் செய்தார் மிகுருபினில் நாயனது வானோர் மிகவும்போற்ற
ஆதி யருளாலே சகலோர்களு மருமை யாகவே தொழுதபின்னர்
சோதி முஹ்யித்தீன் பாதம்போற்றித் துலங்குமவரவர் சார்பிர்சார்ந்தார். (101)

படைத்த பெரியவன் கிருபையாலே பாரில் ஹம்மாது ஷேகொலியும்
கிடைத்த விதிகளும் சரியாகியே கிருபை முஹம்மது கலீமாவோடும்
கடைசியு வானத்தின் பதவி சேர்ந்தார் காரணமுள்ள சாஹிபுகளும்
தொடையல் மார்பினர் தனையடக்கச் சூழ்ந்தார் வரிபோல் தீனோர்களே. (102)

பன்னீர் மஞ்சனந் தானூட்டியே பாங்காய்க் கபனிட்டு மணந்திமிர்ந்து
மின்னும்படியான சந்தூக்கென விளங்கு மாசனம் வைத்தெல்லோரும்
என்னும் பெரியவன் கிருபையாலே யெடுத்தங் கேகியே யிறக்கியோர்பாற்
றன்னால் யாவரும் முலுவுடனே சார்ந்தே யணியாக தீனோர்நிற்க. (103)

சுவனத் தமரோர்களுவந்து போற்றுந்துய்யோன் முஹ்யித்தீனப்துல்காதிர்
மௌனத்துடையோனை மிகவும்நாடி வள்ளல் தொழுதுவித்து முடிந்தபின்னர்
புவனமீதுள்ள பகுதாதினிற் பெரியோன் கிருபையா லடக்கஞ்செய்து
கவனமாய் வந்தே சகலோர்களும் ஹக்கனுதவியாற் சடங்குஞ்செய்தார். (104)

ஆதியருளாலே முகையத்தீனை யாருமிகப்போற்றி யிருக்கு நாளில்
நீதர் பகுதாது மிகுருபினில் நேர்மையாகவே தானிருந்து
சோதி பெரியவ னுதவியாலே துலங்கத்தான் செய்தார் தீன்மார்க்கத்தை
வேதியர்களு மிகவுஞ்சூழ விளங்கு மதிபோலே மகிழ்ந்திருந்தார். (105)

### ஹம்மாது ஷேகோலி கரச்சூகையை நலமாக்கிய காரணம்

வெள்ளிக்கிழமையின் குத்துபாவில் விளங்குந்தீனோர்கள் மிகவுஞ்சூழ
பள்ளிக் கருகாமை கபுருளிக்கே பாத்திஹா வோத முஹ்யித்தீனும்
வள்ளல் தாமோதும் வரிசையாலே வந்த பெயரெல்லாம் ஆமீன்கூற
வுள்ளபடியான லொகரில்நின் றெழுங்கா யசர்மட்டும் தானோதினர். (106)

ஆமீன் கூறிடு மாலீம்களு மனைவாகிய முஸ்லிம்களும்
தர்மசத்துட னின்றசேதி தாக்கல் தனைக்கேட்டார் முஹ்யித்தீன்பால்
மூமின்கள்போற் நபிதம்போர் முதலோன் குதறத்தா லுரைசெய்வாரே
காமிலீன் வாழ்த்தும் ஹம்மாதொலி கருத்தா யெனக்கோதிகொடுக்குநாளில். ()

திரைபோல் நதியிடம் வருகையிலே ஜும்மாமுழுகென்றேயெனைத்தள்ளினர்
இறையோனவரதின் காமானதை யிதமாய்ச் சூகையாய்ச் செய்தானப்போ
மறையோர் கவனத்தி லிருக்கும்போது வடிவு குறைவாக யானுங்கண்டே
காச்சூகையை மாற்ற விதுவரையில் ஹக்கனிடங்கேட்கச் சரியாக்கினன் (108)

ஈதுமொழியோதச் சகல்பேரு மிறையோன் குதறத்தென் றவர்களோக
நாதர் ஹம்மாது ஷேகொலியு நவின்றா ரிதுபோலே கனவானதில்
நீதர் முஹையத்தீ ஞண்டகையை நேர்மையுடன் பாத மிகவும்போற்றிப்
பூதலத்துயர் பகுதாதினிற் புகழ்சியாய் வைத்தேயிருக்குநாளில் (109)

## அல்லாஹுத் தஆலாவுடைய குதறத்தாலே குதுபோலி யவர்களுக்குப் பனிரண்டு விருதுகளிறங்கிய காரணம்

### தொங்கல்

அந்தமில் ஹக்கன் குதறத்தாலெ யவனி தனிலேதா னிறங்கியது
சந்திர னெழிலான சோலியாவும் சக்கரத்துடன் மயில்விசிறி
கந்த ரத்துருக் கோடாலியும் கதிரின் சோட்டாவும் வில்லுநானும்
மந்தாக்கதிர் முசல்லாவுடன் மணியின் கம்பளிக் கயிறுக்காகவும். (110)

ஆசாவுடன்பாதக் குறடானது மழகு பொருந்திய வரியின்தோலும்
காஜத் தாகவே தானனுப்பி ஹக்கு பெரியவ னுரைசெய்குவான்
நேசர் முஹையத்தீ னப்துல்காதிர் நிகழ்த்தும் படியான வேலைகேட்க
வாசர் தமக்காகத் தொடுத்தேனென்றும் வல்ல பெரிய னுரைசெய்தானே. (111)

வந்த விருதுகள் பனிரண்டுமே வள்ளல் முஹ்யித்தீன் சமுகம்வைத்தே
யெந்த நாளுமே யிறையைப்போற்றி யிலங்கும் பகுதாதி லிருக்கும்போதில்
சந்த்ர வதனத்தி னப்துல்லாவும் சார்ந்த குணமுள்ள வுமரென்போரும்
இந்தி னெழிலான குதுபுபாலி லிருந்து வணங்கியே வருமந்நேரம். (112)

## முஹ்யித்தீனு மப்துல்லாவு முமறும் மலையின் குகையிலிருந்து வணக்கஞ்செய்த காரணம்

### தொங்கல்

நேசாகிய தோழர்களில் நீதரப்துல்லா வுமரென்போரும்
வாசர் முஹ்யித்தீ ஞண்டகையும் வனத்திலிருக்கின்ற மலைச்சார்புற்று
போர் மூவரு மொரு குகையிற் புதியோ னருளாலே தானிருந்து
காஜத் தாகவே யிறையை நாடிக் கருதி வணக்கமுஞ் செய்தாரப்போ. (113)

வணங்கும் நேரத்தி லொருசகுபி வழிமா டறியவே மனதிலெண்ணிக்
கனமும் பொருந்திய சருகானதிற் காணு தொகுத்தவர் நிற்கும்போது
மன்முந்துலங்கிய வுமரைப்பார்த்து மன்னரப்துல்லா கேட்கலானர்
உமது ஞானத்தின் கண்ணாற்பார்க்க வுலக மெவளவா யிருக்குதென்றே. (114)

உமருதான் சொல்வார் யானும்பார்க்க உலக மொருபாயற் றடுக்கென்றேதிற்
தமதுகண் பார்க்க வெவளவென்றார் தாலந் தலகாணி போலென்றால்
நமதிங்கிருவர்க்கு மிஃதேயானு நாதர் முஹ்யித்தீனைக்கேட்போமென்றும்
நமரி லிருந்தவ ரிருவர்களுங் களறுவா ரப்போ குதுபுபாலில் (115)

அண்ணல் முஹ்யித்தீ னப்துல்காதி றருமைதா னுள்ள மருகமலரே
விண்ணோர் வானமும் பூமியேழும் விளக்க மெவளவாய்த்தோணுதென்றார்
கண்ணின் மணியாகப் புவியில் வந்த காரணர் சொல்வா ரமுதம் போல்
மண்ணில மேழும் வானமேழும் வல்லோ னறுஷோடு குர்சுகலம் (116)

எல்லாம் மென்னதுகண்ணிற் பார்க்க விறையோன் குத்றத்தா லொருமோதிரம்
நல்லோர் தோழரே யறிவீரென்று நாதர்தா மோதியிருக்குநேரம்
சொல்லு மூவர்கள் வசனந்தன்னைத் தூரர் தனில்நின்ற ஸகுபிகேட்டே
அல்லா பெரியவன் கிருபை யென்றங் கசுஹாபி யெண்ண நிற்கும்போதில் (117)

புவியி லறபியையும் தொறுவைத்தேடிப் பொருப்பினிடமாக வருமந்நேரம்
செவியில் சகுபியு மறையைக்கண்டு கிட்ட நெருங்கியே அறபிக்காபி
ரெவிடம் நீயெடா களவாளியே யெங்க டாதொறு வென்றுகேட்டே
கபடமாகவே சகுபியோரைக் காத்திலடித்தானே அறபிக் காபிர் (118)

அடிக்குங் கடினத்தால் சகுபியோரு மருளுவாரப்போ தவனிடத்தில்
தடித்தன முள்ள அறபியோனே சாற்றக்கே ளுன தொட்டகத்தை
மடிப்பாயவனுமே திருடவில்லை மலைக்குள் ளிருப்பவர் பிடித்தாரென்று
துடியா வுரைசெய்ய சகுபியோரைச் சொல்லுவா வென்று மடிபிடித்தான் (119)

வந்தா ரிருவரும் கெபியானதில் வாசர் மூவரு மிருக்கும்போது
எந்த னொட்டகம் பிடித்தவரை யிப்போ காண்பியென் றரபிகேட்டான்
அந்த மொழிகேட்டுச் சகுபியோரு மழகை யுடனேதா னுரைசெய்குவார்
விந்தையாகிய வுனதொட்டக மீறான் முஹ்யித்தீ னிடத்திலென்றான் (120)

ஈது மொழிகேட்டு முஹ்யித்தீனும் யானு வொட்டகம் பிடித்தேனென்று
ரோதுவா னப்போ சகுபியோனு முன்மைதானுள்ள முஹ்யித்தீனை
யேதுவாகையாலே யெனையடித்தான் யானுவொட்டகம் பிடித்தேனென்றான்
வீதந் தனைச்சொல்லும் சகுபியென்றார் விளம்புவா ரப்போ துமறுனவர். (121)

ஆலந் தலமெல்லா மொருபாயென்று மருளினாரப்போ துமறுனவர்
சீலந் தலகணி போலேயென்றும்சாற்றி னார்களே அப்துல்லாவும்
மேலோன் முஹ்யித்தீ னுங்கள்வார்த்தை விண்ணோர்லோகமும் பூமியேழும்
மாலாய் விரலணி மோதிரம்போல் வழுத்தி யதினாலே தஸ்தகீறே (122)

அந்த மோதிரத் துள்ளாகவே அறபி யொட்டக நிற்கும்போதி
லெந்தன் மேனியி லடித்தான் பாவி யேதுநான் செய்வேனென்றழுதார்
தந்திர முள்ளான் சகுபி யென்று சாற்றுவா ரப்போ தறபிக்காபிர்
வுந்தன் தொறுவது வடசருகி லொன்றியாய் நிற்கும் பிடிப்பாயென்றார் (123)

செதியா யவனோடித் தொறப் பிடித்துக் கிருபையுடையவர் சமுகம்வந்தே
மதியே முஹ்யித்தீன் வாந்தாவென்று மலரடி போற்றி அரபியோனும்
துதிகள் தான்செய்ய குதுபுபாலிற் சொல்வங் கலிமாவை அரபியென்றார்
நதிபோ லானந்தம் பெருக்கமாகி நவின்றான் கலிமாவு மனமன்புற்றே (124)

வந்த அரபியு மிசுலாமாகி வாகா யொட்டகம் பிடித்தேகினான்
சிந்தை யுவந்துதான் சகுபியோரும் சிறந்த அப்துல்லா வுமருடனே
அந்த மலிமகிழ் முஹ்யித்தீனு மழகா யெழுந்துசீ ராய்நடந்து
சந்திர னழகான மாளிகைகள் தயங்கும் பகுதாது வந்துசேர்ந்தார் (125)

ஆதி பெரியவன் கிருபையாலே யண்ணல் முஹ்யித்தீனப்துல்காதிர்
நீத முடமினை தனிலே வந்து நேர்மையாகவே யிருக்கும் நாளிற்
சீதம்பொருந்திய பகுதாதினிற் செல்வமிகுதமா யொரு வர்த்தக
ரேது வாகவும் புவிமீதினி லீமா னுடனவரிருக்கும்போதில் (126)

## திருடனோலித்தனம் பெற்ற காரணம்

### தொங்கல்

அதிபறக் கத்தும் நிதியுடமை யனேக செல்வமா யிருக்குதென்றே
பதிவா யவர்மனைக் கடுத்தவீட்டிற் பாங்கா யிருந்தானே யொருத்திருடன்
நிதியங்கள் வாங்க மனதிலெண்ணி நீடித்தகாலம் நினைத்திருந்தான்
மதியோர் யாபாரி யொருநாட்டின் மனையாள் தனக்குத்தா னுறைசெய்வாரே ()

நாமா நகரேகி வணிகரிடம் நாணயம் வாங்கி வரமட்டிலும்
ஈமானுட னேதா னிரியுமென்றே யெழுந்தங்கேகினார் நாமாவுக்கே
சீமானுரை செய்த வசனந்தன்னைத் திருட னறிந்துதான் மகிழ்ச்சியாகிக்
கோமா னுதவிகள் செய்தானென்று குயிலாள்மனைவிக்கு முறைசெய்தானே ()

எனது கண்ணாட்டி யிளமயிலே யிந்த வியாபாரி நாமாவானார்
கனதிபொருளுள் ளமனையிலேகிக்களவு யான்செய்து வாரேனென்றான்
உனது மனம்போலே திருடவ்ரய்ந்தா லொருமுத்து மாலையெனக்கியென்றாள்
மனதுபிரகாரம் தருவேன்பெண்ணே மயங்கநீவேண்டாங் குயிலேயென்றான் ()

சோர னிதுநினைக் திருக்கும்போது சோறுகறியாக்கிச் சீமான்தேவி
வாரமிஸ்கீன்கள் தமையழைத்து வாகாய் கொடுத்துண்ணும் வழக்கம்போலே
நோரய் மகபுரி நேரத்தில் நிரைந்த மயில்மாதும் தெருவில் வந்து
யாரும் வாராரோ மிஸ்கீனென்று மன்ன நடைமாதும் பார்க்கும்போதில் (130)

ஈதுபடி நிற்க மயிலன்னாளு மிகவாய் திருடனு மனையில்வந்தே
யேதுவாகவே யொளிறைபி லிருந்தான் தெரியாமற் சீமான் வீட்டில்
மாதுந் தெருவீதி நிற்கும்போதில் முஹ்யித்தீனும் வருதல்கண்டாள்
பாதந்தான் போற்றிப் பாவையாளும் பகருவாளப்போ வணக்கத்தோடும் (131)

எங்கள் தனக்கெல்லாம் தங்கமேரே யிரஸூல் முஹம்மது பேரனாரே
தங்கமயமான முஹ்யித்தீனே தாங்கள்தான் வந்து பசியாறுங்கள்
உங்கள் பர்தத்தைப் போற்றிசெய்தே னுலகந் தனிலுள்ளமயிலாலென்றாள்
திங்கள் வதனத்தா ளிதுசொல்லவே சிறந்த மனையாட்டி வந்தபோதில் (132)

இருங்களெனச்சொல்லி விருப்பில்லாத விளங்குந்துயில்களுந் தான்விரித்தே
தருவின் கனிகளும் பால் பழமு மடிசு லுடனீயப் பசியாறியே
மருவின் மலர்வாச் செழுந்தபோதில் மவுலுவா ளப்போமயிலன்னாளும்
திருக்கணுடையிவ னருள்பெற்றோங்கும் சிறந்தமுஹ்யித்தீனப்துல்காதிர் (133)

எந்தன் கண்வரும் நாமாவானா ரிரவுகாலத்திற் பயமாகுது
சொந்தமாகிய மனைமீதிலே சுன்னா அஷறபி மிகுதமுண்டும்
விந்தை மிகவுள்ள திருடர் பயமிச்ச மிருப்பதாலெந்தனுக்கே
யிந்தமனை தனிற் றுயின்றீராகி லெனக்குப் பயமில்லை குதுபேயென்றாள். (134)

ஆதிபெரியவ னருளிதென்றும் அண்ணல் முஹ்யித்தீனப்துல்காதிர்
மாது மொழிபோலே ஆசாரத்தில் வழங்கும் பவுஞ்சுமேல் துயில்விரித்து
நாதர் கூசாவும் சமுகம் வைத்தே நல்லோர் குதுபொலி துயிலும்போதில்
நீதமயிலாளும் விசனம் நீங்கி நேர்மையுடையவ னுதவியென்றே (135)

அப்போ மடமாதும் பசியதாறி ஆபரணங்களைப் பதனஞ்செய்தே
பிற்பாலிருக்கின்ற தோராறையிற் பேதையாளேகிக் கதவைச்சாற்றி
முப்பால் தப்பாலுங் கெட்டியாக்கி முகிலின் துயிலாளும் துயிலுநேரம்
தப்பாதெழுந்திடும் களவாளியும் சத்தந்தெரியாம லவனெழுந்தே. (136)

தாமாய்க் கதவையுந் தள்ளிப்பார்த்தான் தாப்பா லானது மசைந்திடாமற்
சீமானுடபொருள் புவிமீதிலே திங்கப் பிரிவில்லை நமக்கேயென்று
சாமகாலத்திற் குதுபொலிதஞ் சமுகந்தானாகித் திருடன்பார்க்கக்
கோமானருள்பெற்ற கூசாவுமே குவல யக்கதிர் போலிலங்க. (137)

எடுத்தான் கூசாவைக் கொண்டுபோக வெட்டி யடித்தாரே முஹ்யித்தீனும்
கிஅத்தாலொருசத்தமுமிறையோன் கூவித்திருடனொலித்தனம் பெற்றானென்
கிடைத்தபலனென்றே களவாளியும்கிருபைக் கடலுட பாதம்போற்றி [றான்
நடந்தா ரவருமே மனைமீதினில் நவின்றார் தேவியு மகிழ்ந்தாளப்பேரி. (I38)

### பாதகுறடு களவாளிகளை யடித்த காரணம்

அன்ன காலையில் முஹ்யித்தீனு மவர்க ளெழுந்துதான் பஜர்தொழுது
பின்னு மலர்பாதக் குறட்டிலேறி விரைசேர் மனைவந்தே யிருக்குநாளில்
முன்னால் ஜெயிலானியில் யாபாரிகள் முதலைத் தொறுவேற்றிவருகும்போதிற்
றன்னாற் களவாளி பதினொருபேர் தடபுடாவென வளையுநேரம் (139)

வந்த யாபாரி யேழுபேரும் வள்ளல் முஹ்யித்தீன் அமானமென்றார்
அந்தநாளில் குதுபறிந்தே அவசியம் பாதக் குறட்டையேவ
விந்தையாய் வந்த திருடர்களை விரட்டி யடித்தது திகைத்திடவே
சிந்தை பூரித்தே யாபாரிகள் சிறந்த குறட்டையுஞ் சிரமேல் வைத்தே. (140)

பாதை நடந்துதானேழா நாளிற் பாங்காய் பகுதாது தேசம்வந்தே
நீதர் முஹ்யித்தீன் பாதம்போற்றி நிகழ்த்தினு ரப்போ நடந்த செய்தி
நாதர் குதுபொலி காரணத்தை நகரத்தா ரெல்லா மிகவுங்கேட்டுப்
பூதலந்தனி லிறையைப்போற்றிப் புகழ வனைவரு மனமகிழ்ந்தே. (141)

நஸ்ருப்பதிக் காபரீன்களை இஸ்லா மாக்கிய காரணம்

காவுக் கிசையுள்ள பகுதாதினில் கனத்த யாபாரி யெழுபதுபேர்
பூவுக் கிசைந்திடும் வர்ச்சனைப்போர் பொருந்து முஹ்யித்தீனப் துல்காதிர்
பாவுக் கிசையுள்ள வசனம்போலே பாங்கா யுரைசெய்வா முஸ்லிம்களு
நாவுக்கிசைதரு நாயகமே நல்லோர் முஹயித்தீனப் துல்காதிர். (142)

எங்கள் தொறுவெல்லாந் துயில்களேற்றி யிருக்கு நசாருக்கள் பதியிலானோம்
அங்கே யிருக்கின்றதெருவீதியிலனைவோர் சாக்கெல்லா மிறைக்குவைத்தோம்
சங்கமா வந்தே நஸருக்களுந்தாங்க ளிருப்பது மெவ்விடமென்றான்
திங்க ளழகாக பள்ளிவாசல் சிறக்கும் பகுதாதுத் தேசமென்றோம். (143)

அன்னகாலையி லவர்கள்சீறி த்ராடைதனை யெல்லாம் கவர்ந்து வாரி
மினனு மொட்டக மிருநூற்றையும் விரட்டியவாவர் சார்பிற்சேர்த்து
தின்னமாகிய வசைகள் பேசிச் செலுன ரெங்களை யழைத்தேகியே
மன்ன னசுருவின் சமுகம் விட்டார் வந்தார் பாதிரி நானூறுபேர். (144)

நீங்க ளிருக்கிற தெவ்விடமென்று னிலத்தில் பகுதாது தேசமென்றோம்
பாங்காய் முஸ்லிம்கள் நஸருபதி பயமில்லாமலும் வந்ததாலே
தீங்காயிவர்களை யணியாய் விட்டுச் சிறந்த கசையினாலடியுமென்றான்
ஓங்கி யொருவர்க் கிருந்தபடி யுதா மிகச்சிந்த அடித்தான் பாவி. (145)

எடுத்த சாக்குகள் தொறுக்களெல்லாம்யாங்கள் கொடுப்பது கிடையாதென்றே
யடித்து விரட்டினான் யாங்களெல்லா மழுகையுடன் வந்தோ நாயகமே
படைத்தோன் அறிவான் பட்டாடைப் பதருதே மனம் தஸ்தகீரே
கிடைத்த பலனிதன் றனைவோர்களும் கிருபை முஹ்யித்தீ னிடத்திற்சொன்னார்.

அன்ன காலையி லப்துல் காதிர் ஆயாசமாகும் சமயத்திலே
யென்னும் பெரியவ னியம்பலானு னெனது தனியான முஹ்யித்தீனே.
தன்னால் நஸருவின் பதிகளேகித் தரிய லார்களை யிஸ்லாமாக்கி
மின்னு மலம் தப்பார்வருவீரென்று மேலா னுரைசெய்தான் குதுபொலிக்கே.

இறையோ னுரைகேட்டு முஹ்யித்தீனு மெழுந்து மாதாவினிடத்தில்வந்து
மறையிலுகப்பான மாதாபிதா வழுத்தக்கேளுங்கள் பெரியோர்களே
தறையின் தவமுள்ள நஸருபதி சங்கதியெல்லாந் தானோதியே
இறையோனுரைத்தது வவர்கட்கோதி யெனக்கிங் குத்தாங்கொடுங்களென்றார்()

பதம்

சங்கள் பாலரே தங்கத்தின் மேருவே யிருதயக் கனியே நவமணியே
தவமிகுத்த மகனே நாங்களெவ்விதம் விடை கொடுப்போம்

## பாலரே

சங்கமாய்வரும் யாபாரியைச் சதிசெயதினைத் தவனடித்தான்
எங்கட் மன்மொவ்வா திப்புவியிலேக தம்மனம் பொருந்துமோதான்
அறுப தாண்டார்கப்பாலரில்லா தாதியைப் புகழ்ந்திருந்தே யிருந்தே
யும்மைச்சுமந்து மகனே திருஆண்டவன் கொடுத்த கனிமதியே
தந்தைதாய்மனந் தயங்கலாகுமே சங்கையின்திருவே மருமல்ரே துரை
ராஜரேமகனே யெங்கள் தங்கமே, தங்கமே, தவத்தருளே மணியே. (149)

## தொங்கல்

அந்த மிலியவன் கிருபையாலே யவசிய மேகி வருவீரென்றும்
தந்தை தாயாரும் வசனமோதத் தஸ்தக்கீறெலி தானெழுந்தே
மந்தாக் கதிர்ச் சோலையாவு மருவின் விசிறியும் வில்லும்நாளும்
கந்த ரத்துறுங் கோடாலியும் கதிர்போல் முசல்லாவும் புலித்தோலுடன். (150)

திக்கில் விளங்கிய சக்கரமும் சிறந்த சோட்டாவு மணிக்கயிறு
வக்கலுவான கோடாலியும் விளங்கு மதிபோலே மணிக்காவும்
ஹக்க னருளாலே யெடுத்தணைந்து கதிரின் பாதக்குறடணில்
மக்க முஹம்மது நபிபோரும் வல்லோன் கிருபையால் நடக்கலானர். (151)

காடு வனங்களுஞ் சோலைகளும் காடிபுலி சிங்கம் யானைகளும்
கோடி தனிலுள்ள விலங்கினங்கள் குதுபின் பாதத்தை போற்றிவாழ்த்த
ஆடுமயில்களும் பறவைக்கூட்ட மண்ணல் கதம்புகழ்ச் தகைளேக
யேடார் சுவனத்தி னமார் வாழ்த்த விறையோன் முஹ்யித்தீ னடந்தனரே. ()

நடந்து பதின்மூன்று நாளானபின் நஸறு பதிகண்டு தானேகியே
தடங்கள் மிகச்சூழும் சோலையாகித் தஸ்த கீறெலி தெருவில்வந்தார்
அடங்கள் மிகச்செய்த பாதிரிக ளழகா யிருக்கிற விதமுங்கண்டு
திடங்க ளாகவே குதுபுமேகச் சிறந்த பாதிரி யுரைசெய்வார்கள் (153)

எந்த நகரத்தி லுள்ளவரோ விளங்கு தேமுகம் மதிபோலவே
சந்திர னதுபோலத் தெருவீதியிற் சங்கையாய் வந்த குலதெய்வமோ
வந்த ரிஷிகளோ புவிமீதினில் வகைக ளறிவோமென் றெழுந்தெல்லோ
சந்திப் பாகியே பாதம் போற்றித் தஸ்த கீரையு மழைத்தேகியே (154)

மருவின் மலர்ப்பாயது விரிப்பானதில் வள்ளல் தனைவைத்தே யுரைசெய்வார்கள்
பெருகுந் தவமுள்ள குலதெய்வமே பெரியோனருள் பெற்ற தயாபரே
தீரையிற் பெருநோய்கள் தீர்ப்பதற்குத் தங்களிடத்திலே மருந்திருந்தா
றீவே யொடுவென்றார் பாதிரிகள் செப்புவா ரப்போ முஹ்யித்தீனும் (155)

எந்த னிடத்திலே கலிமாவென்றே யிலங்கு மருந்துதா னிருப்பதாலே
அந்த அவிழ்தங்க ளுண்டானு லவசியந் தீரும் பெருநோ யென்றார்
விந்தையாகிய முதற்பாதிரி விளம்பக் கலிமாவு நோய்தீரவே
வந்த நஸறுக்கள் முந்நூறுபேர் வழுத்தினாரப்போ கலிமாத்தன்னை (156)

சிந்தை யுவப்பாக நோயுந்தீர்ந்து செப்புவாரப்போ தருமையாக
இந்த வுபதேச மருந்தினுக்கு மிருக்குபதேசம் புவியிலென்றார்
அந்த மிலியவனகுதுபு சொல்வா ரைந்தொ குத்திலும் தொழுமினென்றே
சந்திர வசனத்தா ருரைசெய்யவே சரியென் றனைவோரும் சொல்வாரப்போ ()

இன்னு ளிதுபோலே மருந்துமில்லை யெங்கே போனாலுமகப்படாது
தின்னல் பத்தியம் யாதொன்றில்லை செலவுங் கிடையாது நமரோர்களை
யென்னுங் குலதெய்வ மிவரேயென்ன வெந்த நகரத்தி லுள்ளவரோ
அன்ன வாசனுக் குரைசெய்வோமென் றவர்களேவியே யறிவித்தார்கள் (158)

வஞ்சக் தானுள்ள ராஜனுமே மனந்தான் வெகுண்டவ னெழுந்துசீறி
விஞ்சையாகிய கலிமாத்தன்னை விளம்பி நோய்தீர்ந்த பாதிரியைப்
பஞ்சாப் பறத்துவேன் பாரமினென்று பல்லைக்கடித்தவன் படபடத்தே
தஞ்சமாய் வந்த சன்னுசெங்கே சகல பேர்களு மெழுமினென்றான் (159)

படைகள் திறட்டியே பதினாயிரம் பாங்காய் வளைந்தார்கள் முஹ்யித்தீனை
யுடையோன் கிருபையா லொருகிஷ்தியை யுவரிப்படை மீதிற்கவிழ்ந்தும்போதி
படையலா ரெல்லாம் கிஷ்திக்குள்ளா யரச னீங்கலாய் நிற்கும்நோ [வான்
மடைந்து மணங்களு முருகிவாறி யிறையோன் குதுபையும் போற்றிச் சொல்

பதம்.

மல்யில்லாதொரு சமர்செய்யவந்தேன் வாசபோசரே
யிந்தவைய மீதிலே
தேசம் விளங்கும் சிகாமணியென்று சிந்தையிலறியேன்
மிகுசெல்வத் தேருவே
மானிடம்பயிர் சீவஜந்தெல்லாம் வாழ்த்து நாதரே
பாதுகாக்கு நீதரே
அதிபதியென்று முகலமீதினி லானதெய்வமே
நாங்களேது செய்குவோம்
இந்த கிஸ்தியி லெனது சனங்களெவ்விதமாகுமோ
மதியா னறிகிலேன்
பாதம் பணிந்து பணிவிடை செய்தேன் பாரின் மீதிலே
யுங்கள்பாலி லாகவே

தொங்கல்

இந்த விதமாக அரசனவ னியம்பு மொழிகேட்டு முஹ்யித்தீனும்
அந்த மிலியவன் கிருபையாலே யவர்களுட கிஷ்தி யெடுக்கும்போதிற்
சந்திப்பாய் வந்தே சகலபேரும் தனியோன் குதுபொலி பாதம்போற்றிச்
சிந்தை பூரித்தே யரசனுடன் சிறந்த சனமெல்லாம் கலிமாச்சொன்னார் (161)

பதியிலிருக்கின்ற சனங்கள்முற்றும் பாங்கா யதைச்சேர்ந்த நாட்டார்களு
மதியி னழகான குதுபைப்போற்றி மார்க்கந்தனிலாறு ரேழுலட்சம்
விதியின் தொழுகையும் கலாலானதும் விளக்கத்தான்செய்தே முஹ்யித்தீனும்
புதிய மிகுருபும் கூத்துபாவும் புகழ்ச்சி யாகவே செய்வாரப்போ (162)

தருக்கள் மிகவுள்ள பகுதாதினிற் சார்ந்த யாபாரி யெழுபதையும்
திருக்க னுடையவன் குதறத்தொலி சிறந்த கடிதத்தால் வரவழைத்தே
பெருக்கந்தா னுள்ளாசர் முன்னே பெரியோன் முஹ்யித்தீனுரை செய்வார்கள்
தொறுக்கள் துகிலுடன்வந்தபேரைத் துசும்புவளர்த்திடும் வகையேதென்றார் ()

உரைகள்தான் செய்வா ராசருமே யுண்மை முஹ்யித்தீன் பாதம்போற்றி
இறையோ னருள்பெற்ற நவமணியே யிஸ்லாந்துதிசெய்யு மணிவிளக்கே
மறையு மார்க்கமும் ஹலால் ஹறாமும் வாகுதெரியாத படியினாலே
தரையில் புகுதாது யாபாரியின் சரக்குந்தொறுவையுங் கவர்ந்தடித்தோம் (164)

இப்போ தவர்களும் வந்ததாலே யெனதுமனம்போலே பொருள்களீவேன்
தப்பிதம் செய்த பிழைகளெல்லாம் தனியோன் பொருக்கவே துவாச்செய்வீர்கள்
துப்புரவுள்ள மதியே யென்று சொல்லியாசரு மனம்போலாக
அப்போதே துகில் பலவர்ணங்களைந்நூ றொட்டகைதனிலேற்றியே (165)

சங்கை மிகச்செய்து யாபாரிக்குத் தடஞ்சூழ் பகுதாது போங்களென்றார்
செங்கை யுடையதோர் அரசரோதச் சிறந்தயாபாரி யெழுபதுபேர்
திங்கள் வதத்தின் குதுபொலிதஞ் செந்தாமறைப்பாத மிகவும்போற்றித்
தங்கள் தொறுவுடன் வழிநடந்து தடத்தின் பகுதாது வந்து சேர்ந்தார் (166)

மல்லி மலர்வாசர் முஹ்யித்தீனும் வழுத்துவாரப்போ தாசர்பாலில்
நல்லோர் ஹஜ்ஜுநாள் வருவதாலேநானும் பயணமக் காவுக்கென்றார்
எல்லாப் பெயர்களும் பாதம்போற்றி யிருதயமான நவமணியே
வல்லோன் முஹ்யித்தீ னுண்டகையே மலர்ப்பாதங்காண்ப தெந்நாளோ (167)

## ஹஜ்ஜுசெய்த காரணம்

கண்ணின் மணியான ரத்தினமே ஹக்கனருள்பெற்ற சுடர்மணியே
விண்ணோர் மிகப்போற்றும் தயாபரே மேலோனருளாற் போய்வருவீரென்றார்
மன்னர்தான் போற்று முஹ்யித்தீனும் வாகாவிருதெல்லா மெடுத்தணைந்தே
தன்னின் பாதத்தன் குராட்டிலேறித் தஸ்தகீரொலி நடந்தாரப்போ (168)

கடந்தே ஆதமா மலையில்வந்து நாயனருளாலே ஜியாரத்செய்து
திடங்களாகிய தஸ்தகீரும் சிறந்த கடலோரம் வந்துசேர்ந்த
தடங்களாகிய தரைமீதினிற் றங்கள் முசல்லாவைத்தான் விரித்தே
புடையோன் றுபையா லாசாவையு முயர்ந்த பாய்மரமாக நாட்டி (169)

சுக்கான துக்கான சக்கரமுந் துலங்குங் கோடாலினங்கூரமாய்
மிக்க கயிற்றினால் மாறுகட்டி விளங்கும் புலித்தோலைப் பாய்த்தூக்கியே
தக்க பெரியவன் கிருபையாலும் சங்கையாகவே தானிருந்தார்
ஹக்கன் குதறத்தால் கப்பலோடிக்கண்டார் நாகையின் பதியானதை (170)

வந்தங்கிறங்கியே கரைமீதினில் வணக்கந்தான் செய்தே முஹ்யித்தீனும்
அந்தமாகிய துல்க்கருணைன் யதிபர் சிக்கந்தர் மாளிகையிற்
சந்தனந் தன்னை காத்தாலள்ளித் தஸ்தகீறுலி தானடித்தே
பந்த ரக்கதிர் போலிலங்கவாசருட கப்பற்றுனேறியே (171)

திரையி லதிகமாய்க்காற்றுவீசச் சிறந்த வங்கமுந் தானோடவே
இறையோன் குதறத்தா லொடுக்கிறங்க வியல்பாய்க் குதுபொலி பசியாறியே
மறையோர் போற்றிய முஹ்யித்தீனின் வங்கந்தா னோடி யிருபதிநாள்
கமையும் தான்கண்டார் சித்தாவையும் காரணருட விருதணைந்தே (172)

காடுதனிலேதா னடக்குநேரம் கனத்த குரலோசை வரலாகுமே
நாடுந்தவத்தார்கள் நவமணியே நபியா முஹம்மது பேரனாரே
வாடி மயங்கிறேன் கிணற்றுக்குள்ளே வயது மிகவான கிழவனாருந்
தேடுவார்களை யொருவர்காணோந் தியக்கம் பனிரெண்டு வருஷமென்றார் (173)

சத்தமது கேட்டு முஹ்யித்தீனும் தயங்குவா ருள்ள கிணற்றைநோக்கி
யித்தகையுடனிருப்பரே யியம்பு மும துட நாமமென்றார்
கத்தன் குதுபொலி வசன்ங்கேட்டுக் களறுவா ரப்போ கிணற்றுள்ளோரும்
சித்த மிகவுள்ள தஸ்தகீரே சிறந்த முஹம்மது பேரனாரே (174)

எண்ணிக் கறையிறேன் கிணற்றுக்குள்ளே யேகனருள்பெற்ற மேலொலியே
விண்ணோர் துதிசெய்யு மணிவிளக்கே விளங்கு முஹயித்தீ னப்துல்காதிர்
என்னைக் கரைசேர்ப்பா ரில்லையென்றோத வேது வறிந்துதாள் முஹ்யித்தீனும்
தன்னின் காத்திற் கரையேற்றியேசங்கை யாகிய வசனமோதி (175)

தக்கோ னருளினால் வருஷ நாளிற் றலந் தனிலுள்ள சுலுத்தானெல்லா
மிக்க புகழான பாத்துஷாக்கள் விளங்கும் சனங்களோ வனேகங்கோடி
மக்கந்தான் வந்தே யிருக்கும்போது வழங்குமொருசத்தம் குதறத்தாக
ஹக்கன் முஹ்யித்தீ னப்துல் காதிர் ஹஜ்ஜுதான் செய்ய வாராரென்றே (176)

குதரத் தாய்வரு மொழியைக்கேட்டு குதுபுமுஹ்யித்தீன் தமையும்நாடி
மதிபோலழகான் சுல்தான்மார்கள் வையர்தனிலுள்ள பாதுஷாக்கள்
புதியோர் சிறுபாலர் முதலாயுள்ளோர் முன்னாலேகுவா ரனேகங்கோடி
யெதிராலாகிய முஹ்யித்தீன்றம் மிருப்தம் போற்றிச் சகலோர்களும் (177)

புதியோ னருளினா லழைத்துவந்து பூதங்கிண்மதி போல்ாகவே
மதியி னழகான கருபத்துல்லா வந்தங்கிறங்கினார் முஹ்யித்தீனும்
பதியோர் தமக்கெல்லாம் ஹஜ்ஜுநேரம் பாங்காயொருகுத்தாகுந் தருணத்திலே
அதிருமொழிசத்தங்குதாத்தாக அண்ணல் முஹ்யித்தீன் இமாம்செய்யென்றே ( )

மல்லி மலர்வாசர் ஹஜ்ஜுக்காகவாகாத் தொழுவிக்கு நேரத்தினில்
எல்லாப் பரக்கத்து மிகவுண்டாகி யிறங்கு மழைமாரி சந்தனத்தால்
நல்லோர் முஹ்யித்தீ னப்துல்காதிர் நாதருடதவம் தானென்றோத
வல்லோன் ரகுமத்து மிகவுண்டாக வானோர் யாவரு மூவந்துபோற்ற (179)

தர்மம் வளர்ந்தேறப் புவிமீதினிற் சரிஅத்து மார்க்கம் பெருகிவாழ்க
வர்மம் வனவாச மதுசென்றேக வள்ளல் முகம்மது தீன்துலங்க
அறமும் வளர்ந்தோ மக்கமீதி லழகுள்ள ஹஜ்ஜு முடிந்தபின்னர்
அறத்தோர் யாவருங் குதுபைப் போற்றி யழகாயவரவர் சார்பிற் சார்ந்தார் (180)

மக்கந்தனிலேதான் முஹ்யித்தீனும் வாசரிருந்தார்க ளொருவருடம்
மிக்கப் புகழாகச் சீக்லோர்களும் விரும்பியுவப்பாக விருக்கும்நாளில்
தக்கோ னருவினால் மறுஹஜ்ஜுமே சங்கை யாகவே முடிந்தபின்னர்
ஹக்கனுதவியால் கருபாவினிற் காரணர் தமைச் சூழ்ந்திருந்தார் (181)

அன்னகாலையி லப்துல்காதி றனேகஹதீதுகள் சொல்லும்போதிற்
றன்னாற் பருந்துக ளநேகங்கூடிச் சத்தமிகுதமாய்க் கத்தும்போதி
லென்னுங்குதுபொலி கோபத்தோடு மேறிட்டவைகளைப் பார்க்குநேர
முன்னால் விழுந்தது பருந்துகூட்ட முதியோர் யாவரும் புதுமையானார் (182)

ஈதுபடி நிற்க நோயாளிக ளிளங்கு குதுபொலி முன்பில்வந்து
பாத தாமரை மிகவும் போற்றப் பறக்கும் பிணியெல்லாங் காற்றுப்போலே
ஆதிபெரியவன் கிருபையாலே யனைவோர் மகிழ்ச்சியா யிருக்கும்போதில்
மாதங்கொரு பெண்ணாள்கிதுமத்தாக முஹ்யித்தீன்கதம் போற்றிச்சொல்வாள் ()

எங்கள் முஹ்யித்தீ னாண்டகையே யுறையோனருள்பெற்ற தயாபரரே
சங்கை பொருந்திய தஸ்தகீரே சையிதி றசூலின் பேரனாரே
பங்கை யக்கத் தவநிதியே பகாக்கேளுங்கள் நாயகமே
திங்க ளஷறபி யேழுகோடித் திரவிய முள்ள சீமானுக்கே (184)

மங்களமாக மணமுடித்து மாதா பிதாவுமே கொடுத்திருந்தார்
சங்கையாகவே நானிருந்து தானீன் றெடுத்திடும் பாலகியாள்
திங்கள் வதனமாய் பெண்கள்பத்தும் சிறக்கயான்பெற்று வளர்த்துவந்தேன்
எங்கள் தனைப்போலே நிதிவந்தா யிருக்கும்படியான மனைகள்மீதில் (185)

புவியிலொன்பது பெண்மாதரைப் பெரியோனுதவியால் மணமுடித்து
குவலமீதி லிருக்கின்றார்கள் குழந்தையொரு செல்வி மனையிலுண்டு
கவன மிகமாகி யென்கணவர் கனகந் தனக்கொரு ஆணியில்லாமல்
தவங்கள் மிகச்செய்தும் ஆதிநாயன் தாவில்லை ஆணும் புவிமீதிலே (186)

இன்னலெனதுட கணவனாரு மியப்ப லானது நாயகமே
பொன்னும் பொருள்களும் செல்வங்களும் புகழ்ச்சியாகவே கொடுத்தநாயன்
உன்னலொருபாலர் பெறுவதற்கிங் குலகி லொருக்காலு மில்லையென்றே
இன்னமொருமாதை மணமுடிக்க வெந்தனிடத்திலே சொல்லலானார் (187)

அன்னகாலையில் யானும் சொன்னே னருமை தானுள்ள பத்தாவுக்கே
சின்னஞ் சிறுசிலே யெனைவிவாகம் செய்தீர் பெண்பாலர் பத்துமீன்றேன்
மன்னராகிய கணவனாரே மனந்தான் சபூர்செய்தே யிருந்தீராகில்
இன்னிப்பெருவதிங்காண்பாலன் தானென்றே யுறுதியாய்நான் சொல்லினேன் ()

## பதம்

சங்கை யொருவருஷம் யானும் சண்டாளி சொன்னபடி
சங்கையும் ஆச்சுதென்றே மணந்தான் செய்ய வெண்ணுகிறார்
தான் செய்தால்வர் தாலமீதிலே
நானென்ன செய்வே னுனிலந்தன்னிலே
நாயனே அறிவானெந்த நாட்டத்தின் மதியே
பத்தெனப் புர்லகியும் யானும் பெற்றதே பெண்குழந்தை
பெற்றதும் பெண்குழந்தை அஃதெத்தகையின் விதியோ
யெத்தகையின் விதியா னறிகிலேனே
பத்தினி பாத்திமா பாலரோயுங்கள்
பாதமும் பணிந்தேன் இந்தப் பாருலகினிலே
எந்தனிட கணவரென்னை யிப்பவே தூஷணித்தார்
இப்பவே தூஷணித்தால் யானுமெப்படிப் பிழைப்பேன்
எப்படி நானிருப்பே னவரிடம்
தப்பித வார்த்தைகள் தான் மிகப்பேசுகிறார்
தாரணி தனிலே யெங்கும்
தங்கத்தின் மேருவே
தாலமீதினிலே யெங்கும் தகுந்த காரணரே
பாலருதிப்பதற்கு முகம்பார்த்தருள்புரிவீர்
பார்த்தருள்வீர்கள் பாரின்மீதிலே
கார்த்திடு மெங்கள் ஹக்கவ னொலியே
கதமும் யான் பணிந்தேன்
ஆதிகாரண ரொலியே

## தொங்கல்

மாதங் கழுகிற வசனந்தன்னை வாசர்தான் கேட்டுத் தயவுண்டாகி
சோதி பெரியோனே யாகுதாயே துயிலுனில்லாத் துய்யவனே
யேதுவகை யென்று ரிம்மாதுக் கினிமேற்கிடையாது பாலனென்றாள்
ஆதி ரகுமானே யொருபெண்ணைத் தா னுயுருவாக்கிக் கொடுநீயென்றார் (189)

அந்த மொழிகேட் டாதி நாய னருளுவானப்போ குதுபொலிக்கே
யெந்தனருஷிலே துயிலுங்கோவேயானுங் கொடுத்தே னென்றருள்புரிந்தான்
தந்த தாரையாயழுகு டாதே தையலொருபெண் ணுமாணுச்சுநீ
யுந்தன் மனையேகிப் பாலகரை யுரிமை யுடன்வைத்தே வாழ்மினென்றார் (190)

அன்ன நடைமாதும் சகலோர்களு மவசாத்தேகிப் பார்க்கும் போதிற்
சொன்னமொழிபோலு மாண்பாலனும் நூலங்கும்படியான புதுமைகண்டே
யென்னு மிறையவன் கிருபையாலே யிலங்கு முஹ்யித்தீன் காரணத்தை
மண்ணிலத்தனிற் சொல்லொணாது வல்லோனருள் பெற்றவொலிதானென்றார்

சீமானவருடன் தேவியருஞ் சிறந்தபாலகரை மிகவும் போற்றிக்
கோமானருள் பெற்ற குதுபொலியாற் குவலயத்திலே கிடைத்ததென்று
ஈமா னுடனேதான் லட்சங்காசுங் கெளியோர்க் குமரளி தங்கட்கீந்தே
சாமர்த்தியஞ் செய்த பொருளுக்கெல்லாம் தகுந்தபாலரென றின்புற்றாரால்(192)

## கருபத்துல்லாவை வலஞ்சுற்றுங் காரணம்

ககனத்தமரோர்கள் மிகவும் போற்றக் காதிற் முஹ்யித்தீ னிருக்கும்நாளில்
ஜெகமேல் மானிடர்க ளறிந்திடாமற் சிறந்த கருபாவை வலமுஞ்சுற்ற
அகத்தில் நினைந்துதா னிருக்குநாளி லாதிபெரியவன் கிருபையாலே
சுகத்தி லுதிப்பான வெள்ளிராவிற் றுலங்கு முஹ்யித்தீன் தாமெழுந்தே (193)

சாமந்தனிலேதான் கருபாச்சுற்றித் தஸ்தகீரொலி வருமந்நேரம்.
சோமனழகான வொருமயிலாள் சுற்ற வவர்முன்னே அரவமேகக்
கோமான்ருள் பெற்ற குதுபுகண்டு குயிலா ளியம்புவீர் வாலாயென்றார்
ஈமானுடையவன் மிகவும் போற்றி யியம்புவாளப்போ தொலிகள்பாலில் (194)

நானு மிருப்பதிங் கிருக்கு தேசம் நாமமானதும் சுலைகாபீவி
மானுன் துயரங்கள் சொல்லக்கேளும் வள்ளல் முஹ்யித்தீனுண்டகையே
தேனுரு மெந்தன் கணவரோடும் செல்வத்துடனே நானிருக்குநாளி
லேனுர் கடைமாதர் பாதம் போற்று மிரஸூல் முஹம்மது போனுரே (195)

பெண்ணொன் றிருந்ததேயென்பாலாகி பெலவானிடத்திலே மணஞ்செய்வித்தே
பின்னுற்பிரந்தது மூன்றுபாலர் பெரியோனருளென்று நினைத்திருந்தேன்
விண்ணோர் போற்றிடுந் துல்ஹஜ்ஜிலே விரும்பியொருகிடாய் குருபான்செய்தோ
கண்ணுக்குவப்பான வென்கணவர் கறியையறிந்து கொண்டவரிருந்தார் (196)

அன்ன காலைநான் குடலாக்கவே யடுப்பிற் சுடுதண்ணீர் வைப்பதானேன்
என்னு மகனுன இளையபால னிருந்த தமையனைக் கேட்கலானுன்
இன்னுட் குருபானுய்க் கிடாயறுத்தவியல்பை நமக்கோதும் தமயனென்றான்
தன்னு லிருபேரும் பேசிக்கொண்டே தகுந்த வரிவாளு மெடுத்தேகியே (197)

வந்தங் கிருவரு மறைவாய்நின்று வகையைக்கேட்டோனைக் காங்கால்கட்டித்
தந்திரஞ் சொல்லிச் சாய்த்தவனைத் தகப்பன் செய்திடு குருபானென்றே
இந்தா கழுத்திலே வைத்தேன்கத்தி யிழுத்தேன்பாரென்று மிருத்திவிட்டான்
அந்தநேரமே யிளையபால னழகாய் ஷகிதாகிக்கிடக்கும்போதில் (198)

தமாஷாகவே மனையில்வந்து சாற்றுவானப்போ மூத்தபாலன்
அம்மா குருபானும் கொடுத்தேனிப்போ தருமையாய்தம்பி சிறுபாலனைச்
சும்மா நீங்களும் வந்துபாரும் துலங்கு தோத்த சோரியென்றான்
தம்பியெனக்கூவி நாங்களேகித் தந்தை தாயாரும் பார்க்கும்போதில் (199)

[illegible]னுய் ஷகிதாகிக் கிடப்பதையும் தந்தைதாய்கண்டு மதிமறந்தோம்
[illegible]னு மதியில்லாப் பாலனென்றே தூத்த அவனையும் தகப்பனர்தன்

கானற் காட்டினி லவனோடிடக் கண்டோரோனும் பிடித்திழுத்தே
தானுய்த்து கொண்டு கிரியிலேரித் தகப்பன் மயங்கியே விழுந்திறந்தார் (200)

விதியோ யிஃதென்று ஜனத்துடனே வேகத்துடன் தூக்கிமனையில்வந்தோம்
மதிக ளறியாத சிறுபாலகன் வாக்குங்குடல் வெண்ணீர் தனில்விழுந்தே
யெதுவா யிறந்துபோரய்க் கிடப்பதைக்கண் டெந்தன்மனங்களு முருகிவாடிப்
பதியில் மூவரை யடக்கஞ்செய்து பாபியழுதுநா னிருக்குறோம் (201)

இந்த விதியெல்லாங் கேட்டமக ளிடைந்து முகம்வாடி யழுதுவந்தாள்
அந்த கோத்திலே மயக்கங் கண்டு மாணமடைந்தாளே யென்பாலகி
அந்த நோமே யானுமேகி யவன்தன் புறமென்றே யடக்கஞ்செய்தே
எந்தன் மனம்போலே செலவுசெய்தே யெல்லாப்பெயருக்குஞ்சடங்குசெய்தேன்

இனிமே லிறையவன் தவக்கலென்றே யிருந்தபொரு ளெல்லாம் விலைக்குவிற்றுக்
கணக்கில்யான் பார்க்க நாலுலட்சங் காசு அஷறபியதனை யெல்லாம்
கனிவா யெளியோர்க்கும் குமராளிக்கும் காத்தாலளித்துத் தான்முடிந்த பின்பு
மனக்க னுடையவன் தனையும்போற்றி வந்து கருபாவி லிருக்கலானேன். (203)

மிக்க புகழான தயாபாரே மீரான் முஹ்யித்தீ னப்துல்காதிர்
ஹக்க னுதவியா ளுங்கள் பாதம் கண்டே னென்னிட கவலை நீங்கு
வதற்கே நல்வாக்குந் தருவீரென்று மிருபாதம் போற்றி நின்றாள் மாது
தக்கோ னருள்பெற்ற தஸ்தகீரு சங்கையுடன் மாதுக் குரைசெய்வாரே. (204)

எல்லாம் சோதித்த வல்லநாய னின்பந் தருகுவான் சுவர்க்கபதி
நல்லோா முஹம்மது நபிமகளார் நாச்சியார் தம்மிசை ஷபாஅத்தாவீர்
வல்லோன் கிருபையா லேகுமென்று வந்த அரவமே நீயாரென்றார்
அல்லா அருளினல் வந்தேனென்று மடிகள்தான் போற்றி யருளுந்தானே (205)

மதியா லிறையோனை யோராயிரம் வருஷந்தானுக வணக்கஞ் செய்தே
யுதவி யெனக்கென்ன வென்றுகேட்டே னுடையோனருளிய வசனங்களும்
குதுபு முஹ்யித்தீன் பதங்கள் போற்றிக் குவலயந்தனி லிருநீயென்றான்
பதிலுத் தாங்க னருள்புரிவீர் வள்ளல் முஹ்யித்தீனே யென்பீரே. (206)

அந்த மொழிகேட்டு முஹ்யித்தீனு மருளுவா ரப்போ தமுர்தம்போலே
சிந்தை யுவந்துதான் வந்தபூம்பே திருக்கண் ணுடையவன் கிருபையினு
லெந்தாளினுந் தவக்கல் செய்தே யிருமென் றோதினர் குதுபொலியும்
வந்த சத்துரு நாகந்தானும் கண்கொள்ளாததோ ருவகை பொங்கி. (207)

கானகந்தனி லஃதேகிடக் காதிர் முஹ்யித்தீ னப்துல்காதிர்
வானின் மதிபோலே கருபாச்சுற்றி வாயிலில் வந்தங் கிருக்கும்போதிற்
றானோன் கிருபையால் பஜிர்தொழுது சங்கத்தார்க் கெல்லாம் பயணம் சொல்லித்
தோணும் விருதெல்லா மெடுத்தணைந்தே துலங்கும் பாதத்தின் குறட்டிலேறி. ()

## மதீனத்துக்கேகிய காரணம்

மதினக் தனைநாடி முஹ்யித்தீனும் வாகாய் நடந்துதான் றவுலா வந்து
புதியோன் கிருபையால் ஸியாரத்தாகிப் புகல்சேர் வணக்கமுஞ் செய்தேகீதர்
கதியை வாவழைத் திடுங்காரணர் நல்லோர் முஹம்மது நபியை வாழ்த்தி
மதினத் தெருவீதி வருகும்போது மணக்கு மழைமாரி சந்தனத்தால். (208)

புதுமைதனைக் கண்டோர்கிரே ரெல்லாம் புகழ்சேர் முஹ்யித்தீன் வந்தாரென்று
கதிபோற் பெருக்கமாய் யாவரும் வந்து நாதருடபாத மிகவும் போற்றி
முதியோர் யாவரு மருங்குசூழ முஹ்யித்தீ னொலி தமையழைத்தே
மதிபோ லழகன் மிகுருபிடை வைத்தே யாவரும் சூழ்ந்திருந்தார். (210)

மார்க்கநெறி நீத மிகவுமோதி வந்த பெயர்களின் பிணிகள் நீக்கி
யார்க்கு நல்வாக்கங் கொடுத்தேகியே யண்ணல் முஹ்யித்தீன் பயணஞ் சொல்லி
யோர்க்கை யுடனல்ல விருதணைந்தே யிரஸூல் முஹம்மது நபியைப் போற்றித்
தீர்க்கமுடன் பாதக்குறட்டி லேறிச் சிறந்த குதுபொலி நடக்கலானார். (211)

நடந்து கானகங் கடந்துநாதர் நானிலமுள்ள சித்தர் வந்தே
நடத்தின் கடலிலேறி முசல்லாவையுஞ் சங்கையாகவே தான்விரித்தே
யிடத்திலிருக்கின்ற விருதுகளாலியற்றி வங்கமுந் தானேறியே
யுடையோன் கிருபையாற் பாய்விரித்தே யுவரிதனிலேதான் கப்பலோட (212)

வல்லோனருளாலே யொடுங்கிறங்க வாசர் பசியாறி யிருக்கும்போது
நல்லோர் காற்றுதான் மிகவீசவே நாதர் முஹ்யித்தீன் கப்பலோடி
அல்லா பெரியவன் கிருபையாலே யண்ணல் பகுதாது தேசங்கண்டார்
கல்லோ ழைகளின் கரையிலாகி ஹக்கன் கொடுத்திடும் விருதணைந்தே. (213)

வந்தார் பகுதாதுத் தேசமீதில் வள்ளல் முஹ்யித்தீ னப்துல்காதிர்
சந்தன மாரி கமகமெனச் சகல சனங்களும் பெருக்கமானார்
அந்தமி லியவன் குதுபொலிதன் னழகு பொருந்திய பாதம் போற்றி
யெந்த ராசரும் வந்து காண்க விருந்தார் மனைமீதில் மதிபோலவே. (214)

தந்தை தாயாரு மகனைமுற்றித் தழுவி யுகந்துதான் மிகவும் வாழ்த்தி
யெந்தன் கனியான மணிவிளக்கே யெங்களின்மன மகிழ்ச்சியாக
வந்ததே போது மென்கனியே வள்ளல் முஹ்யித்தீ னப்துல் காதிர்
சிந்தை பூரித்தோம் நாங்களென்று சிறந்த பாலரைப் போற்றி செய்தார். (215)

## மய்யித்துக் குயிர்கொடுத்த காரணம்

அந்த நோத்திற் சிலபேர்களு மனேக கூட்டமா யொருமாதோடும்
வந்து சலாஞ்சொல்லி குதுபாவினில் வழுத்து வாரவர் வணக்கமாக
இந்த மயில்மாது பிடிவாதத்தை யியம்பத்தான் கேட்டு மதிகொடுங்கள்
சந்திர வதனத்தின் தயாபரரே சங்கைபொருந்திய வொலியே யென்றார். (216)

திங்க ளழகான அப்துல்காதிர் செப்புவாரப்போ மயிலை நோக்கி
உங்க ளழுகையின் பிடிவாதத்தை யுரையுமெனச் சொல்ல மாதுசொல்வா
ளெங்கள் முஹ்யித்தீ னுண்டாகையே யித்தப்பகுதாதுத் தேசமீதிற்
தங்க அஷறபி யாறுலீட்டம் சாமர்த்தியஞ் செய்தாரென் கணவர். (217)

எனது பத்தாவும் யானுமாக வின்ப முடனேதா னிருக்குநாளில்
மனம்போ லொருபாலனிறைகொடுத்தான்வைத்துவளர்த்தனம் புவிமீதிலே
யினிதாய் மகனையு மோதவைத்தோ மில்முந் தான்கற்றே ஆலமாகித்
தனது தேகமும் பிரகாசிக்கத் தங்கும் வயதுதான் பதினூற்னன் (218)

யணங்கள் தான்செய்ய முகூர்த்தம்வைத்து மகிழ்வுடநாங்களிருக்கும்போதி
லினங்கள் யாவருங் கண்ணீர்விட வெனது கணவரும் பதவிசேர்ந்தார்
மனதில் விசனமு மிகவுண்டாகி மாதம் நாலாச்சு மணிவிளக்கே
கனதி பொருந்திய மகனுருக்குக் கல்யாணம் செய்ய மனதிலெண்ணி (219)

பந்தற் சோடனை மிகவுஞ் செய்து பாங்கா விருந்தெல்லா முடிந்தபின்னர்
எந்தன் மனம்போலே யென்பாலகர்க் கிலங்கு முடமைகள் மிகவும்பூண்டு
கந்த ரங்களு மிக்சோடித்துக் களரிக்கூட்டமாயிருக்கும்போதி
லெந்த விதத்தாலோ மயக்கங்கண்டிங் கிறந்தான் மகனுமே புவிமீதிலே (220)

நலமா மகனையும் வளர்த்தருமை நாயனறிகுவா னென்குதுபே
பலனோ வெனதுட பாக்கியமோ பதறுதேவயி றீன்றதாலே
குலமான் யானுமே யுலகத்திலே கோடானுகோடிபேர் சொன்னாலுந்தான்
தலதா யடக்கின்ற கபுறுக்குள்ளே தனித்துமகனுட னிருப்பேனென்றாள் (221)

அந்தநேரத்தி லப்துல்காதிர் ஆதி யிடமிருகரத்தை யேந்தி
யெந்தன் ரஹ்மானே யாஹுதாயே யிவள்தன் மகனுக்கிங் குயிர்விடென்றார்
உந்தன் மனம்போலே கொடுத்தானென்று னுரைப்பார் முஹ்யித்தீ னப்துல்காதிர்
சிந்தைகலங்கிய மடமயிலே செல்வனுயிர்வந்தே யெழுந்தானினி (222)

உங்கள்மனம்போலப்பவனிசெய்தே யுடையோன்கிருபையால்விவாகஞ்செய்மின்
செங்கையுளமாதே சதக்காயீந்து செல்வத் துடனீயு மேகுமென்றார்
நங்கை யாருட மனங்குளிர்ந்து நல்லோர்பாதங்க டன்னைப்போற்றி
சங்கை யுடன்வந்து மகனை முற்றிச் சடிலந்தனில்வைத்து பவனியாகி (223)

பகுதாதினிலுள்ள ஜனங்களெல்லாம் வந்தங்கிருந்துதான் மணமுடிக்கச்
செகமேல் முஹ்யித்தீன் காரணங்கள் சிறந்த பெரியவன் கிருபையென்றே
சகல செனங்களு மனமுவந்து சார்ந்தே யவரவர் சார்பிலானார்
சுகம தாகவே மயில்மாதருந் துலங்கு மகனும் பெண்ணுமாக (224)

நாயன் கிருபையின் பறக்கத்தாலே நல்லோர் சதகாவு மிகவுமீந்து
தூயபெரியவன் தனையும்போற்றித் துய்ய முஹ்யித்தீன் கிருபையென்றே
நேயமுடனேதா னிருக்குநாளில் நீதர் குதுபொலி மிகுருபேகி
நாயனருளினால் வணக்கஞ்செய்தே நாட்டமாகவே யிருக்கும்போதில் (225)

## முஹ்யித்தீனப்துல்காதிரவர்கள் அல்லாஹுத் தஆலாவினுத்திரவின்படி மஹல்லதீவுக்கேகி இஸ்லாமாகிய காரணம்.

### தொங்கல்

ஆலம்படைத்திடும் ஆதிநாய னருளுவா னப்போ தருமையாகத்
தாலமீதினி லருபத்திரால் சார்ந்தங் கிருக்கின்ற மஹல்லதீவிற்
கோலமாயொரு தேவுக்காகக் கொண்டா ளீமானுங் குபிரோரெல்லாம்
நாலாம் வேதமும் மறிந்திடாமல் நல்லோர் ஞானமும் தேர்ந்திடாமல் (226)

புத்தை வணங்குகின்ற காபிர்களைப் புகட்டி மதிகளு மிகப்போதித்துச்
சுத்தமாகிய தீனிலாக்கித் துடுக்கார் மலைத்தேவைப் பிடித்தடைத்து
வெற்றியுடன் வாருமுஹ்யித்தீனே விளங்கு மெனதுட கனியேயென்றான்
முத்திநெறிலான அப்துல்காதிர் முதலோனுரைகேட்டு மொழியலானார் (227)

அலையின் கடலேழு மிரங்கினாலு மனங்க ளிரங்காத மஹல்லதீவார்
தலங்கள் நானேகி யிசுலாமாக்கத் தனித்தே யுரைசெய்தா யாஹூதாயே
பலன்க ளாகநான் கேட்டகேள்விப் பாரில் ரஹூமானீ கொடுப்பதானால்
நலமாகத் தீவேகித் தீனுண்டாக்கி நானு வருகிறேன் பகுதாதென்றார் (228)

அந்தமில்ஹக்கனிதுசொல்லக்கேட்டருளுவான் குதுபொலிக்கமுதம்போலே
தந்தேன் பறக்கத்துங் கேட்டகேள்வி சங்கை யாகவே நடவுமென்றான்
சிந்தை யுவந்துதான் முஹ்யித்தீனும் சிறந்தபெரியவன் தன்னைப்போற்றி
வந்தே மனைமீதி லப்துல்காதிர் மதிபோ லிருந்துதா னுரைசெய்தாரே. (229)

தந்தை தாயாரே யெனைவளர்த்த தனியோ னுத்தாரங் கொடுத்ததாலே
யிந்த நேரமே யான்பயண மிசுலாந் தானாக மஹல்லதீவு
சிந்தை மகிழ்வுட னிறையைப்போற்றிச் சிறந்த வுத்தாரங்கொடுமென்றோத
தந்தை தாயாரு மனங்கலைந்து தன்மை யாகவே யுரைசெய்வார். (230)

எல்லா வொலிமார்க்கு மேலொலியே யெங்கள் கனியான நவமணியே
பொல்லாக் குபிரோர்கள் மஹல்லதீவார் போனால் விடுவாரோ வென்பாலரே
வல்லோ னுத்தார் மானதாலே மாதா பிதாமன மயங்குதிப்போ
அல்லா பெரியவன் கிருபையாலே யருமையுட னேகி வருவீரென்றார். (231)

அந்த கலையிற் சகல பேர்க்கு மமுதமதி போலப் பயணங்கூறி
மின்னும் பிரகாச விருதணைந்து விளங்கும் சீர்பாதக் குறட்டிலேறி
மன்னர் போற்றிடு முஹ்யித்தீனும் பகுதாது விட்டுத்தா னீங்கியே
யென்று மிறையவன் கிருபையாலே யிலங்கும் பாதத்தி னடியொன்றுக்கே. ()

கார்தவழி யாகக் குறுகலாகும் கத்தா பெரியவன் குதரத்தாக
காதர் வரும்போது கானகத்தில் நளினமாய் வந்தே விலங்கினங்கள்
பாதம்பணிந்துதாம் சலாம்கூறியே பாங்காய் வணங்கியே அவைகளேக
ஆதவனேகி யடைந்தபோதங் கதிகவனக்காடு மெதிரானதே, (233)

## மிகுந்த வணக்கத்தில் இரவில் நடந்த காரணம்

மாலையாகிய நேரம் வந்து மையிருளிளாக வனவாசத்தில்
வாலைக்கதிர் போலே முஹ்யித்தீனும் வணக்கந்தான் செய்தங்கிருக்கு நேரம்
சூலாயுதமேந்தி வேதாளங்கள் சுற்றிவளைந்தே வாரிபோலாய்
நாலுவிதமாகப் பூதம்ஜின்கள் நடனத்துடன் வரும் கொள்ளிவாய்ப்பேய் (234)

சண்டமாருதம் பேர்லாகவே சத்த மலறியே வேதாளங்கள்
மண்டலங்களுங் கிடுகிடென்ன வந்து வளைந்ததே நாலுதிக்கும்
கொண்டலதுபோலே யொருமுனியும் குனுங்கச்சிரித்ததே பல்லைக்காட்டி
வண்டத்தனத்துடன் முன்னேவந்து வழுத்து முஹ்யித்தீன் சமுகத்திலே (235)

இந்த வனத்திலுல தவங்கள் செய்ய வெப்படி வந்தீர் தவநீதரே
சொந்த வனவாச மெங்களுக்கே தூய்மையுள நீங்கள் வாலாகுமோ
சந்திப் பானனத் யறிவோமென்று சத்தங்காரிடி போலதிர்ந்தே
வாத கூட்டத்தைக் குதுபுகண்டுவல்ல பெரியவ னுளனென் றெண்ணி (236)

எடுத்தங் கேகினர் கோடாலியு மெழில தாகிய சக்காமும்
அடுத்தே யேவினர் தோட்டாவையும் அலற அடித்தே வேதாளத்தைத்
தொடுத்த நோய்களைச் செவுத்தாடையிற் சுற்றி நொறுக்கித்தே திருச்சக்காத்
கடுத்த கூழியின் கானிகளைக் கதற மிகத்தாக்கும் சோட்டாத்தடி (237)

இந்த விதமாக மிகத்தாக்கவே யெடுத்ததே யோட்டம் வேதாளங்கள்
வந்தகாற்றெல்லா மறைவாகிட வாசர்பால் வந்தே ஆயுதங்கள்
சந்திரனதுபோலே தானிருக்கத் தனியோன் முஹ்யித்தீன் வணக்கம் செய்தார்
அந்த நோத்தி லொருநாகந்தா னப்துல் காதிரின் சமுகம் வந்தே (238)

நாகமது பாயும் துடையிலேறி நல்லோர் குதுபொலி கழுத்திற்சுற்றி
வேகனொலிதாமும் சலாம்கொடுத்தே யியல்பாய் நாகத்தைப் பார்க்கும்போது
யூகந்தெரியாம லஃதேகிட யுடையோன் முஹ்யித்தீ னிருக்குநேரம்
வாங் ஞகவே யொருவர் வந்து வணக்கமாய் நின்று சலாமுங்கூறி (239)

சங்கையாகவும் குதுபின் பாதம் தானே மிகப்போற்றியுரை செய்குவார்
உங்கள் துடையிலே தானேறியே தவாய்க் கழுத்திலே சுற்றுப்பாம்பு
எங்கேயிருப்பென்றும் நினைக்கவேண்டாம் யான் தான் முஹ்யிதீனுண்டைகையே
தங்கள்போலான பெரியோர்களைத் தவத்திற் சோதனையானும் பார்த்தேன் (240)

ஒருவராகிலும் அரவந்துக்கங் குள்ளங்கலங்காம லிருக்கவில்லை
மருவின் மலர்வாசர் பயமில்லாமல் வணக்கந்தான் செய்தபடியினாலே
தரையிலிருக்கின்ற காற்றுக்கெல்லாம் தலைமைக்காரனும் நானுவதால்
வறையோர் போற்றியே முஹ்யித்தீனே வாசம்பொருந்திய மணிவிளக்கே (241)

தேசம் தனிலுள்ள சயித்தான்கள் ஜின்கள் வேதாளம் பலகாற்றுமே
வாசரே யுங்க ளடிமை நாங்கள் மனதி லிழிபய மானேமென்றும்

நேச ருடபாத மிகப்போற்றியே நேர்மையாகவே ஜின்னேகிட
காஜத் தாகிய வணக்கஞ்செய்து காதிர் முஹ்யித்தீன் விருதணைந்தே (242)

மல்லி மலர் வாசர் முஹ்யித்தீனு மலரின் பாதத்தைக்குறட்டிலேற்றி
வல்லோன் கிருபையால் வழிநடந்து வனவாசம் விட்டுத்தானேகியே
யெல்லாப் பாக்கத்தும் வளர்ந்தேறவே யிரஸுல் முஹம்மது போனரும்
அல்லா பெரியவ னருளினாலே அழகாய் மிசுரமா நகரம்வந்தார் (243)

வந்து மிகுருபி லப்துல்காதிர் வடிவார் முசல்லாவைத் தான் விருத்தே
அந்த மிலியிந்த விருதை யெல்லா மழகாய் முன்வைத்தே குதுபொலியும்
சிந்தை யுவந்தவ ரிரையைப்போற்றிச் சிந்தை மிகருபில் தானிருந்தே
மந்த ரக்கதிர் போலிலங்க மஹரிபுத் தொழு திருக்கும்போதில் (244)

## பனிரண்டாண்டுபோன கப்பலை வரவழைத்த காரணம்

பெருக்கமாய் வந்து தொழுதோரெல்லாம் பேசா தெழுந்தவர் சார்பிலேகத்
திருக்க னுடையவன் குதுபொலியும் சிறந்த மனந்தனி லெண்ணலானு
ரிருக்குமிசுர் நாட்டார் சகலோர்களு மேழை மிசிக்கினை விசாரியாத
வுருக்கமதில்லாத் தீனேரென்றே யுடைபோன் முஹ்யித்தீன் கோபமானூர் (245)

ஓங்கும் கோபத்தாலே வானம்பூமி யுடையோ னறிஷோடு குருசுலங்கும்
பாங்காய் கிடுகிடுத் தலையக்கண்டு படைத்த பெரியவன் சுத்தமான
தங்கள் மனதிலேகோபம் வேண்டாம் சங்கைபொருந்திய முஹ்யித்தீனே
கோமான்கள் மிகப்போற்றும் தஸ்தகீறே குறுபுல்லகுத்தாபே யென்கனியே ()

சிந்தை துலங்கிய வணக்கஞ்செய்யும் சிறந்த பாத்திமா நாச்சியாற்கு
மெந்தன் மனம்போல நபியிரஸுல் விசைந்து தரிசனங் கொடுத்தநாடு
வந்த கோபத்தைச் சபருசெய்வீர் வள்ளல் முஹ்யித் தீனவா
யந்தமிலியவ னெடுசருந்தி அண்ணலே நீவிருமி னென்றான் (247)

ஜெகமேல் முஹ்யிதீன் சபூறுசெய்து சிறந்தவாசத்தி னெடுக்கறிந்து
மகுமூ தவர் பேர் வணக்கமாகி வாகா நடுச்சாம நேரமதிற்
ககன மிருந்தா னிறங்குமான கனத்த விருதெலா மெடுத்தணிந்து
சுகமதாய்ப் பாதக்குறட்டிலேறித் துலங்கு முஹ்யித்தீ னடந்தாரப்போ (248)

நடந்து மிசுறுமா நகரமீதில் நகரசோதனை பார்க்கும்போதிலே
நடம்போல் பாடங்கள் மதிபோலாகச் சரியாயிலங்கக்கண்டார்
திடமா யொருவீட்டுக் கேழுகோடி சிறந்தங்கிலங்கிய மாளிகையும்
கூடுந்த கொடிக்கொரு ஒனுய் தன்னைக்கட்டி யிருக்கிற விதமுங்கண்டார் (249)

கண்ட ஓநாய்தான் கடிக்குமென்றே கருத்தில் நினைத்தார்கள் தஸ்தகீரும்
இண்டர்கோன் போற்றும் ஆதிசெல்வா னருமைதா னுள்ள வெங்குதுபே
யென்று முடையவன் கிருபையருளிருக்க நாயும்மை கடிக்குமோதான்
மண்டல முள்ள மிசுறுபதி வள்ளலே பார்த்தங் கேகுமென்றான் (250)

சித்த மிகவுள்ள தஸ்தகீரும் சிறந்த வீதிகள் பார்க்கும்போதி
லொத்தைக் குரலான யொப்பாரியா யொரு அம்மை யங்கன மழுதிருந்தாள்
சத்தமாவதே சவமென் றுந் தனியோன் முஹ்யித்தீன் மன்திலென்னிச்
சுத்தமானவன் கிருபையாலே கண்ட விசனங்கள் தீர்ப்போமென் றும் (251)

கவனமிகவைத்தே யழுதாள்மனை காதிர் முஹ்யித்தீன் வந்தேசொல்வார்
தவனம் பெரிதாக விருக்குதம்மா தாயே கிழவிநீர் தண்ணீர்தீரும்
புவனமீதினில் மிஸ்கீன்தாயே பொருக்கு திலைத்தாக மம்மையாரே
சுவனந் தருகுவா னாதிநாயன் துலங்கும் பாணியும் கொணர்மினென்றார் (252)

அந்த மொழி கேட்டங் கம்மையாளு மங்க மிகவாகவே கோபமாகி
யெந்தவூர் காணு மிஸ்கினாரே யானுமழுகிற காலத்திலே
யிந்தச் சாமத்திற் றண்ணீர்கேட்க யார்கா னுமக்கிந்த மதிசொன்னார்கள்
விந்தையாகிய மிஸ்கினாரே விளங்கு நீலாற்றுக் கேகுமென்றாள் (253)

கவனக்கூதுபொலி துலக்கமாகச் சொல்லுவாரப்போ தமூர்தம்போலே
தாகம் பெரிதம்மா விப்போதிலே தண்ணீர்கொண்டுவந்து தாரவிட்டால்
புவனமீ துள்ள வுன்மனையிற் போட்டு மூசல்லாவில் நானிருப்பேன்
கவனமாகவே யொப்பாரியிற் கணக்காய் வருஷங்க ளேழானாலும் (254)

உந்தன் காத்தாலே தண்ணீர் வாங்கி யுடல்தான் குளிரவே பசியுமாறி
யெந்தன் முசல்லாவு மெடுத்தேகுவே னில்லா திருக்கிலே கிழவியாரே
தந்திரங்களை யறிந்துபார்ப்போம் சலிப்பை நீ சொல்லி யழுமென்றாரே
அந்தமொழி கேட்டங் கம்மையாரு மருளுவாளப்போ குதுபுபாவில் (255)

வாது செய்துநீர் தண்ணீர் கேட்டீர் வருஷம் பனிரண்டு தான்சென்றாலு
மோதுக்காரண மோதினாலு முமக்குநான் தாவுமாட்டே
னேது மெனது குணபாகத்தை யிருந்துபாருங்கா ணறிவீரென்றும்
பூதலந்தனி லிரப்பவரே போதுமெனச்சொல்லி யழுதனளே (256)

அந்த நேரத்தி லகவல்கேட்ட அடுத்த மனையாளும் சமுகம்வந்தே
யெந்தவூர் பாவா மிஸ்கினாரே யெழுந்தே யெனதுட மனையில் வாரும்
உந்தன் பசியாற்றி விடுவேனென்றா ளுரைப்பார் முஹ்யித்தீனப்துல்காதிர்
யெந்தன் துணையான மயிலரசே யியம்புறேன் கேட்பா யோர்மையோடே (257)

மீரா முஹ்யித்தீன் தாகந்தீர விருந்தையாள்பணி காத்திலீந்தாள்
நேராய் பசியாறி யானேகுவே னிகழ்த்த நீ வேண்டா நேரிழையே
பூராய் வருஷங்க ளேழானாலும் போட்ட முசல்லாவை யெடுக்கமாட்டே
தாரா தாமுள்ள கிழவியாளே தண்ணீர்கொடு தாகந் தீரவென்றார் (258)

அந்த நேரமே யடுத்த வீட்டா னவள்தன் காத்தாலே யொருபாத்திரம்
சுத்தா னெழிலாகத் தானெடுத்து தண்ணீர்கொண்டுவந்து கிழவிக்கிய
விந்தையாகிய அம்மைவாங்கி மீரான் முஹ்யித்தீன் காத்திலீந்தே
யெந்தவூர்காணும் பாதேசியே யிந்தபிடிவாத முமக்கேனென்றாள் (259)

திங்கள் வதனத்தார் முஹ்யித்தீனும் செப்புவாரப்போ தருமையாக
வுங்கள் சலிப்பென்ன அம்மையாரே யுரையு மெனக்கேட்டார் குதுபுநாதர்
பங்கறையரன கிழவியாளும் பகருவாளப்போ தழுகையோடும்
சங்கைபொருந்திய வென்மகனும் சாக்கு மூந்நூறு பேருமாக (260)

வங்கந் தனிலேற்றிக் கத்தாவாகி வாகாய்ச் சாக்கெல்லாம் விலைக்குவிற்றே
அங்கே யிருக்கின்ற சாக்குமேற்றி யாழிக்கடலிலே வருகும்போது
பொங்குந் திரையிலே வங்கந்தாழ்ந்து போய் பனிரண்டு வருஷமாச்சு
தெங்கண் மகனுக்குப் பேசிய பெண்ணை யிரவில் கலியாணமுடிப்பதாலே (261)

அதினாலெனதுட விசனத்தானு மழுகு மிரவிலே தண்ணீர்கேட்டீர்
மதியோ வுமதுடபிடிவாதமோ வையந் தனிலெந்த வூர் நீரென்றாள்
முதியாள் சொலுமொழி தன்னைக்கேட்டு முஹ்யித்தீனொலி யுரைசெய்வாரே
விதிதான் முடிந்திட்ட வுனதுமகன் விரும்பி வருவான் லுகரொருத்தில் (262)

சடிதில் நீயேகிச் சபைமீதிலே கலியாணந்தன்னை நிறுத்துமென்றார்
அடிக்கும்படியாகச் சுல்தான் சொன்னாலருள்வை யாதொரு பயமில்லாமற்
றடஞ்சூழ் பகுதாது முஹ்யித்தீனின் றன்மே லாணைக ளிடுநீயென்ன
மடமா னுடநீயுந் தானேனென்று வள்ளல் முஹ்யித்தீ னுரைசேய்தாரே (263)

அந்நே ரந்தனிற் கிழவி சொல்வ ளடுத்த வீட்டாளே அடிசண்டாளி
தண்ணீர் கொடுக்காத பிடிவாதத்தால் சதிகள் தான் செய்ய நினைத்தாயடி
பனிரண் டாண்டாகப் போனமகன் பாரில்வருவதுங் கேட்டரியோ
முனது மனமஃதுறுதியானா லுடனே யுரைசெய்வோம் வாடியென்றாள் (264)

ஈதுமொழி கேட்டங் கடுத்தவீட்டாளியம்புவா ளப்போ துறுதியாக
நாதரிவராகத் தோணுதம்மா நாமா ளேகுவோம் வாடியென்றாள்
காதலாகவே யிருபேர்களும் களரி தனில் வந்து பார்க்கும்போதில்
நீதர் சுல்தானும் சபையோர்களு நிதியம்போலுள்ள மாப்பிள்ளையும் (265)

ஏக கூட்டமாய் யிருக்கும்போதி லியம்பினாள் சலாமம்மையாரும்
வாகாப் பிரத்தியும் சபையோர் செல்லி வந்ததேதெனக் கிழவியென்றார்
பூகமாகிய வென்துணைவ னருமையாய் வந்த மகளாருக்குத்
தாகமாய் மெனதுமகன் றன்னை மணஞ் செய்ய முடிவுசெய்தோம் (266)

நாளை லுஹருக்கு மகனும்வாரா னன்றாய்க் கலியாண முடிக்கவேணுங்
காலையாகிய வவன்றனக்குக் கருதி மணஞ்செய்யக் கூடாதென்றாள்
வாழும் சுல்தானும் சபையோர்களும் வையமீதிது புதுமையென்றே
கோழை மன நீங்கி அம்மையாரைக் கொடுங்கா னும்பூசைமோதினென்றார் (267)

எடுத்தார் கசைதனை மோதியார்தா னியம்புவா ளப்போ தம்மையாருந்
தடஞ்சூழ் பகுதாதுத் தேசமாளும் சங்கை முஹ்யித்தீன் மேலாணையாம்
அடிக்க வேண்டாங்கா ணென்னை நீங்க ளவசிய மகன் வருவானென்றாள்
படித்தலம் புகழ் மிசிறுநாட்டார் பகருவா ரப்போ கோபமாக (268)

நாதர் முஹ்யித்தீன் மேலாணை தா னவின்ற வசனத்தா லம்மையாரே
பாது காத்திட வுனையிறையோன் பகா நீ கேளு தீர்மானங்க
லேது வாய்மண நிறுத்திப்போட்டோ மிப்போ துன்மகன் லுகரில் வந்தால்
மதிபோலலங்கார மிகவுஞ்செய்து மணந்தான் செய்குவோ மகிழ்சியாக (269)

விள்ளும்படி போல மகன் வாராவிட்டால் விளக்கமாகவே யூராரெல்லாம்
பள்ளி வாசலி லுனைபழைத்தே படுகுழி வெட்டி யுன்னை நாட்டிக்
கள்ளி நீயென்றே யெல்லவரும் கல்லா லெறிந்துதான் கொல்வோமென்றே
விள்ளு மிதுசேதி தீர்மானித்து விளங்கும் சபையோர்களெழுந்தார்களே (270)

அந்த நேரமே கிழவியாளு மலறி யழுதாளே தெருவீதியில்
விந்தை மிகக்காரி யடுத்தவிட்டாள் விசனந் தான்கேட்டு மதி மறந்தோ
மெந்த வங்கையாலே பனிரண்டாண்டி லிருந்த மகனிப்போ தான்வருவான்
சொந்தக்காரியாய் நீயிருந்தும் துன்பத் திற்கிடஞ் செய்தாயென்றே (271)

வந்து மனைமீதி லொப்பாரியாய் மகன்தா னிறந்ததை மறந்துபோட்டுத்
தந்தை தாயாரை கண்ணீர்விட்டுச் சலித்தே யம்மையா யழுகும்போதி
லந்த மிலிஹக்கன் கிருபையாலே யண்ணல் முஹ்யித்தீ னப்துல்காதிர்
வந்து கடற்கறை தனிலே நின்று வணக்கந்தான் செய்தார் குதுபெலியும் (272)

எந்தன் ரஹ்மானே யாகுதாயே யியம்புவேன் கேளு யாஹூமே
சிம்தை யுவந்துதான் மிசுறுப்பதித் தெருவையான் பார்த்து வருகும்போது
விந்தையாகிய வொப்பாரியாய் விருத்தை யாளுமே யழுதிருந்தா
ளந்த அழுகையின் சலிப்பைக்கேட்டே யவனிதனில் வாக்குக்கொடுத்ததாலே ()

நிக்கா முடிவதை நிறுத்திவந்தாள் நேர்மையுடனுனை லுஹறெருகத்தில்
ஹக்க னருளாலே கிழவிமகன கலியாணம் செய்வதுறுதியாகத்
தக்க பெரியோனே யவன்கப்பலும் சனங்கள் முந்நூறும் சாக்குகளும்
திக்கில் விளங்கவே நீகொடுப்பாய் சிறந்த ரஹ்மானே திருவொளிவே (274)

ஈது வணக்கமாய் குதுபுசொன்ன வியல்பை யறிந்து தானுதிநாய
னேதுவா னப்போ தென்கனியேயுண்மை தவறாத முஹ்யித்தீனே
பூத லந்தனி லிறந்தபேர்கள் புவியில் வருகுவ தெங்குமுண்டோ
நீதரே நீவிற் கடவுமென்று னிக்கா முடிவது லுஹறுக்கென்றார் (275)

வல்லோ னுரைசெய்தான் திரைமீதினில் வலைகள் தான்வீசி யமரோர்களே
சொல்லு மொருமச்சந் தோணுமாகிற்றுலக்குவேன் கப்பல்தானுமென்றான்
அல்லா வருளிய வசனங்கேட்ட யமரோர் வலைவீசி யறித்துப்பார்க்க
இல்லா ததினாலே வங்கத்தூசி யிறையோன் பாலவீ ரியம்பும்போதில் (276)

ஆதி பெரியவன் குதுபுபாலி லன்பாய்ச்சொல்லின அதனைக்கேட்டு
மோதுவா ரப்போ முஹ்யித்தீனு முரிமையாகவே ரஹ்மானேநீ
சீதம் பொருந்திய பகுதாதினிற் செப்பு மொழிபோலக் கேட்கேள்வி
நீதமாகவே கொடுப்பாயென்று நிறைந்த வணக்கமோ டுரைசெய்தாரே (277)

அந்த மொழிகேட்டே யாதிராய னவன்தன் குதாத்தார் கடலைப்பார்க்க
விந்தை யாகிய வொருகப்பலும் விளங்கும் ஜனமுந்நூ றுடுசாக்கும்
சக்திப் பாகவே தானுதிக்கத் தனியோன் முஹ்யித்தீன் மனம்பூரிக்க
அந்த நேரமே யம்மையா று மழுதே யொப்பாரி துடங்கினாளே. (278)

பதம்

ஆதி பெரியவனே நானழுதிருக்கையிலே அழுதிருக்கையிலே
பழுதில்லா தொரு குளிரும் வாசனை அளிமலர்ப்புயன்
கொண்டாரும் பாணி யென்றூர் யானும்சண்டாளி யானவர்க்குத்
தண்ணீர் கொடுக்காமல் யானும்சொன்ன சடத்தைவார்த்தையினால்
சடத்தைவார்த்தையி லெடுத்துரைத்திட அடுத்தபெற்றியாள்பிடித்திழுத்
தென்னை அழைத்தே யேகிடவும் சபையோர்முன் அகவல்நானுதவும்
பன்னிரண்டு வருடம் போனமகன் பாரினில்வருக பாரினில் வருக
ஆறினு லுண்டுந் தேறுநல்மொழி கூறிப்போனவர்
ஜெகந்தனிலிருப்பே யெந்தத் தேசத்துள்ளவரோ
விடியநேரமாகுதே ஊரார் மிகரூபி லழைக்க
மிகரூபு முன்பாகப் படுகுழி வெட்டி விருத்தையாள் தன்னைப்
பெருத்தெறிவாரோ விதிகள்தானுச்சே யெந்தனுடமதிகளாலே யல்லோ

தொங்கல்

என்னதான் செய்வேன் ரஹீமேயென்று மிடைந்தே யழுகவே கிழவியாளும்
அன்ன காலையிற் றானுகவே யழகாத் திரைமீதில் வங்கம்வந்தே
தன்னால் நீலாறும் வந்தேகப்பால் தகுந்த வேட்டையெல்லாம் கொடிமுழங்க
மின்னும் பிரகாசக் கொடியிழுத்தே விளங்கும் நங்கூற மிறக்கினால். (279)

அந்த மிலியவன் குதாத்தென்றே யனேக ஜெனங்களும் கூட்டமானார்
வந்தோ ரனைவரும் கரையிலாகி மகிழ்ச்சி மிகவானார் மிசுறூர்களுந்
தந்தை தாரையா யழுதிருந்த தாலக்கிரியு மகனைக்கண்டே
யெந்தன் மகனுரே கண்மணியே யிடைந்த மனங்களு மகிழ்ந்தேனென்றாள் ()

வங்கந்தனில் வந்த முந்நூற்றவர் வாகா யவரவர் மனைகவானார்
சங்கையாகவே கிழவிமகன் தாயார் மனைவந்தே யிருக்கும்போது
செங்கை யுடாராஜா சபையோர்களும் சிறந்த பெருக்கமாய் வந்துகூடி
இங்கு நடந்திட்ட காரணத்தை யியம்பு கிழவியென் றவர்களோத (281)

இரவிற் பாணிகேட் டியம்பினது மிரப்போர் போல்வந்த காரணமும்
வரிசை யாகிய நாமங்களும் வழுத்தினளப்போ கிழவியாளும்
அறிவாலனைவரும் தேர்ந்துயிர்ந் தேயருள்வாரனைவரு மிறையைப்போற்றித்
தற்ஜா வரிசையும் புகழோங்கிய தனியோன் முஹ்யித்தீன் மகிமையென்றார் ()

அண்ணலார்களும் சபையோர்களு மருளுவாரப்பே குதுபைப்பார்த்து
விண்ணோர் மிகப்போற்று மணிவிளக்கே மீறன் முஹ்யித்தீ னப்துல்காதிர்

கண்ணின் மணியான தஸ்தகீரே காரணமுள்ள சுடர்மணியே
மண்ணில் மீதிலுங்கள்பாத மார்க்கத்தார் காண்ப தெந்நாளோ (283)

ஹக்க னருள்பெற்ற முஹ்யித்தீனைக் கருதியாவரு மிகவேபோற்றித்
தக்கோ னுதவியாற் புவியில்வந்த தழண்ட கிழவியின் மகனார் தன்னை
மிக்க வுடமைக ளதிகம்பூண்டு விளங்குந் தெருக்களிற் பவனிவந்தே
நிக்கா முடித்தார்கள் லுகமெருகத்தில் நேர்மையாகிய வசனம்போலே (284)

இறந்த மய்யித்துயிர்பெற்ற காரணம்

ஈதிப் படிநிற்க முஹ்யித்தீனு மிலங்கும் விருதுகள் தனையணைந்தே
பாதக்குறட்டின்மேல் நடந்துநாதர் பாங்காய் வருகவே நடுத்தெருவிற்
கோதையர் நாலு பெயர்கள்கூடிக் கூக்கூவலாக அழுகக்கண்டார்
நீதர் தானேகிக் கயிர்தாவென்று நிகழ்த்தும் நோத்திலிளையமாது (285)

தந்த தாரையாய்க் கண்ணீரோடத் தனது மனையேகிக் கயிர்வாரியே
முந்து முஹ்யித்தீன் காத்திலிய மனையிலே நீங்க ளழுதீரென்றார்
சிந்தை விசனத்தின் மாதுசொல்வாள் சிந்த மிசுறனிலெளியோர் நாங்கள்
தந்தையார் மட்டும் நாற்குமரைத் தாங்கி வளர்த்தார்க ளிதுவரையில் (286)

இன்னாள் காலையில் மயக்கமுற்றேயிறந்தார் தகப்ப னார்புவிமீதிலே
யென்னசெய்குவோம் நால்வரென்றே யிடைந்தேயழுகிறேம்நாங்களென்றாள்
அன்ன காலையில் குதுபுசொல்வார் அழுகாதீர் நீங்கள் மனம்முடைந்தே
தன்னா லுயிர்வந்தே எழுந்திருப்பார் சங்கையுட னீங்க ளிருங்களென்றார் (287)

அந்த நோத்தி லிசுறாயீலு மகவ லறிந்தவர் வானிலேகச்
சந்திர னழகான வெமனுன்றோ சல்நியாய்விடு முயிரென்றோத
வெந்த னிடந்தனில் கேட்கவேண்டாம் யாரஹீமிடங் கேளுமென்றார்
தந்திர மென்னா வுமக்கென்றோதித் தனியோன் முஹ்யித்தீனப்துல்காதிர் ()

எடுத்தங்கேவினார் கோடாலியோ டிலங்கும் ஜோட்டாவைச் சக்காத்தைத்
திடத்தோடவைகளு மிகவேகியே சினந்தே யெமனுரை யடிக்கும்போதி
லுடையோனிடந்தனி லவரோதி யோங்கி யொருசத்தம் வந்ததப்போ
தொடையில் மார்பின ரப்துல்காதிர் துலங்கு மிஃதென்ன கோலமென்றே (289)

என்ற னுதியே ஆலமீனே யெளிய குமர்நாலுந்தானிருக்கத்
தந்தை யுயிர்வாங்கத் தர்மமீதோ தக்க பெரியோனே நீயுமென்று
ரிந்த நாளினிற் சீமானுக்கோ யியல்பால் மணஞ்செய்ய லாமென்றோதத்
தந்தை யொளிவேனும் குமர்நாலுக்கும் சல்நியாயுயிர் விடுநீயென்றார் (290)

ஈதுமொழி கேட்டங் கிறையவனும் மிசுறாயிலேநீ யுயிர்விடென்றான்
ஏது வாகவு முயிர்விடுத்தே யெழிலாய் குதுபையு மிகவும் போற்றிச்
சோதிபெரியவன் கனிலானார் துஞ்சுங் கிழவனா ரெழுந்தபோதில்
மாதர் நால்வரும் மகிழ்வுற்றோங்கி முஹ்யித்தீனொலி கிருபையென்றார் (291)

அந்த நேரத்தில் முஹ்யித்தீனு மகவலறிந்துதாம் நடக்கும்போது
விந்தையாகிய சோலைகளும் விளங்கு மிசுறுமா நகராம் நீங்கி
வந்தார் குதுபுமே வனவாசத்தில் வாசங் கமகம கமவென்ன
மந்தாம் போலே வளர்ந்தோங்கிய மரத்தினிழலைக்கண்டிறங்கலானார் (292)

இறங்கி முசல்லாவும் தான்விரித்தே யிறையோன் முஹ்யித்தீனப்துல்காதிர்
அறங்கள் பொருந்திய விருதையெல்லா மழகாகவைத்தே துயில்வதானார்
வரங்கடாகிய வொருசன்யாசி வகனிற் பறந்தவன் வருகும்போது
மரமும் பூமியுங் கிடுகிடென்ன வந்தான் சண்டமாருதத்தைப்போலே (293)

மண்டலத்தினி லிவனுரென்றே பகுதாதினிலுள்ளோர் பார்க்குநேரம்
கண்டார் சன்யாசியை மலைபோலவே காரணர் மனக்கோபமாகிச்
சண்டமாருதம் போலேதாவச் சல்தியாய் விட்டார் கோடாலியை
யண்ட னடுங்கவே சோட்டாவையு மறுத்தங் கேவினர் சக்கரத்தை (294)

பற்றி யடிக்கவே யாசாவைம் பாங்காயேவினர் கயிறுன்னை
சுற்றி நொறுங்கிற்றே கோடாலியும் சூழ்ந்தங் கிருந்ததே சோட்டாவுமே
சத்தங்கதரவே சன்யாசியும் தகர்த்து நொருங்கிற்றே திருச்சக்கர
மெத்தி சையவன் வரும்படியா யிழுத்த தேகயிர் மடமடத்தே (295)

இந்த விதமாகச் சன்னுசியை யியல்கள் புரியவே விருதுகளும்
தந்தை தாரையாய்க் கண்ணீர் விட்டுச் சாற்றுவானப்போ கோபமீறி
யெந்த மனுடரு மெனக்குநிரோ வென்ன கோலத்தி னுயுதங்கள்
விந்தையாகிய மலைத்தேவுக்குங் குருவென்று மறிந்திடாமல் (296)

தரையி லெனை நீங்களடிக்க வேண்டாம் தாக்கலோதியே அடியுமென்றான்
முறையாய் நொருக்கியே யாயுதங்கள் முஹ்யித்தீனொலி சமுகம்விட
மறையின் மலர்ப்பாதங்கள் தனையுங்கண்டு மனது நடுங்கியே ரிஷியானவன்
துரையினமகனெங்கே வந்தீரென்று துலங்கும் பாதத்திற் பணிந்துசொல்வான் ()

பதம்

பூமிதனிலெந்த வொலிகளும்புகழ் வாசரேகதம்பணிந்த நேசரே . [சிங்கமே
மானிலத்தனில் ஜீவஜெந்துவெலாம் வாழ்த்தும் தங்கமே யென்னைக்காக்கும்
கானகந்தனிற்றுயிலும் சேதிகள் கண்டறியேனே யிந்தமண்டலத்திலே
விந்தைசேர் வயல்சூழ் வந்தையில் மாதவா அருள் தந்த சாதகா
என்னசெய்குவே னேதுசெய்குவே னெங்கள்நாதரோ யிரையோன்றன் னேசரே

தொங்கல்

மின்னவர் மணியே யுங்களாயுத வரலாறறியேனே யிந்தவையமீதிலே
கோட்டி யாகிய அடியினாலே குலுங்குதே தேகம் படபடத்தே
பேர்ட்ட அடிகளோ போதுமைபா புதியோன் முஹ்யித்தீ னப்துல்காதிர்
காட்டில் யானுமே வாவுமில்லை ககனமீதினிற் பறக்கமாட்டேன்
சாட்டங்கம் செய்தேனுங்கள் பாதம் தயவருள் செய்வீர் குதுபேயென்றான்(298)

ஈது மொழிகேட்டு முஹ்யித்தீனு மிருதய மீதில் தயவுண்டாக
ஆதி பெரியவன் சத்தமும்வர் தருமை மிகவுள்ள குதுபொலியே
யேதுவாகவே குடுக்கைமீதி லிவனைப் பிடித்தங்கே யடக்கஞ் செய்வீர்
வாது மிகச்சொல்வான் தேவுக்காக வையந்தனில்விட வேண்டாமென்றே (299)

திட்டமாகிய வசனங்கேட்டுச் செப்புவாரப்போ சன்யாசிக்கே
யொட்டு வாக்கியம் பேசாமல்நீ யுருதியாகவும் குடுக்கைமீதிற்
பட்டபாடுட னுழையுமென்றார் பகருவா ரப்போ ரிஷியானவன்
குட்டி மலைபோலே யென்சடலம் குடுக்கை தனிலாக விதிவசமோ (300)

எட்டிக் குடுக்கையைப் பார்க்கும்போதே ஈரல் கருகுதே தஸ்தகீரே
கெட்டி யாகிய மலைத்தேவையும் கிளம்பியோர் பாலிற் பிடித்துத்தாரேன்
அட்டியில்லாமல் விடுங்களென்றே அழுதுங்குறைசெய்தான் சன்னாசிதான்
கட்டுங் கயிறென்று ரிஷிமகனைக் கதற விருக்கியே துரும்பாக்கிட (301)

அன்னகாலையின் குடிக்கைமீதி லவனும் புகுதவே மாத்தில்வைத்தே
மின்னும் விருந்தெல்லா மணைந்து நாதர்விரைவின் மலர்பாதங் குரட்டிலேறித்
தன்னால் நடந்தங்கே தஸ்தகீரும் சங்கையாகவே வருகும்போதிற்
முன்னாற் கடல்வந்து தோற்றியதில் முஹ்யித்தீ னெலிதானிறங்கி, (302)

## மஹல்ல தீவுக்குக் கப்பலேறிய காரணம்

திரைமேல் முசல்லாப் பாய்தனை விரித்துச் சிறந்த பெரியவன் குதறத்தாலே
மருவி னசாக்கோல் பாய்மரமாம் வளங்கும் கயிரதை அமராக்கட்டி
வரியின் தோல்களைப் பால்தூக்கியே வாசருடசுக்கான் சக்கராமாய்க்
கரையில் நங்கூரங் கோடாலியாய்க் கப்பல்ஜோடித்தே முஹ்யித்தீனும் (303)

ஆலிம்கா மென்றே நினைத்தாரப்போ வந்தேனகுதாவு மிறைநா னென்றான்
ஆல முஹம்மது போனரு மருமேயுடன் கப்பற்றுனேறியே
மேலோன் குதறத்தாற் காற்றுவீச விளங்குந் திரைமீதில் வங்கமோட
நாலாம் நாளினில் கூருலீங்களு நாதர் நபியுல்லா தேவியாரும் (304)

வந்தங் கிறங்கினார் மணிக்கப்பலில் வசன மடமாது கதிஜாவுமே
சிந்தை யுவப்பான வஜீபனமும் சிறக்க முன்வைத்தார் பசியாரினார்
எந்தன் போரரே யென்றுபோற்றி யிலங்குந் திருமாது ககனிலானார்
சந்திர வதனத்தா ரிறையைப்போற்றிச் சல்தியோடும் வங்கமீதில் (305).

ஆதி பெரியவன் தனைதொழுதே யவன்தன் கிருபையா லிருக்கும்போது
நாதர் முஹம்மது தேவியாரும் நல்லோ ராயிசா பீவியுடன்
மாதாகிய கூருலீங்களும் வந்தாரொடுக்குடன் மணிக்கப்பலில்
நீதர் முஹ்யித்தீன் பசியாறியே நிகழ்த்துவாரப்போ போற்றியார்போல். (306)

எங்கள் முஹம்மது தேவியாரே யியம்புங் கரைசேரத் தூரமுண்டோ
தங்களமுதவாய் திறந்துசொல்லும் சங்கைபொருந்திய தாயேயென்றார்

திங்கள் வதனத்தா ரிஃதுசொல்லச் செப்புவாரப்போ தமுர்தம்போலே
யெங்கள் முஹ்யித்தீ னப்துல்காதிர்க் கிலங்கு மலர்மாது நாளைச்சொன்னர். (307)

செங்கையுடையநல் நவமணியே செல்வரே யென்றுங் ககனிலானர்
தங்கமயமான குதுபொலியுந் தனியோ னிபாதத்தா யிருக்கும்போதிற்
சங்கையாகிய காற்றுவீசச் சார்ந்த திரையின்மேற் கப்பலோடப்
பங்கயப்பதத் தொருமடவாள் பாங்காய் வஜீபனங் காத்திலேந்தி (308)

வந்தார் ஸெயினிபு நாச்சியாரும் வாசங்கமழ்ந்திட கூருலீன்களும்
அந்த மிலியுட கிருபையாலே யழகா யிறங்கினர் மணிக்கப்பலிற்
சந்திர வதனத்தின் குதுபொலியார் சமுகந்தனில் வைத்தவொடுக்கானதைச்
சிந்தை பூரிப்பாய் பசியாறியே செல்வரிருக்கின்ற நேரத்திலே (309)

வள்ளல் முஹம்மது தேவியார்பால் வழுத்துவாரப்போ தமுர்தம்போலே
வெள்ளி யிரவினி லொடுக்குமேந்தி விளக்கவருமான் போற்றியாரே
யுள்ளது சொல்லு மஹல்லதீவுக் கின்னங் கரைசேரத் தூரமுண்டோ
விள்ளுவீ ரென்று தானேதிட விளம்புவா ரப்போ நபிதேவியார் (310)

எல்லா பறக்கத்தும் பெற்றபூவே யெங்கள் முஹ்யித்தீ னப்துல்காதிர்
நல்லோர் நாச்சியார் வருவார்நாளை நவிலுவாரப்போ துலைதூரத்தை
மல்லிகை வாச இருங்களென்று வானின் மதிபோலே ககனிலானர்
வல்லோன் குதறத்தாற் கப்பலோட வாகாய் பதினறு நாளானபின் (311)

திங்கட் கிழமையி லிரவானதிற் சிறந்த பாத்திமா நாச்சியாரும்
சங்கமாகிய கூருலீன்களும் சாரி யெழுபதா யிரங்கள் சூழ
மங்குலுதிக்கின்ற கதிர்கள்போல மாயா பரணத்தின் ஜோதிமின்ன
எங்கும் வாசனை கமகமென்ன விலங்கு மரகதக் கிண்ணமேந்தி (312)

வந்தே மணிக்கப்பல் மீதிலாகி வள்ளல் முஹ்யித்தீன் தமையும் போற்றி
எந்தன் மகனரே யென்கனியே யிரஸூல் முஹம்மது பேரனரே
சந்திர வதனத்தின் தயாபரரே தாங்கள் பசியாறு மெனப்பகர்ந்தார்
கந்தங் கமழ்வாச சொருக்கருந்திக் கவலுத்துவரப்போ முஹ்யித்தீனும் (313)

எங்கள் மாதாவே நவமணியே யியம்பக் கேளுங்க ளொருவாசகம்
சங்கையாகிய மஹல்லதீவு சார்ந்து கரைசேரத் துலைகளுண்டோ
திங்கள் முஹம்மது நபிமகளே செப்புவீரென்று குதுபோதிடத்
தங்கமயமான நாச்சியாருந் தனியோனருளினு லுரைசெய்வாரே (314)

வெள்ளிக்கிழமையி னிரவானதில் மிகுந்தவிருளுடன் புசலுங்காற்றும்
துள்ளியடித்திடும் சுக்குருக்கடல் துலங்கும் படியான திரையினலே
யுள்ளபடியான ஊசிக்காந்த முயர்ந்த மலைரண்டாய்ப்பிரிவுகாணும்
வள்ள லுடகப்ப லப்பாலோட மஹல்ல தீவுமே காண்பீரென்றார் (315)

திங்கள் மணிமுத்து மாலைரண்டு சிறந்த முஹ்யித்தீன் கழுத்திலிட்டார்
செங்கை தனிலொரு கணையாழியுஞ் செல்வர் விரலினி லணிந்துமாதர்
மங்கு லுதிக்கின்ற மீன்கள்போல விளங்கி னாரொரு தாம்பாளமுந்
தங்கமயமான வென்கனியே தகுந்த மலைத்தேவு வருகும்போது (316)

இந்த தாம்பாள மெடுத்தெறிந்தா லுடைந்து தேவது கலங்குமென்ன
அந்த மிலிநபி கலியுமானா ரவர்க ளுடமாலை கணையாழியும்
எந்த நாளினு மணிந்திருப்பீ ரெங்கள் முஹ்யித்தீ னேயுமது
சிந்தை பூரிப்பா யிருமினென்றும் சிறந்த மயில்மாதா மிகவும்போற்றி (317)

வந்தார் ககனமேல் நபிமகளார் வள்ளல் முஹ்யித்தீன் கப்பலோடச்
சிந்துந் திரைமீதி லிருப்தாம்நாள் சிறந்த பெரியவன் குதறத்தாலே
அந்த விரவினிற் புசலுங்காற்று மதிக விருளுமாய்க் கடல்மீதினிற்
சந்திப்பாய்வரு முக்கலாலே தனியோன் முஹ்யித்தீன் மணிக்கப்பலும் (318)

மேலே யுயர்வது மலைபோலாக விளங்குந் திரைமீதில் வங்க மோடச்
சோலை புகுதாது முஹ்யித்தீனும் துலங்கு மனதிலே பயமதானார்
ஆலம் படைத்திடு மாதிநாய னருளினா னப்போ குதுபொலிக்கே
தால மீதிலே தீனோரெல்லாம் தங்க ளுடநாமம் சொன்னால் (319)

ஏகிப்பறக்குமே புசலுங்காற்று மெல்லா வொலிமார்க்கு மேலொலியே
வாக ருடவங்கம் விரைந்தோடுமே மனமதிற் பயம்வேண்டா மென்குதுபே
யூக மாகிய வசனங்கேட்டங் குவரி மேலாக வருதும்போதில்
ஏக னுரைபோலே ஊசிக்காந்த மிலங்கு மலைரண்டாய்ப் பிரிவுகாண (320)

மல்கி மணவாச ருடையவங்கம் வாரி தனிலோடிக் கரையுங்கண்டே
நல்லோர் முஹ்யித்தீ னப்துல்காதிர் நாத ரிறங்கியே மஹல்லதீவில்
வல்லோன் கிருபையா விருதணைந்தே மலரின் பாதத்தைக்குறட்டிலேற்றிச்
சல்லல் லாநபி திருப்போரும் சங்கையாகவே நடக்கும்போதில் (321)

மஹல்லதீவு மடத்தில்வந்திறங்கிய காரணம்

காவுந் தருவளர் பூஞ்சோலையும் கதலி நாரத்தை மகிழ்தேக்குப்
பூவும் வாசனை கமகமென்னப் புதிய மடமென்றங் கெதிர்கண்டார்
மேவுந் தவத்தின ரதிலிறங்கி விரைசேர் முசல்லாவுந் தான்விரித்துச்
சோபிதமுள்ள விருதையெல்லாந் துலங்கும் படிவைத்தங் கிருக்குநேரம் (322)

அன்ன காலையில் மஹல்லதீவி னரசன் மகளுடன் பாங்கிமாரு
மின்னு மாபர ணாதிபூண்டு விளங்கும் யகலவத்தி போலாகவு
முன்ன மலர்ச்சோலை வாவிமீதில் முழுகித் தலையைத் துவர்த்தும்போதிற்
றன்னா லரசியு மடத்தைப்பார்க்கச் சந்திர னுதயம்போற் குதுபைக்கண்டாள் ()

எந்த னருமையின் பாங்கிமாரே யிந்த மடத்தினி லொருசன்யாசி
சந்திர னுதயம்போற் றோன்றுதடி தரணி தனிலுள்ள குலதெய்வமே
வந்தங் கிருப்போரைப் பாதம்போற்ற வாருங்கள் நீங்கள் தாதியென்று
அந்த நிமிஷமே மாதரெல்லா மருகிலே நிற்க வாசிசொல்வாள் (324)

அம்மா ளெனதுட பாங்கிமாரே யண்ணல் கழுத்திலே கிடக்குமாலை
இம்மாத்திரமென்றே விலைகள்பார்த்தா லிந்தப் புவிகளும் காணுதெடி
செம்மல் விரலாழி யொன்றுக்கேதான் தீவார் மதிக்கவும் கூடாதம்மா [ருள்
எம்மாத்திரம் பேர்கள் பணிந்திட்டாலும் யார்க்கும் கைலர்சம் கிடைக்குமென்

அன்ன காலையிற் பாங்கிமார்க ளாசி யுடன்வந்தே குதுபுயாலில்
மின்னுமலர்ப்பாதம் தன்னைப் போற்றி விளக்கந்தான் செய்வா ளரசன் மக
ளென்னும் குலதெய்வ மணிவிளக்கே யிறையோ னருள்பெற்ற தயாபரரே
யுண்ணி லத்தினி லுங்கள்பாதம் வணங்கிக் கைலாச பதிபெற்றோரும் (326)

பதம்

எங்கள் தெய்வமே சங்கைபொருந்திய விருதயக்கனியே
நவமணியே தவந்தங்கிய திருவே நீங்களெவ்விதம்
எவ்வித மிவ்விடம் வந்தீர் கனியே
சங்கையாகிய ஊர்பேர் தனைத்தயவருள்புரிவீர்
கதந்தருவீர் மதவிளக்கும் தெய்வமே நாங்கள்
தையலாருமைப் பணிந்தோம் புவியில்

தொங்கல்

மாதர் பணிந்தோதும் வசனங்கேட்டு மவுலுவாப்போ முஹ்யித்தீனும்
பூதல மீதி லூர்வசிகள் புகலக்கே ளுங்கள் திடமாகவே
சீதம் பொருந்திய பகுதாதினிற் சிறந்த முஹ்யித்தீ னிவிடம் வந்தேன்
மாதரே யிந்த மஹல்ல தீவு வாலாரோதுமென் றுறை செய்தாரே. (327)

வரிசையாகிய வசனங்கேட்டு மடமானுரைசெய்வாள் வணக்கமாக
அறுபத்து நாலு தீவுக்கெல்லா மரசர் தானுக மெனதுதந்தை
குருவதாகிய சன்னுசுடன் குவலயந்தனி லேர்மையாகப்
பெரியதாகிய மலையின் றேவைப் பிரியந்தான்கொண்ட விபரங்கேளீர். (328)

எங்க ளுடதீவி லொருகோவிலு மேதுவாகவே தானிருக்கு
தங்க மலைத்தேவுக் குயர்ந்தமேடை யழகு மிகுதா யிருப்பதுண்டு
சங்கை யாவரு மலைத்தேவினைச் சாஸ்டாங்கஞ் செய்கிறு ரத்தேவுமே
திங்கள் வதனமா ரொருமாதினைச் சிறைகள் வாங்குதே வருஷத்தோறும். (329)

வருஷந் தவறாமல் சிறைகொடுத்து மனக்கோ பம்வா மலைத்தேவுக்கும்
கருமை யபிஷேகந் தானுஞ்செய்ய ஐந்நூறு சன்னு சிருக்கிறார்கள்
பெருமை மிகவுண்டுந் தேவினுக்கும் பேசநாவுண்டோ குலதெய்வமே
யுருவையாய் நாங்கள் நடந்திட்டாலு முண்மை யணுவில்லாமலைதேவையா. (330)

அந்த மலைத்தேவுக் கறுபத்துநா லமைச்சருட செல்வி சிறைகொடுத்தா
ரிந்த நாளினிற் றேவுக்காக வென்ன சிறைவைக்க மனதென்னியே
மந்திரி மார்களுந் தந்தையாரு மனது வருத்தமோ டிருக்கிறார்கள்
சந்திர வதனத்தின் தயாபரரே தையலென்னவிதி யிஃதோவென்றாள். (331)

அன்ன காலையில் முஹ்யித்தீனு மருளுவாரப்போ மகிழ்ச்சியாக
மன்னன் மகளாரும் பாங்கிமாரு மனேக ளேகென்றார் தஸ்தகீருஞ்
சொன்ன வசனம்போற்றோகைமார்க டுலங்கு மவர்களின் மனைகள்சேர்ந்தார்
என்னு மிறையவன் கிருபையாலே யேகன் குதுபுதா மிருக்கும்போது. (332)

மஹல்லதீவிற் கோய்யாக்கனி கோய்தகாரணம்

வல்லோனருள் பெற்றமுஹ்யித்தீனும் வாகாய்விருதெல்லாமெடுத்தனைத்தே
நல்லோர் பாதத்தின் குட்டிலேறி நகர்சோ தனைப்பார்க்க வேண்டுமென்றே
சல்லல் லாஙபி போனரும் சங்கையாகவே வருகும்போதிற்
செல்லுஞ் சாலையிற் கொய்யாமாஞ் சிறந்த பெருக்கத்தின் கனியைக்கண்டார்.

அண்டர் போற்றிடு முஹ்யித்தீனு மழகா யொருகனி கொய்தபோதில்
கண்ட வெகுதியு மோடிவந்து கனியேன் கோய்தீரென் றடிக்கலானான்
வண்டன் மறுபடி காமேரங்கையில் மாம்போலவன்கையும்
நின்று யோசித்தான் காவர்க்கா னீதர் மனக்கோப மிகுதமானார். (334)

அண்ணல் முஹ்யித்தீன் கோபத்தாலே யவனி மலைகடல் விருட்சங்களும்
விண்ணோர் பதியெல்லாங் கிடுகிடென்ன மேலோ னுடசத்த முண்டாயின
கண்ணின் மணியான வென்குதுபே கல்புக்கனியான மணிவிளக்கே
எண்ணி மனதிலே கோபமான வியல்பை மகுபூலிர் பாருமென்றே. (335)

இறையோ னுரைகேட்டுமுஹ்யித்தீனுமிலங்குமகுபூலினெழுத்தைப்பார்க்க
தருவின் கனியொன்றைக் கொய்வாரென்றுந் தனித்து எகுதிவந்தடிப்பானெ
இரஸூல் முஹம்மதுநபிபோரு மிலங்குமெழுத்திருந் தழியக்கண்டே [ன்றும்
மறையோர்மிகப் போற்று முஹ்யித்தீனும் வல்லோன் பாமென்றுஷுகூறு
[செய்தார். (336)

பெருமை மிகவாகித் தஸ்தகீறு புதியோனவனுட பண்பாலென்றே
மாம்போ லிருக்கின்ற வெகுதிகையை வாசர் தடவியே நேர்த்தியாக்கித்
தருவின் கனிகொய்தகாரணத்தைத் தனியோன் குதுபெண்ணி நிற்கும்போதி
லரச ரிடம்வாரு நீரெனவே யதிரும்படி பிடித்திழுத்தான். (337)

மன்னர் மிகப்போற்று முஹ்யித்தீனும் வழுத்தினாப்போ யெகுதியோடு
மென்றன் மடிபிடித் திழுக்கவேண்டாம் யானும் பகுதாது மிசிக்கினுகும்
உன்னூர் நடப்புகள் யானறியே னொருவன் தோப்பென்று மறிந்திடாம
லென்னைப் படைத்தவ னுடசோதனை யெகுதியே நீயு மடிவிடென்றார். (338)

தால மீதுள்ள வெகுதி சொல்வான் தர்க்கம் சொன்னால் விடுவதில்லை
மாலா ராசர்பால் வாருமென்றான் முஹ்யித் தீனொலி யுரைசெய்தார்கள்
மேலா யொருகனிக் கேழுகனி விளக்குவே னென்றன் மடிவிடென்றார்
சோலைதனில் நின்றே கொடுமினென்று துலங்குமடிவிட்டே யெகுதி நின்றான்.()

சொன்ன பிரகார முஹ்யித்தீனுஞ் சோளிக்காவினிற் கனியெடுத்தே
மினனுங் காத்தினு லெகுதிக்கிய வியம்புவா னப்போ கோபமாக
இன்னு ளுமக்கிந்தக் கனிகலேதிங் கெந்தக்காவினிற் கொய்தீரென்றார்
என்னும் பெரியவன் கிருபையாலே யிலங்குஞ் சோளியா தனைப்பாரென்றார். ()

ஆலம் பதினெண் ணாயிரமுங் கண்டானாழிக்கடலேழும் வானம்பூமியும்
மேலா யிருக்கின்ற சோலைமீதில் விரும்பிக் கனிகொய்த காம்புங்கண்டான்
தாலங் தனிலுள்ள தெய்வமென்றே சாஸ்டாங்கஞ் செய்தே யெகுதிக்காபிர்
கால விதித்தானோ வுமையடித்தேன் கண்ணின் மணியான தயாபரரே (341)

எந்த னுடதெய்வ நீங்களாகு மெனக்கு மறுகெதி புவியிலில்லை
யுந்தன் காரண மறிந்திடாம லோங்கியடித்தேனே பாவியானும்
சிந்தை கலங்குதே மணிவிளக்கே தெய்வந்தனக்கெல்லாந் தவபதியே
எந்தன் பிழை பொறுத் தருளுமென்றே யெடுத்தானோட்டமு மனைவிக்கோத ()

வந்து மனை மீதிர் காவற்காறன் வழுத்துவானப்போ மனையாளுக்கே
எந்தன் கண்ணாடி யிளங்குயிலே யிருக்கு நமதிட தோப்பானதிற்
சந்திர வதனமா யொருசன்னாசு தாகத்துடனொரு கனியைக்கொய்தார்
அந்த நேரமே யானுமேகி யடித்தே னோடி கரத்தினாலே (343)

மாம்போ லென்னதுகை நிற்கும்போது மடியைப்பிடித்தேனே மதியில்லாமல்
அறங்கள் பொருந்திய தவத்தினரு மழகாய் கனியேழ தருவேனென்று
ருரைபோல் கொடுமென்றே கனிகளேழு மொழுங்காயெனதுட கரத்திலீந்தார்
சிறந்த கனிகொய்த தோப்பெங்கென்றே சிறந்தசோலியா தனைப்பாறென்றார் ()

கண்டே னதிசயங் கண்ணாட்டியே கவலமுடியுமா விளமயிலே
மண்டல முள்ள தோப்புகளும் வானம் பூமியு மலைகடலுங்
தண்டலை மீதிற் கொய்தகாம்புந் தான்கண்டு போற்றி வந்தேனென்றாள்
கொண்டாள் கோபம் யெகுதிமாது கூறுவாளப்போதவனை நோக்கி (345)

எந்த வூருள்ள குலதெய்வமோ வேந்தா னவரைநீ யடித்தாய்பாவி
இந்த நாளினிற் மதிகெட்டோனே யியல்புதா னில்லா வெகுதியேநீ
யுந்தன் கரத்தைதான் காண்பியென்றே யோங்கித்தறித்தாளே வாளினாலே
தந்த தாரையா யவனழுகத் தைய லெழுந்துதாள் காவில்வந்தே (346)

கனிகள் மிகக்கொய்தே யாறுதட்டிற் கல்பு குளிரவே யெகுதிமாது
மினிதாய் மலர்களு மேலேவைத்தே யெழுந்தாள் கணவனு மைனரும்மாய்
மனதி லின்புற்றே குதுபைத்தேடி வந்தாளவளுட கண்ணீரோட்க்
கனமும் பொருந்திய முஹ்யித்தீனைக் கண்டுமலர்ப்பாதம் பணிந்துசொல்வாள் ()

## பதம்

எங்கள் தெய்வமே தங்கள் மேனியில்
எப்படி அடித்தான் மடிபிடித்தான் கடிமலரின்
தருவே நாங்கள் ஏழைகள் ஏழைகள் தனைக்காப்பீர் மதியே
ஏழையென் னுட கணவன் செய்பிழை யெந்தலை விதியோ
அவன் பதியோ சுவனமதித்திருவே நான் என்செய்வேன்
என்செய்வேன் இருதயக்கனியே.

கஞ்சமாமுக வஞ்சிகணவனைக் கைதனைத் தறித்தேன்
புவிதனிலே தவந்தங்கிய தெய்வமே யென்ன காலமோ
காலமோ அறிகிலேனே தெளிவே
பஞ்சபாதகன் என்கணவன் குற்றம் பாலரே பொறுப்பீரே
பாரினிற் பாலனருள்வீர் மணியே.

## தொங்கல்

இந்தவிதமாக வெகுநிமாதங் கிடைந்து மனம்மாடி யழுகும்போதி
லந்த மிலியுட முஹ்யித்தீனு மருமையாகவு முரைசெய்தார்க
ளுந்தன் கணவரின் காமனைதை யோங்கும் வாளினுற் றரித்தாயென்று
விந்தை யாகிய வெகுதிகையை விளங்கும் படியாகப் பொருத்தினர்கள் (348)

அன்ன காலையில் யாவர்களு மருமையாகவே கலிமாச்சொன்னர்
கனனுற் றெருழ்கையு முற்றியல்புஞ் சங்கையாகவே மிகப்போதித்து.
மன்னர் மிகப்போற்று முஹ்யித்தீனும் வாகா யிசுலாத்தி லானபேரும்
என்னும் பெரியவன் கிருபையாலே யிலங்கு மனைவந்தே யிருக்குநாளில் (349)

## மஹல்லதீவில் தேவைப் பிடித்துக் கூசிலடைத்த காரணம்

காவு மிகவுள்ள மஹல்லதீவிற் கனக முடிமன்னன் வகடனையே
தேவு தனக்காகச் சிறைகொடுக்கத் தெருக்க ளலங்கார மிகவேசெய்து
பூவினுற் பந்த லொருசாரியும் புதிய காவணம் விருந்துகளும்
சோபிதஞ் செய்தே மணிமாடங்கள் துலக்கி ஐந்நூறு சன்னூசுடன் (350)

அறுபத்து நாலு தீவார்களு மாசன் மணிமாடந் தனிலிருந்தே
திரையின் மணிமுத்தா யிலங்குமான சிறந்த குயில்மாதை நீராட்டியே
கருமுகிற் கூந்தல் தனைவகிர்த்து கனக்க மணிமுத்து மாலைகோர்த்து
நிரையிற் கதிர்போலே துயிலுடுத்தி நீணி லம்புகழ் மாதினுக்கே (351)

மதிபோற் றிலதமும் கொடுத்தாள்மாது வாசம் பரிமள மிகத்திமிர்ந்து
கதிரின் பிரகாசம் பளபளென்னக் கழுத்து தனக்கான வயிரமிட்டாள்
நிதியி லுயிர்கதிர் மூக்குநத்து நேரிழைக்கா ன்மணிமாலையும்
பதியிற் பகல்வற்றி போட்டதுபோற் பலவன்ன மாளி யணிந்தனளே (352)

எழுந்தாள் சந்திரன் போலாகவே யிருந்தாள் பல்லக்கி லழகிலங்கக்
குனிர்ந்த மடமாதர் கவரிவீசக் கோதை மயிலாளு மிருக்கும்போது
பழுதில் லாதொரு மகனைநோக்கிப் பாரிலசானுந் தேவியாரும்
விழுந்தங் கலறியே மனதுநொந்து விசனமிகவாகிப் புலம்பினரே (353)

அன்ன நடைமாதே யூர்வசியே யவனி தனில்வந்த கனிவர்க்கமே
இன்னலுன்னையே தேவுக்கிய விந்த விதிகளா வாங்கிவந்தோ
மென்னகாலமோ விளமயிலே யிலங்கும் படியான மதிமுகமே
கன்னிலை யுள்ள பாலகியே தாங்க ளுயிர்வைத்தா யிருக்கவேணும் (354)

பதம்

தங்கமே நீமயிலே தங்கமே நீகுயிலே தங்கமே
தங்கமே நீதங்கமே நீயென்கனியே யூர்வசித் தங்கமேநீ

சங்கையுள்ள மானேயிங்கிதத்தேனே திங்கள் முகத்தாளே பங்கயத்தின்பாவே
புங்கயத்தின் பாலகியே பாரிலுனக் கிதுவிதியோ

அன்னநடைமாதே யுன்னை வளர்த்தோமே யென்னுங்கதிர்போலே மின்னும்படி
மானே தன்னுங் கதிர்மாதே யுன்னைவிதிவசமோ தேவருந்த

வஞ்சிக் கொடிமானே யின்சொல்லுனுக்தேனே கொஞ்சுங்கிளியாளே ரஞ்சிதத்
பாவைரஞ்சிதமே யென்மயிலே நானுனையா தானினைக்க [தின்

என்செய்குவோம்பூவியில் என்மகளே யூகியுன் முகத்தைப்பார்த்தேயுருகிறோமே
யாங்களுருகிறோமே யுருகிறோமே யுலையிட்ட மெழுகதுபோல்

தேவுவரும்போது நாவுளறுவரையோ பாவினையோ தாகத்தேவருந்துமோதான்
தேவருந்த வுனைவளர்த்தோம் தெள்ளமுதமான கண்ணே

பெற்றவயிறுதானும் பற்றியெரியுதே யெத்திசையில் நாங்கள் எப்போதுனைக்
எப்போதுனைக் காண்போமோதான் இளமயிலே யூர்வசியே [காண்போம்

தொங்கல்

இந்தவிதவாக விருபேர்களு மிடைந்து மிகவாடி யழுகும்போதில்
மந்திரிமாரோடு சன்னாசுகள் வாகாயமர்த்தியே மதிகளோதிச்
சந்திர னழகான பல்லக்குமேற் றையல் தனைவைத்து சகலோர்களும்
அந்தி சாயலா யெழுந்தராபதி லைந்நூறு சன்னாசு முன்பிலாக (355)

பேரி நவுரிகள் கிடுகிடென்னப் பிடியுமெக்காள மடமடென்னத்
தாரை முருடுகள் துந்துமியுந் தம்பூர் மேளங்கள் சொலித்துவர
வாரி முழக்கமாய் வருகும்போதில் வள்ளல் முஹ்யித்தீ னப்துல்காதிர்
தெரிவதாகவே விருதணிந்து சிறந்த மலர்பாதக்குறட்டிலேறி (356)

வந்தார் முஹ்யித்தீ னண்டைதாம் வாரிபோலான கூட்டத்தூடே
சந்திர னுதயப்போலே முகமிலங்கத் தனியோன் குதுபொலி வருகுகோம்
மந்திர மோதுஞ் சன்னாகறன் தான் வாகா தமைநோக்கி யுரைசெய்குவார்
எந்த நகரத்தி லுள்ளவரோ வெங்கேதா னிப்போ வந்தார்களோ (357)

வானின் மதிபோலே மலர்முகமும் வாலகதிர் மேனித் திருவழகு
மேனூர் சுவனத்தின் குலதெய்வவோ வென்றே மிகப்போற்றி சன்னாசுசொல்ல
மானூர் தன்னையே பவனிசுற்றி மலையின் தேவுட கோவில்வந்தார்
வானின் கதிரவ"னடைத்தபிற்றை மத்தாப்புடனல்ல தீவெட்டியும் (358)

சந்திப்பாகவே மிகவொளிரத் தைய லானையங் கிலக்கிவைத்தே
வந்த சன்னாசு ஐந்நூற்றவர் மலைத்தே வுடகோயிற் றுன்புகுந்து
விந்தையாகிய விளக்குகளும் விளங்கும்படியாக மிகப்பொருந்தி
யந்த சாகிட முத்தினாலே யழகாய் மணிமேடை சிங்காரித்தே (359)

வாச மலர்களு மிகத்திமிர்த்து மயிலார் தனையுமே யதின்மேல் வைத்துப்
பூசை புனர்சார மபிஷேகமும் புகழ்சியாகவே மிகவுஞ்செய்தே
கூச லாகாமல் நரபலியர்க் கொடுத்தார் துருவையி லைந்நூறுமே
காஜத் தாய்நின்றே சன்னுசெல்லாம் காத்தாற் கும்பிட்டே யுரைசெய்வார்கள் ()

உத்தன் சன்னுசை யோதிடாதே யூரிலே வந்து சாடிடாதே
வந்த பெயர்களை நொறுக்கிடாதே மாட கூடங்கள் தகர்த்திடாதே
யெந்த நாளிலும் தஞ்சமாக வெங்கள் தனைக்காப்பாய் மலைத்தேவையா
சொந்த அடிமைகள் தன்னை காத்துச்சுகமாய்ச் சிறைவாங்கிப் பேரிவீரென்றே ()

பணிந்தே யனைவரும் வெளியிலாகிப் பாங்காயுரைசெய்தார் சன்னுசெல்லாம்
அணியில் மிகநிற்குங் காவற்காரர் அடைப்பாய்கதவென்றார் சகலோர்களும்
மணியின் மதிச்சோதி முஹ்யித்தீன் வாச லருகாமை வருகும்போது
தொனியா யுரைசெய்தான் காவர்காரன் துலங்குஞ் சன்னுசே யெங்கேபோகிறீர்

காத லாகநீ ரேகினுலோ கனத்த மலைத்தேவு விடுகாதும்மை
யேது வாகவே திரும்புமென்றே யியல்பா யவனோதக் காவற்காரர்
ஞதி யருளாலே யவன்கண் ணுக்கங் ககலல் தெரியாமற்புகுந்தாரப்போ
போதா வுள்ள கதவடைத்துப் பூட்டினன்ஜன மோட்டமானார். (363)

அன்னே ரத்தினிற் றீவோரெல்லா மவாவ ருடமனைகள் சேர்ந்து
தன்னு லவாவர் கதவடைத்துச் சாஷ்டாங்கம் செய்தே யிருக்கும்நேரம்
மன்னர்கள் போற்று முஹ்யித்தீனோர் வல்லோன் கிருபையார் கோவில்மீதில்
மின்னு முசல்லாப் பாய்விரித்தே விருத்தெல்லாம் வைத்தேயிருக்கும்போது. ()

ராசன் மகளுமே கீழிறங்கி நாதர் முஹ்யித்தீன் சமுகம்வந்தே
வாச மலாடி தன்னைப்போற்றி வணக்கமாகவே யிருந்துவாடி
நேசர் முகனோக்கிக் கண்ணீரோட்டி நிகழத்தினுளப்போ தூர்வசியும்
தேசந் தனக்கெல்லா மணிவிளக்கே தெய்வ சன்னுசே யெங்கேவந்தீர். (365)

## பதம்

எந்தன் தெய்வமே யிந்தா லயத்தினி லெப்புடிவாலா
மனம்தியே கனந்தங்கிய திருவே நானேழையாள்
ஏழையாள் அறிகிலேனே கனியே.

தேசமீதுள்ள தெய்வங்கள் தாமொன்றுந் தேவுதானெண்ணுமோ
அதம்பண்ணுமோ பதந்தொழுமோ அறியேன் தகித்தருவே
தெருவே திருவடியே மணியே.

மடத்தில் நான் கண்ட மன்னவர்க்கென் விதிவருகுமென்றறியேன்
புவிதனிலே தவந்தங்கிய சுயரேயெங்கள் வள்ளலே வள்ளலே
மணிவிளக்கே திருவே.

தீதுசெய்திடுந் தேவையடக்கித் தேசங்கள் தனிலே
புவிமீதிலே தவங்களுண்டோ மதியோ யென்றன் சிந்தையிற்
சிந்தையிற் றியங்கிறேனே கனியே.

## தொங்கல்

அண்ட கோளங்களெட்டுத்தீவு லடங்கா மலைதேவுக் கெனவளர்த்தா
ரொன்று யுங்களை வளர்த்தாரென்று முலகத் தனில்மாது மறிந்தேனில்லை
சண்டாள ஞன காவற்காரன் தள்ளி யடைத்தானே குலதெய்வமே
வண்டன் மலைத்தேவு முமதருமை வழிபா டறியுமோ கண்மணியே. (366)

இருபேர் தனையுமே தேவுக்காக வேதக் கடவுள ரெழுதினரோ
பொருமை தானுள்ள நவமணியே போகநாம் செல்ல வழியைக்காணே
மீருங்களீஸ்பா ணுண்டுவென்று ளியம்புவா ரப்போமுஹ்யித்தீனும்
வரையின் மலைத்தேவு நமதுபாலில் வந்து படும்பாட்டை அறிமினென்றூர். (367)

உரைகள் மிகவோதி முஹ்யித்தீனு முடையோன் வணக்கமாயிருக்குமோ
மிறையோ னருளினுல் சுவனத்திருந் திறங்கினர் கோயிலி லி நமாதர்கள்
திருவின் முஹம்மது போர்கண்டு செப்புவாரப்போ யிருபேர்கள்பால்
மருவின் குழவின்மாதே நாம்மென்ன மரியமாசியா நாங்களென்றூர். (368)

எங்கே யிரவில் வந்தீரென விறையோன் குதுபொலி கேட்டபோதிற்
சங்கை யாகிய மாதர்சொல்வார் தனியோனுத்தரங் கொடுத்தானிப்போ
தங்கு மலைத்தேவு வருகும்போதிற் சகலதீபமு மவர்க்கிடாம [யென்று
லெங்கள் காத்தாலே தூண்டச்சொன்ன னிறையோன் முஹ்யிதீன்கனியே

அந்தமொழிகேட்டு முஹ்யித்தீனு மவன்ற னுதவியென் றிருக்குமோம்
விந்தையாகிய மலைத்தேவது விரிட்டெழுந்தது சத்தம்போட்டே
கந்தரங்களுங் கிடுகி டென்னக் கதறிவந்தே மலையைநீங்கிச்
சந்திப்பாகிய மாங்களெல்லாம் தானே மிகச்சாய வாலானதே. (370)

## பதம்

வருகுதேதேவு மலையைவிட்டும் வருகுதேதேவு
மடமடத்தே வருகுதேதேவு மண்டலங்கிடுகிட அண்டங்களதிரிடக்
கொண்டல் மிடிபோலே குமுறிய சத்தமாய் வருகுதே தேவு

அறுபத்து நால்தீவுக் கதிகாரி நானென்று மைந்நூறு
சன்னசை யடிக்கிறேன் பாரென்று வருகுதே தேவு
தூசிய தானது வானத்தி லேகிடச் சோலைமாங்களும்

தலைசுற்றி யாடிட வருகுதே தேவு
காட்டிலே மான்மரை கண்டதுமோடிக் கதறியசத்தமும்
பதறிய மேனியாய் வருகுதே தேவு

இரைச்ச லாகவே வருகும்போதங் கேங்கி யொருமூச்சு யெறிந்ததப்போ
பறிக்கலாகவே கதவைப்பூட்டும் பாவையாள லறியே மயங்கிவீழ்ந்தாள்
திருக்கண்ணுடையவன் முஹ்யித்தீனும் சிறந்ததாம்பாலங் தனையெறிந்தே
சுறுக்கில் விருதெலாமெடுத்தேவினர் தொடர்ந்தங்கடித்ததே மலைத்தேவையே.

சோட்டாத் தடியுமே சோலித்தடிக்கத் துலங்குங்கோடாலி புயத்தில்வாங்கக்
கோட்டியாய் வருந்தேவானதைக் கொடுத்திற்றே பூசை திருச்சக்கரம்
காட்டா தடித்தே கோடாலியும் கதறிதேவது மயங்கிவீழ்த்தப்
பூட்டியாகவும் கயிறூன்று பிடித்தங்கிழுத்தே மடமடத்தே. (372)

இந்த விதமான வடியினாலே யேங்கியழுததே தேவானது
தந்த தாரையாய்க் கண்ணீர்விட்டுச் சாற்றுமதுதானும் கோபமாக
வெந்தவொலிமார்கள் வந்திட்டாலுமென்னோ டெதிர்ப்பவ ருலகிலுண்டோ
அந்தமிலியருள் முஹ்யித்தீனு மவர்கள் தனக்குநா னடிமையென்றும். (373)

எண்ணிமனதிலே தேவானது மியம்பு நோத்தி லாயுதங்கள்
மண்ணில் மீதிற் றேவானதை மாட்டுங்கோடாலி மடமடத்தே
தன்னாற் கதறவே யடத்திழுத்துச் சமுகங்கொண்டுவந்து விட்டபோதிற்
கண்ணால் முஹ்யித்தீனொலியைக்கண்டு தங்கள்தான் போற்றிதேவுசொல்லும்

எல்லா வொலிமார்க்கு மேலொலியா யிலங்கு முஹ்யித்தீ னப்துல்காதிர்
பல்லாயிரங்கோடி யுயிர்கள்யாவும் பாங்கா மிகப்போற்று மணிவிளக்கே
வல்லோ னருள்பெற்ற தயாபரே வாசம்பொருந்திய நவமணியே
சொல்லை யறிந்தாலு மிந்தப்பாதை துசும னொருகாலும் வரமாட்டேனே. (375)

பதம்

வருதை வாழும் பதிவிட்டேகி வந்த தறியேனே யெங்கள் வாசத்தருவே
ஆயுத மடிநான் பொறுத்திட ஆலமீதிலே யுங்களடிமை யேலுமோ
தங்க வாசரே யெனதுதேகங்கள் தானுநோகுதே மனமீறியுருகுதே

போதும் நான்பட்ட பாடுகளெல்லாம் புவியின்மீதிலே மன்னர் போற்றும்
நான்தீவிலே சிறைவாங்கிய குற்றம் சோலாச்சுதே யென்திரேக நோகவே
வாடுதேமனந் தேடுதேக தம் வாக்கருள்புரிவீர் மலர்வாசத் தருளே

தொங்கல்

ஈது வசனமுந் தேவோதிட இறையோ னுரைசெய்தான் குதுபுபாலிற்
பூதலந் தனிற் பெரியோர்களைப் புகலால் மிகவேய்த்துப் போனதேவு
நாதரே கூசி லடையுமென்றே நவிலுவா ரப்போ முஹ்யித்தீனும்
ஏதும் பேசாமற் றேவேநீதா னிந்தக் கூசினில் நுழைகவென்றார் (376)

எட்டிக்கூசினைத் தேவுநோக்கி யிடந்தங்கழுததே புலம்பியோதும்
குட்டி மலைபோலே யென்சடலம் கூசிற்புகுதாதே தஸ்தகீரே
பட்ட பாடுக ளெனக்கேபோதும் பாலை வனம்போறே நாயகமே
அட்டதிசையிலேயுங்கள் பேரையடியேன் மிகப்போற்றி இருப்பேனென்றான்

ஈது மொழிகேட்டுக் குதுபொலியு மிருக்கென்றுறப்போ தேவானதை
ஏது வாகவே யாயுதங்க ளிருக்கத்தேவையுந் துரும்பாக்கியே
நாத ருடகூசாத் தனிலடைத்து நல்லோர் முத்திரை லைவத்தபோதில்
மாத ராசியா மீரியம்பீவி வல்லோன் சுவனத்தின் பதியிலானார் (378)

அங்கே ரத்தினி லாசமாது மாயாசந் தீர்ந்து தானெழுந்தே
யென்றுங் கிருபையர் முஹ்யித்தீனி னிலங்குந்திருபாதந் தனைப்போற்றி
முன்னர் முஹம்மது நபிகலிமா முறையாய்த் திருத்தமாயுவந்தோதியே
தன்னால் வணங்கியே யிறையைப்போற்றிச் சங்கையர்களே யிருக்குநேரம் (379)

அன்றங்கிரவுதான் விடிந்தகாலை யரசனோடு மற்றச் சனங்களெல்லாங்
கண்டு பிரேதத்தை யடக்க வேண்டிக் கனத்த பெருக்கமா யெழுந்தபோதிற்
றுன்று மடவாள் புரவிகளும் சூழ்ந்து ஜனங்களும் சன்னாசுடன்
றென்றல் மிகவுள்ள கோவில்வந்தே சிரந்த அரசியைக் கண்டநேரம் (380)

எடுத்தா ரோட்டங்கள் சகலபேரு மின்ன மலைத்தேவங்கிருக்கு தென்றே
யுடுத்துந் துகில்மாது வெளியிலாகி யருமையாய் வந்தஜனத்தைக்கூவ
அடுத்த ரனைவோரும் வரவு கேட்க வரசி வகையாக வெடுத்தோதினாள்
படைத்த பெரியவன் பவனிதென்றே பாங்காயனைவருங் கோயிலேகி (381)

மல்லி மலர்வாசர் முஹ்யித்தீன் றம்மலரடிகளை யவர்கள் போற்றி
யெல்லா பாக்கத்தும் பெற்றபூவே யெங்கள் தனக்கெல்லாம் குலதெய்வமே
வல்லோனருள் பெற்ற மணிவிளக்கே முஹ்யித்தீனொலி நாயகமே
நல்லோர் மதியமே வாங்களென்று நாடியழைத்தேகி தவசில் வைத்தே (382)

தவசில் மிகவைத்தே மஹல்ல தீவார் சாஷ்டாங்கஞ் செயதேயுரைசெய்குவார்
புவியி லிருப்பது மெவிடநீங்கள் பெற்றதாய் தந்தை பேர்தானென்ன
தவமே யுரைசெய்வீர் தயாபரரே தங்கமேருவே நீங்களென்றார்
நபியா முகம்மது பேரனாரு நவிலுவாரப்போ தவர்கள் பாலில் (383)

நாமமிருப்பது பகுதாதாகு நமது தகப்பனார் அபுசாலிஹு
பூமண்டலந்தனி லெனது நாமம் புதியோன் முஹ்யித்தீ னப்துல்காதிர்
கோமான் முஹம்மது பேரனாகும் குவலயமுள்ள குதுபென்றேத
ஈமா னுறுதியாய்ப் பாதம்போற்றி யியம்புவானப்போ மகாராஜனும் (384)

பெரியோர் குலத்திலே யுதித்தகோவே பிரிய மிகவுள்ள குலதெய்வமே
சிறைகள் வாங்கிய தேவானதைச் செல்வனுங் கூசிலடைத்ததாலே
நரைத்தலத்திலே ராஜாஙத் தாங்க ளேயிருந் தாசாளுங்கள்
துரைத்தனத் தாருக் கருகாகவே சொன்னபடிகேட்டு நடப்போமென்றார் (385)

சங்கையாயோர்தும் வசனங்கேட்டு தனியோன் முஹ்யித்தீனுரை செய்தார்கள்
தங்குமலைத்தேவைப்பிடித் தடைத்துத் தலத்தில் ராஜாங்கம் வேணுமென்றே
இங்கு நினைந்துதான் வரவுமில்லை யியம்புராஜரே சகலோர்களே
யெங்கள் முஹம்மது கலிமாவோதி யிசுலாந்தானுக்க வந்தேனென்றார் (386)

குதுபினுரைகேட்டுச் சகலோர்களும் குணமா யுரைசெய்தாருமையாக
எதுவய னேகத்தை மிகச்சொன்னாலு மியாங்கள்தான் கேட்போம் குலதெய்
புதினமாகிய கலிமாவினிற் பொருந்த வொருவருக்கு மனமானது [வமே
கெதியின் கயிலாசங் கொடுக்குமான கிருபை யுடைய தெய்வமனேகமுண்டும்

எங்கள் மனையெல்லாம் புத்துகான்க ளிருக்குந்தெய்வங்க ளனேகமாகும்
சங்கை யாகவே வணங்கி வாரோம் தப்பிதம்வரு மோசமென்றார்
திங்கள் முஹ்யித்தீ னிதுசொற்கேட்டு செப்பினாரப்போ தவர்கட்கெல்லா
முங்களுட புத்து கானையெல்லா முரிமை யுடன்கொண்டு வாங்களென்றார். (388)

அந்த நேரமே தீவாரெல்லா மவரவர் தெய்வந்தனையெடுத்தே
வந்தார் சகலோரு முஹ்யித்தீன்பால் வைத்தாரவரவர் புத்துகானைப்
பந்தியாகவே வைத்தாரிரு பத்தையாயிரங் கணக்காகவே
சந்திப்பானதிற் பெரும்புத்துகள் தயங்கு மைந்நூறு தானாகுமே (389)

## புத்துகான் சண்டைசெய்த காரணம்

ஈது படிநிற்கச் சகலோர்களு மியம்புவா ரப்போ முஹ்யித்தீனும்
ஏதுவா யுள்ள சிறுபுத்துகா னிருபத்தையாயிரங்களுடன்
சாதுவாகிய ஐந்நூறேடும் சண்டைக்கு விட்டே பார்ப்போமென்றார்
நாத ருடமொழி தன்னைக்கேட்டு நவிலுவாரப்போ மஹல்லதீவார் (390)

உங்கள்மனம்போலே சண்டையிட்டே யொருக்காலு நாங்கள் பார்த்தறியோம்
எங்கள் புத்துகான் சண்டைபார்க்க வின்பமிகவானோம் நாங்களென்றார்
திங்கள் வதனத்தா ரிதனைக்கேட்டுச்செப்புவா ரப்போ திறையருளாற்
சங்க மாகிய புத்துகானே சல்தியாய் சண்டை செய்மினென்றார் (391)

இருபத்தி ஐயா யிரம்புத்துட னெதிர்த்ததே சண்டை யைந்நூறு புத்தும்
திருப்தி யாகவே யொன்றுக்கொன்று சினந்தங்கடித்ததே பொறிபறக்க
வருத்த மிகவாகி மஹல்லதீவார் வழுத்துவாரப்போ தவரவர்க
ளருகுத்தா யுயிர்பெற்றார் தெய்வமெல்லா முடைந்ததே யிந்தச்சண்டைமீதில் (392)

என்ன செய்குவோம் நாங்களென்றுமிடைந்து மனம்வாடி யிருக்கும்போது
தன்னாலே புத்து மொன்றுக் கொன்று சண்டை யதனாலே தூளதாகி
முன்னாற் கிடப்பதை குதுபுநோக்கி முதலோன் குதிறத்தாற் பாற்கும்போதிற்
றன்னா லுடைந்தவை பொடியானதைத் தாதிபன் கண்டு சொல்லலானான் (393)

எந்தன் மகனுக்கு வயற்றுவலி யிங்கு பனிரண்டு வருஷமாகத்
தந்தை தாரையாய்க் கண்ணீர்விட்டுத் தளம்புறானெங்கள் குலதெய்வமே
இந்தா விருக்கின்ற மகனாருக்கே யிருக்கும் வலிதீர்ப்பீர் புவியிலென்றார்
அந்த மொழிகேட்டு முஹ்யித்தீனு மருமையுட நல்ல புகறினையே (394)

எடுத்து நுணிக்கியே மவனுக்கீய வின்பமாயதை யறுந்துநோங்
கடுத்த வலியது கதறிச்சொல்லும் ஹக்கனவனுட குதறத்தாலே
யெடுத்தேனானேட்டமிவனை விட்டே யிறையோன் முஹ்யித்தீன்மருந்தினாலே
அடுத்த பேர்களே யறிவீரென்றே யகவல் முளங்கியே யஃதேகிட (395)

## கிஸ்தியிலேழுகட லுண்டாக்கிய காரணம்

சரிதான் குலதெய்வ மணிவிளக்கே சாற்றக்கேளுங்க ளொருகாரண
முரிமையுடயுள்ள புத்துக்கான்க ளுடைந்து பற்பமாய் நீற்றுப்போனு
ரருமை மகனார்தான் வயுற்றுவலி யதுவுந் தீர்ந்ததே மகிழ்சியானேம்
தரையின் மீதினி லொருகாரணஞ் சங்கையுடன் காண்க வேணுமென்றார் (396)

கிஸ்தியதனுள்ளே கடலுண்டாக்கிக் கீர்த்தியாகவே முத்தெடுத்தால்
விஸ்தீன முள்ள தீவாரெல்லாம் விளம்புவோம் கலிமா வென்றோத
பகில்காரமான வசனங்கேட்டும் பன்பார் முஹ்யித்தீ னப்துல்காதிர்
றஸ்காரமுள்ள கிஸ்திமீதி லடித்தா ராஸாவினுற் கடலெழுந்தே (397)

கண்ட காரணம் புதுமையென்றே கடலிற் கிஸ்தியை யசைத்துப்பார்க்க
அண்டர் புகழ்ந்தேத்த முஹ்யித்தீனு மவர்களுடகிஸ்தி யசைந்திடாமற்
கொண்ட ஈமானும் தீவாரெல்லாம் குதுபே மணிமுத்தைக்காணுமென்றார்
தென்றல் மணக்குழ லாசமாது தேங்காய்ப்போலாக வெடுத்தாள் முத்தை (398)

அன்ன காலையிற் கிஸ்திமீதி லைந்நூறு பாகக் கயிற்றைவிட்டார்
முன்னுங் கடலிலே கயிறண்டாததால் முஹ்யித்தீனொலி பாதம்போற்றி
தன்னு ராசனுங் கலிமாச்சொல்லச் சகல ஜனங்களு மிசுலாமானுர்
ரென்னும் பெரியவன் கிருபையாலே யில்மு போதித்தே சகலோருக்கும் (399)

மார்க்க நெறிநீதம் ஹலாலானது மதிகள் போதித்தே புவிமீதினி
லேர்க்கை யுடனல்ல தொழுகைகளு மிலங்கு மிகுராபும் குத்துபாவும்
தீர்க்க மிகவாகித் தீவாரெல்லாம் சிறந்த பெரியோனை மிகப்போற்றியே
மூர்க்க மாகிய குபிரை நீங்கி முஹம்மதி ரஸூலை போற்றிசெய்தார் (400)

வருஷம் ரண்டாக முஹ்யித்தீனு மஹல்ல தீவினி லிருந்து நாதர்
குருனும் ஆயத்தும் மறிவுகளும் குதாயி னருளாலே யவர்கட்கோதித்
தறஜா வரிசையு மிகவோங்கவே தணித்த வணக்கமா யிருக்கும்போதிற்
பெரியோ னுரைசெய்தான் கனியே நீவிர் பிரயாண மாகும் பகுதாதென்றே ()

அந்த நேரமே முஹ்யித்தீனு மருளினாப்போ சகல பேர்க்கும்
எந்தன் பகுதா துத்தேசமேக யானும் பயணமும் தானேனென்றார்
சுந்தர வதனத்தா ருரையைக்கேட்டுச் சகலபேருடன் சுல்தான் சொல்வார்
மந்த ரம்புயத் திரஸூலுல்லா வள்ளல் முஹம்மதின் பேரனே (402)

எங்கள் தனக்கெல்லா தங்கமேரே யிலங்குமதியான முஹ்யித்தீனே
தங்கள் பகுதாது தானேகினுர் சார்ந்த முஸ்லிம் ளென்செய்குவோம்
உங்கள் பாதத்தை நாங்கள் காண வுலகிலெவ்வளவு நாட்செல்லுமோ
சங்கை பொருந்திய தயாபரே தாங்களமுதவாய் திறந்து சொல்வீர் (403)

ஈது மொழிகேட்டு முஹ்யித்தீனு மியம்புவாரப்போ சகலபேர்க்கும்
ஆதி பெரியவன் கிருபையாலு மருமையாகிய இபாத்திலுஞ்
சோதி துலங்குமே யெனைநினைந்தார் றுலங்கப் பிரபையிற் காண்பீரென்றும்
பூதலந் தனிற் பறகத்தாகப் புதியோன் தொழுகையும் நோன்பானதும் (404)

ஈமானுடனேதா னிபாதத்தாகி யிலங்கும் சதக்காவும் கொடுத்துவாழ்மின்
கோமான் கிருபைதான் செம்வானென்றே குதுபுமுஹ்யித்தீன் வாக்கோதியே
சீமான் தனத்துட னிருங்களென்று செல்வராயுத மெடுத்தணைந்தே
தாமா யிருக்கின்ற தேவின் கூசாத் தன்னை யெடுத்துதா னெழுந்தாரப்போ (405)

அறுபத்து நாலு தீவார்களு மருமையாகவே பாதம் போற்றிக்
திருவினிறையவன் குதுபொலிமுன் சிறந்த காணிக்கை மிகவும் வைத்தார்
பெருகும் அஷறபி யிருலட்சங்கள் பெரியோன் குதுபுபாலினி லிருக்கும்
முரிமை யாகவே குமாரிளிக்கு மொழுங்காய் வருகின்ற மிசுக்கீன்கட்கும் (406)

காத்தார் மிகவள்ளித் கொடுத்துநாதர் காசும் சரியாய் முடிந்தபின்னர்
வரத்தோ ரேழைகள் மிகவுவக்தார் வள்ளல் பெரியவனருளினாலே
அலத்தி ஞசாவலால் மணல்மீதிலே யடித்தாரோரடி பிசுமிற்சொல்லித்
தரத்தி லொருலட்சங் காசுண்டாக தங்கள் மனம்போலே யெளியோர்க்கீந்தே ()

மலரின் பாதத்தின் குறட்டிலேறி வள்ளல் முஹ்யித்தீன் பயணமானார்
நலத்தோர் யாவரும் வாரிபோலே நாதர் சமுகத்திற் போற்றிவாழ்த்த
தலத்திலிறையவன் குதறத்தாலே சந்தனமாரி கமகமென்னக்
குளத்தோர் யாவரும் புதுமையாகக் குதுபு திறைகட லிறங்கினரே (408)

மதிபோ லழகான முசல்லாவையும் வாசர் விரித்துத்தா னதின்மேலாகக்
கதறினாசாக்கோற் பாய்மரமாய்க் கம்பளிக்கயி றமருக்கட்டி
விதியின் மணிசுக்கான் சக்காமாய் விளங்கு கோடாலி நங்கூரமாய்
அதிபனுட கப்பற்றுனேரியே யண்ணல் முஹ்யித்தி னிருந்தாரப்போ (409)

ஆதியருளாலே கப்பலோட அறுபத்து நாலு தீவுநீங்கி
மோது மதுசுக்குருக் கடலிலாக முழங்கி மலைகளோ மலைபோலாக
வாது மிகவான தேவின் கூசை வாயாகக் கப்ப லணியத்திலே
நாதரும் வைத்தே யிருந்தாலும் நளின குகவுள்ள மலைத்தேவுதான் (410)

சக்கிக் கடலிலே அவதியாகச் சண்ட மாறுத மிகவாகிட
ஹக்கு பெரியவன் தன்னைக்கூவிக் கருத்தங் குறையாம லவனிருந்தான்
மிக்க அவதியா யிருக்குதென்றே மீறான் முஹ்யித்தீ னப்துல்காதிர்
தக்க மிகசெய்யுந் தேவானதைச் சக்கிக் கடலிலே யெறிந்தாரப்போ (411)

மேலோன் கிருபையாற் கப்பலோடி விளங்கும் பதிமூன்றாம் நாளானதி
லாலமாக் கன்றூர் கரையிலாக வடைத்த சன்னசை யெடுப்போமென்றே
மாலா விருதெலா மெடுத்தணைந்தே வந்து சோலையி லிருக்கும்போது
மேலோன் முஹம்மது மகளார்வந்து விளம்புவா ரப்போ குதுபுபாலில் (412)

எந்தன் மகனாரே யென்கனியே யிசுலா மாக்கியா வந்தீரென்று
ரந்த கோத்திற் குதுபோதுவா ரருமைதா னுள்ள வென் தாயாரே
யெந்தன் பகுதாதுத் தேசமீதில் யானு மிருக்கையி லிறையோன் சொன்
னுந்த மனம்போல் கேட்டகேள்வி யுலந்தனிலியாள் கொடுத்தேனென்றான் ()

தந்தா னுரைசெய்து மஹல்லதீவைத் தனித்துற் றிசுலாத்தி லாக்குமென்றான்
வந்தேன் மிசுறுமா நகரமீதில் மயுற்றுப் பசியுட னிருக்கும்போது
விந்தையாய் வந்த முஸ்லீம்களை விசாரி யாமலும் போகச்சொன்னு
னந்த நேரத்தில் நகரம் பார்த்தே னழுகக் கிருந்தாளே யொருகிழவி. (414)

சவன மிகுதென்றே நானுமேகித் தண்ணீ ரவளிடங் கேட்கும்போது
கவனி யாமலு மழுகச்சே நான் கப்பலுடன் ஜனங் கேட்பேனென்றும்
புவன மீதுள்ள மிசுறுபதிற் புழுங்கி யழுதார்கள் குமாரர் நால்வர்
கவன மாகநா னிருக்கும் போதிற் கிழவனு ருயிர் வாங்கென்றான் (415)

சோலைமீதுள்ள மஹல்லதீவிற் றுலங்கு மொருமடந் தனிலிருந்தேன்
மேலோ னுரைசெய்தான் வீதிபார்க்க விரும்பி யெழுந்துநா னேகும்போது
வாலத்திற் போலே கொய்யாக்கனி விளையும்படி செய்தா னென்முன்னாலே
யேலாக்கனி கொய்தே னென்னையிறை யெகுதி தனையேவி யடிக்கச்சொன்னார்()

சக்கிக் கட்டிலே வருகும்போது தனித்த அவுதிக ளானதினால்
மிக்க பெரியோனே யென்றுகூவி விளம்ப வேதொன்றும் சொன்னுனில்லை
ஹக்க னெனைச்செய்த கோலங்களைக் கவலக் கூடுமோ மாதாவென்றார்
தக்க பெரியவன் செய்வானப்போ சங்கை பொருந்திய நாச்சியாரே (417)

எந்த னறுஷீலே முஹ்யித்தீனே யெழுபதாயிரம் வருடமட்டும்
சிந்தை யுவப்புடன் தாலாட்டினேன் செல்வ ரெனதுட குதுபொலியே
மந்தவித மறிந்து மென்மே லநேக முரைத்தனர் கோபமாக
வெந்த னுத்தாரந் தானில்லாம லெடுத்தே னெறிந்தனர் தேவையென்றார் (418)

ஆகையா லந்த னபிமகளே யதனு லவரிடம் பேசவில்லை
பாகமாகிய வொடுக்கானதைப் பசிதா னுறிடச் சொல்மினென்று
னேக னுரைபோலே மாதாவோத விறையோன் குதுபொலி பசியாறினார்
பூக மாகிய நாச்சியாரு மும்பர் வானத்தி லேகினாரே (419)

## மரைகளுண்டாகிய காரணம்

அந்தமிலி ஹக்கன் முஹ்யித்தீனு மகிமையுள்ள வணக்கமீதில்
வந்த வொருவேங்கை பாதம்போற்றி மவுலும் குதுபுதம் பாலில்நீவி
எந்தன் முகம்பாரு மணிவிளக்கே யெனக்கு வயிற்றிலோர் வலிதானுண்டுஞ்
சந்திர வதனரே தீர்த்தருள்வீர் சங்கை மிகவுள்ள குதுபென்றோத (420)

சுயத்த ரிதுகேட்டு வேங்கைபாலிற் சொல்லுவா ரப்போ விலங்கினமே
வயிற்று வலியான மருமந்தனை வழுத்து மெனக்கேட்டார் முஹ்யித்தீனும்
பயமு மிகவாகி நடுநடுங்கிப் புகருமவ் வேங்கை வணக்கமாகச்
ஜெயங்கள் பொருந்திய நவமணியே சிறந்த வொலிமார்க்கு மேலொலியே (421)

உங்கள் தமக்காக வொருவிடைய னொருமரை நேர்ந்து காட்டில்விட்டா
னெங்கல் ஜாதியார் கண்டோமானுலிறையோன் முஹ்யித்தீன் மறையிதென்றே
சங்கை யுடன்போற்றி யிருந்தோம் நாங்கள் சய்யிதிரஸூலின் போனாரே
தின்னும் படியான தீனில்லாமற் செகத்தில் நாற்பது நாளிருந்தோம் (422)

ஆதி பெரியவ னுத்தரார்த்தா லண்ணலே யுங்கள் மறையானதைப்
பூதலந் தனிற் றின்றநாளாய்ப் புன்மை மிகவான வயிற்றுவலி
நாசரே யென்று வேங்கையோத நல்லோர் முஹ்யித்தீ னப்துல்காதிர்
பாத மதினாலே தடவும்போது பாங்காய் வலிதீர்ந்து வேங்கையேக (423)

அந்த நேரத்தில் முஹ்யித்தீனு மருளுவா ரப்போ தாதிபாலி
வெந்தன் ரஹ்மானே, யாகுதாயே யெனது மறைக்கானவகை சொல்லென்றார்
சந்திர வதனத்தின் தயாபரரே தாரே ஞெருமுறை யதனையென்றான்
சொந்த மறையிட தலைமுறையைத் துலாங்கியான் பார்த்துக் கணக்கிடவே (424)

வருகுங் கணக்கது மூன்றிலட்சம் வல்ல பெரியோனே கொடுவென்றோத
பெரியோ னுரைசெய்தா னென்குதுபே பிசலுங் காற்றிலுங் கெர்ப்பத்திலு
மிறந்து போவதைக் கணக்குநீக்கி யிருலட் சமரை தருவேனென்றான்
கறந்த பால்போலே கொடுவென்றோத ஹக்கன் குதறத்தால் மறைமுன்னாக(425)

வாரிபோல் நிற்கு மரையைக்கண்டு முஹ்யித்தீனொலி யுரைசெய்குவார்
பாரில் பகுதாது வந்துசேரப் படைத்த வாவுந்தன் காவலென்றார்
நேரா யமரோரை யிறைவனேவ நிகழ்த்தினா னப்போ வானோர்களும்
மாறுப் புகழோங்கு மாலமீனே வல்ல பெரியோனே யாகுதாயே (426)

வனத்தில் மரைமேய்த்தே யேகும்போது வழியிலொரு மரை தவறிவிட்டால்
மனபோ லிருலட்ச மரையுங்கேட்பார் வள்ளல் முஹ்யித்தீ னப்துல்காதிர்
உனது பொருப்பாக விருந்ததானா லும்பரேர்கிறோம் ரஹ்மானென்று
னெது பொருப்பென்றங் கிறைவனோத விலங்கும் சமகாயில் புவியில்வந்தே ()

ஆயர் குலாம்போலே வடிவெடுத்தே யழகா மரையெல்லா மருங்கில்விட்டே
தூய னுதவியா லவரேகையிற் றுய்யோன் முஹ்யித்தீ னப்துல்காதிர்
தேயந் தனைனுள்ள சன்னுசான சிறந்த குடுக்கையும் தானெடுத்தே
நாய னருளாலே விருதணைந்து நல்லோர் பாதத்தின் குறட்டிலேறி (428)

மிசுறூர்பதி வந்த காரணம்

வந்தார் முஹ்யித்தீ னப்துல்காதிர் வானத் தமரோர்கள் மிகப்போற்றியே
மந்த ரம்வளர் சோலைகளு மலைகள் காடுகள் மிகநீங்கியே
சந்திர வதனத்தார் மிசுறாரேகச் சந்தன மாரி கமகமென்ன
அந்த நேரத்தில் சுல்தானுட னனேக ஜனங்களும் வந்துகண்டார் (429)

சங்கை யாகிய மலர்பாதத்தைச் சகல பேர்களு முத்தியிட்டே
திங்க ளழகான முஹ்யித்தீனைச் சிறந்த பெருக்கமா யழைத்துவந்தார்
பங்கயக்கத் தாசர் வாழ்தத் துய்யோன் குதுபொலி நாயகமும்
எங்கும் வாசனை கமகமென்ன விலங்குந் தெருவீதி வருகும்போதில் (430)

சுவனத் தாம்பைய ருவந்துவாழ்தத் துய்யோன் குதுபொலி நாயகமும்
திவன மாகவே தண்ணீர்கேட்ட தையல் கிழவியார் வீதிவந்தார்
மவுனந் தனிலேதான் மிகப்பூரித்து வந்தாள் கிழவியு மகனுடனே
புவனந் தனக்கெல்லா மணிவிளக்கைப் போற்றி யிருபாத முத்தியிட்டே (431)

அந்த மிலியுட குதுபொலியே யருமை மிகவுள்ள நவமணியே
யெந்த னுயிர்காத்துப் புவியின்மீதி லெனது மகனையும் வரவழைத்தே
சிந்தை யுவப்பாக மணமுடிக்கச் செய்த நாதரே கண்மணியே
சந்திர வதனத்தின் தயாபரரே தனியோன் முஹ்யித்தீ னுண்டகையே (432)

உங்கள் பாதத்தை யானுங்காண வுடையே னிடத்திலே துவர்விங்தேன்
தங்க மகளேரே யென்று போற்றிச் சார்ந்தாள் கிழவியு மனமீதினிற்
றிங்கள் வதனத்தார் முஹ்யித்தீனும் சிறந்த தவிசில்வக் கிருக்குநேரே
மிங்கு மிருக்கின்ற பிணியாளிக ளேகமாய் வந்து பாதம்பணிந்தார் (433)

சந்திர வதனத்தா ரிராஜாவானுற் றடவச் சகலோர்க்கும் பிணிதீரவே
வந்து சுல்தானு முவந்துபோற்றி வாசர் தமையுமே யழைத்தேகியே
மந்த ரக்கதிர் விரிப்பில்லாத வணக்கமாய் நின்றே பசியாறினு
ரந்த நேரத்தில் முஹ்யித்தீனை யழைத்துக் கதிர்ச்சிம்மா சனத்தில் வைத்தார் ()

ஈது படிநிற்க விறையவனு மியம்புவா னப்போ குதுபைநோக்கி
நாதர் பகுதாதுத் தேசமெங்கும் நல்லோ ரெனதுட கனியேயென்று
ஞேது மொழிகேட்டு முஹ்யித்தீனு முரைத்தார் பகுதாதூர் பணயமென்றே
பூதல முள்ள மிசுறுமெல்லாம் போற்றி மிகவைத்தார் காணிக்கைகள் (435)

சுல்தா னவர்களு மனம்பூரித்தே துலங்குமுன் வைத்த அஷறபிகள்
குலத்தார் மிகவைத்த பொருள்களுடன் குவிந்ததே நாலு லெட்சமாகும்
நலத்தில் வருமான முஹ்யித்தீ நாட்டம் போலவே குமாரனுக்குக்
தலத்தி லிருக்கின்ற மிசுக்கின்கட்கும் சங்கையாகவே கொடுத்தாரப்போ (436)

கொடுத்து முடிந்தபின் னிறையைப் போற்றிக் குணாத்தினமான தஸ்தகீர்தா
மெடுத்தே விருதெல்லா மணைந்துபின்ன ரிலங்கும் பாதத்தைக் குறட்டிலேற்றிப்
படைத்த பெரியவன் கிருபையாலே பயணந்தான் கூறிச் சகலபேர்க்கும்
நடத்த லாயினுன் பலமாங்க ணண்ணுஞ் சோலைக டன்னை நீக்கி (437)

### பகுதாதில் அபுசாலிகும் பாத்திமாவு முஹ்யித்தீ னுண்டகையை நினைத்து அல்லாஹுத்த ஆலாவிடம் கூறியது

வருமந் நேரத்தில் பகுதாதினில் வாழுந் தந்தையர் தாயாருமே
பெருகுந் தவமுள்ள குதுபை நாடிப் பெரியோனிடஞ் சொல்லிக் காமேந்தியே
யருமை மகனாரே யெங்கனியே யாதி யருள்பெற்ற முஹ்யித்தீனே
பொறுமை மிகவுள்ள தயாபரரே பூமி தனில்வந்த மணிவிளக்கே (438)

### பதம்

எந்தன் பாலரையு மவாருமையையு மிறையவ னறிவான் அருள்புரிவான்
திருவருளே மகனே நாங்களெவ்வித எவ்விதனுமைக் காண்போம் புவியி
லறுபதாண்டிலும் பிள்ளையில்லாமல் நாங்களாதியை நினைத்து தினமுவந்து
உமைச் சுமந்து மகனேயிந்த ஆலத்தில் ஆலத்திலுமை யீன்றோம் பாலரே
எங்குந் துலங்கிய தங்கத்தின் மேருவை எப்போது நாங்கள் காண்போம்
துயர் தீர்ப்போம் மனதார்ப்போ மிறையே யெங்கள் யாரஹீம் யாரஹீமே

இறைவனே ரஹ்மானே
அஞ்சி மனங்களு மின்சொற் வணக்கமா யாதியைக் கெஞ்சுகிறோம்
மன மஞ்சுகிறோம் கனாஞ்சித மகனே யெங்க ளருமையி
லருமையி லுவந்து கண்ணே குதுபே

## தொங்கல்

இந்த விதமாகத் தந்தை தாயா ரிலங்கி முகம்வாடி யழுகும்போது
வந்தார் மறைவாகச் சம்ஹாயிலும் பகுதா தென்னுஞ் சோலைக் கருகாமையி
லந்த நோத்தி லபுசாலிக் கருளுவார் வந்தோர் தம்மை நோக்கி
யெந்தவூர் காணு மரைக்கோனுரே யாரு மரையிஃ தென்று கேட்டார் (439)
அன்ன காலையிற் சம்காயினு மருளுவார் நல்ல வமுதம்போலே
மன்னர்கள் போற்று முஹ்யித்தீனும் வருகி றாவர் மரைகளீதே
யென்னுந் தவத்தோரே மரையைப்பாரு மென்றே வானவர் ககனிலானுர்
தன்னின் மனத்துள்ள வினைநீர்ந்தே சங்கையாகவே யிருக்கும்போதில் (440)
மறுநாட் காலையில் முஹ்யித்தீனும் வந்தார் பகுதாதுத் தேசத்திலே
திறஜா மிகவா விறையருளாற்சந்தன மாரி ஜொலித்திடவே
வரிசையாய் வந்தே தீனேரெல்லாம் வள்ளல் முஹ்யித்தீன்பாதம்போற்றிப்
பெரியோன் பறக்கத்தென் றனேவோர்களும் பிரிய முடனழைத் தவர்களேக ()
சங்கை யாகவே மனேயில்வந்து தகுத்தி விருந்தாரே முஹ்யித்தீனுந்
திங்கள் வதனத்தின் மாதாபிதா சிறந்த மகனை மிகவும் போற்றி
யெங்கள் கனியான நவமணியே யிறையோ னருள்பெற்ற தயாபரரே
யுங்கள் தீதாறைக்கண்டபோதேயுடையோன் பறக்கத்தும் பெற்றேமென்றார் ()
ஈதுபடி நிற்கச் சகலபேர்க்கு மியம்புவா ரப்போ முஹ்யித்தீனும்
பூதல முள்ள மஹல்லதீவிற் புதுமை யாகிய சேதியெல்லா
மோதினு ரப்போ குதுபுநாத ருடையோன் குதறத்தென்று யாவருங்கேட்க
கீதம் பொருந்திய குடுக்கைதனேத் திறந்தார் சன்னுசும் வெளியிலானுன் (443)
வாசர் முஹ்யித்தீன் பாதம்போற்றி வழுத்தினு ரப்போ கலிமாத்தன்னே
நேசர் பகுதாது மிகுருபுக்கே நேர்மை யுளமோதி னுகவைத்துத்
தேசந் தனக்கெல்லா மணிவிளக்காய்ச் சிறந்த முஹ்யித்தீ னப்துல்காதிர்
ஹாஷிம் குலத்திலே வளர்மதிபோல் ஹபீபு முஹம்மது தீன்வளர்த்தார் (444)
பகுதாதினி லேதா னிருக்கும்நாளிற் படைத்த பெரியவன் கிருபையாலே
மிகுந்த பறக்கத்து மேன்மைகளும் விளங்கு மதிபோல வளர்ந்தேறவே
யுகந்த தொழுகையு நோன்பானது முடையோன் சதக்காவு மிகவோதியே
முஹம்ம திரஸூலின் போரான முஹ்யித்தீ னெலி மனந்துலங்க (445)
அந்த மிலிஹக்கன் கிருபையாலே ஆதி முஹம்மது நபியும்வாழி
சந்திர வதனத்தின் நாலுயார் தவத்தி னசுஹாபி மார்கள்வாழி
இந்த மணிமாலை படித்தபேரு மின்ப மாகவே கேட்டோர்வாழி
யெந்த நாளிலுந் தீன் துலங்க விறையோன் தனேயுமே யுவந்தோர்வாழி. (446)

ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்
முஹ்யித்தீன்மாலை முற்றுப்பெற்றது

# ஹக்குபேரில் முனாஜாத்து

## அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

காவலாய் நிற்கும் வல்லோன் கத்தனைச் சீவனெல்ல
மாவலாய்ப் போற்றி வாழ்த்தி யதற்குண வளித்த கோமா
னவின் லெளியோர் கேட்கு நாட்டத்தின் படியே தந்து
தாவிலா றகுமத்தாலே தற்காக்கும்பொருள் தாமே (1)

### வேறு

அருவாயால மடங்கலுக்கு மரிய பொருளாய் விளங்கி நிற்குந்
திருவா யமையாப் பேரொளியாய்த் திகழ்ந்து நாளும் பாரபரிக்குங்
கருவாய்க் கருவி னுண்மணியாய்க் காட்சி யருளும் ரகுமானே
யுருவாய்த் துலங்கு மன்னனே யுனது கிருபை யருள்வாயே (2)

நாடு நாட்டப் பயனதுபோ னனிகொ ளால மடங்கலையு
மோடு பெற படைத்தெவைக்கு முன்னு மிரண மிகக்கொடுத்து
வீடி லாது காத்தளிக்கும் வேதப் பொருளே ரகுமானே
கூடு நின்ற னடியார்கள் குறைக டீர்ப்பாய் காதிறவே (3)

உனது கிருபைக் கடலிடத்தி லுதித்த மணியாய்த் தீனோர்க
டனது சேமப் பொருளாகுந் தாசீம் நபியார் பொருட்டாலே
கனதி இலாகி நாயகனே கதியின் பயன்யா காபிலுன
மனது கலங்கு மெளியோர்கண் மறுக்கந் தவிர்ப்பாய் ரகுமானே (4)

புவியில் விளங்கு நபிமார்கள் புகழும் பொருட்டான் முன்னுள்ள
அவுலி யாக்கள் ஷுகதாக்க ளரிய பெரியோர் பொருட்டாலுர்
துவமே முகீதே தூயோனே துலங்கு நாசிரு னவனே
கவலைநீக்கி பலாய்க ளெல்லாங் காண தகற்றாய் ரகுமானே (5)

துன்ப நீக்கி யறிவிளங்குந் தூய வேதமொரு நர்லி
னின்ப முனது பொருளாலே யினிய வுன்றன் பொருட்டாலே
யன்பு புரியும் ஹபீபேயெம் மாகத்துயிரே தையானே
வம்பு மாற்றி நல்வரிசை வண்ட யருள்வாய் ரகுமானே (6)

உள்ளங் கலங்கித் தத்தளித்தே யுணர்வு மயங்கி நின்னடியார்
வெள்ளங் கண்ணான் மிகவோட வெருளுந் துயர மணுகாமற்
கொள்ளுங் கிருபை மவுலானு குதாயே வதூதே கப்பாறே
கள்ள நோய்க தங்கடங்கள் காப்பாய் காப்பாய் ரகுமானே (7)

வேதம் நிறைந்த சூறத்தோடும் விளங்கும் ஆயத் ததனாலே
யோதும் பொருட்டால் மூமீன்க ளுள்ளும் பொருட்டா லாணையினாற்
போதம் பெருகு முன்னுடைய புகழுஞ் சிறப்பின் ஆக்கினையாற்
காதும் பலாய்க ளணுகாமற் காப்பாய் காப்பாய் ரகுமானே (8)

வள்ளன் மகுமூதெனு நயினார் வழியிலொழுகி யுன்னுடைய
விள்ளு மார்க்கந் தனையெடுத்து விளங்குந் தீனோ ராகையினாற்
றெள்ளு மயிலே மெய்ப்பொருளே தெளிவே யெங்கள் கண்மணியே
யெள்ளு மாபத் தணுகாம லின்பம் புரிவாய் ரகுமானே (9)

அடியார் செய்யும் பிழைகளெல்லாம் ஆளுமிறைநீ பொறுப்ப தல்லாற்
படியோர் வேறே யில்லைமன்னு பயனு நயனு மருள்வோனே
நெடியோ னிம்மை மறுமையிலு நீதி யுடையோ னாகையினாற்
கொடிய பலாய்க ளணுகாமற் குறைக டீர்ப்பாய் ரகுமானே (10)

முன்னு நீயே யுடைய பொருண் முழுதுநீயே யாண்டருளும்
பின்னு நீயே யிரம்பை யெல்லாம் பேணிநீயே யன்றியில்லை
யென்னு நீயே மென்மேலு மென்று நீயே காப்பாயே
யுன்னு மடியார்க் கொருதீங்கும் வாரா தருள்வாய் ரகுமானே (11)

## நபியுல்லாபேரில் முனாஜாத்து

அலிபெழுத் தொன்றுமூன்று மைந்துமா யேழுமாகி
அலிபினா லமைந்தபேரி லறிவுமா யுஜூதுமாகி
அலிபுக்குள் லாமுமாகி யம்முறைக் கலிமாவாகி
அலிபுக்குள் மூளைத்தமீமின் அகுமது நபியுல்லாவே (1)

பகுறொரு நான்குமூன்றிற் பரிவுற விருந்துவல்லோ
னிகாறுஞ் சமுகத்துற்று நெடுந்தினம் வணங்கநின்றீர்
மிகுபுகழ்த் தலங்களுன்கு மேவியெவ் வுருவும்பெற்றே
யகமகிழ்ந் தொளிவாய்நின்ற அகுமது நபியுல்லாவே (2)

தகுத்துடன் பகுவமின்றித் தன்னிடங் குறிப்பொன்றின்றி
அகதியத் தென்னுமுச்சி யணுபெறும் வாகிதிய்யா
வகைநடுக் குறிப்பின்மேலும் வழியினுங் பறுசக்காதி
முகமொரு மூன்றும்பெற்ற முஹம்மது நபியுல்லாவே (3)

தவாபுடன் பகுவமின்றித் தன்னிடங் குறிப்பொன்றின்றி
அவாவிக்கு மூன்றுமேலு மப்புற மூன்றினுக்கும்
பவாவித்த மகுறூக்கெல்லாம் பரவிய கருவாய்த் தோன்றி
மூவாப்பொரு ளாகிநிற்கு முஹம்மது நபியுல்லாவே (4)

ஜம்ாலுடன் ஜலாலு மோதித் தாக்கிய நடுவிற்றோன்றிக்
கமாலியத் துடனே தூறுய்க் கலந்திரு வினையின்பாலாய்

அமானத மெடுத்தியார்க்கு மரும்பொரு ளளிக்குங் கோவே
மூவாவுரு வொன்றாய்நின்ற முஹம்மது நபியுல்லாவே (5)

ஹயாத்துட னேழுஞ் சேர்ந்த கணக்கிருபதிற் றேழாய்
வியாபிக்கு மட்சாத்தின் விளங்கிய சட்டை யிட்டுத்
தயாநித்ய முத்த மேவுந் தாசிமே காசிமேதன்
னையாநிற்ப தென்கொலையா முஹம்மது நபியுல்லாவே (6)

கைருடன் சற்றும் நற்பன் கற்பனை கற்பனைக்குஞ்
செய்ரறும் பொருளாயாலந் தெளிதரும் விளக்காய்த் தோன்றும்
பயிறரும் நபியே நுந்தம் பாதமே போதங்கொண்டேன்
முயசற வேண்டு மையா முஹம்மது நபியுல்லாவே (7)

தவாத்துடனீ கலமுந் தாங்குந் தவநிலை லவுகுமூவர்க்
கவாநிலை யெழுவர் தம்பாற் காட்டும்பன் னிருவரன்னோர்
ஓவாநின்ற விருபத்தெண்ம ருவர்களா னடக்குமாலம்
மூவாப்பொரு ளிவையின் மூல முஹம்மது நபியுல்லாவே (8)

தம்முடன் மதில்லத்தோடுந் தன்மையுங் கொண்டு வஞ்சம்
பம்மிய வடிவேனுந்தம் பதமலர் கெதியே யல்லா
லிம்மகி தலத்தில் வேறே யெவருண்டு கருணைசெய்வார்
மும்முறை யுலகம்போற்று முஹம்மது நபியுல்லாவே (9)

ரகுமத்துக் குரியபேரும் ரியாலத்தும் பொதிந்து நிற்ப
அகமுற்ற மணியாய் நின்ற அகுமதா மறுவாகுக்கும்
பகுமற்ற மூன்றினுக்கும் பரவிய பொருளாய் நின்றே
முக மொய்த்த வள்ளலான முஹம்மது நபியுல்லாவே (10)

சுகுதுடன் றிலா அத்தாவுந் துலங்கிய தகுவாயோடுந்
தகுதியுஞ் சபுறு மில்மூந் தன்மையுங் கொண்டகோவே
அகுலொரு நான்கும் பெற்ற அவ்வலு மாகிநின்ற
முக நிலை காசிமான முஹம்மது நபியுல்லாவே (11)

சிற்றினிற் பிறந்து நூறுஞ் சிறந்தெழு நாறுங்கேயுந்
துற்றத்தின் மீமுந்தேயுந் தொங்குறுங் குற்றத் தோடும்
மற்றத்தின் மற்றத்தாக மற்றெல்லாம் படைத்த மூல
முற்றதொன் றில்லா வள்ளல் முஹம்மது நபியுல்லாவே (12)

சகாதத்துங் கைபுக்கும்பண் ணுறநடுத் தங்கி யோங்கி
இகாநத்திரண்டினுக்கு மிறையென வுதித்த கோவே
நகா நிலையாள சென்னை நவம்பெறக் காலம்பூண்டு
முகாவஜீகாத்தின் மேவு முஹம்மது நபியுல்லாவே (13

சதமீடம் பிறவா முத்தத் தண்கதிர் மறையாத்திங்கள்
கதமது தோன்றாத் தீபங் கமழ்ந்தலர் மாறாப்பூவே

நித நிதம் பிகுறினோடு நிலைத்திடு மிறசூலென்ன
முதனிலை புரிந்த வள்ளல் முஹம்மது நபியுல்லாவே (14)

லற்றத்தாந் துணியா வென்ப தலைவியா மாகிறத்தின்
குற்றத்தா னவனைத்தேடுங் கொற்றவ ருடனே சேர்த்துப்
பற்றத்தி லாக்கியென்னைப் பரிவுடன் காத்தல் வேண்டும்
முற்றத்தொன் றில்லா வள்ளல் முஹம்மது நபியுல்லாவே (15)

தையிபா யாலமெங்குந் தகாரத்தை விளக்கு வித்த
ஐயனே மெய்யனேயென் னகத்தி னுயிராய்நின்ற
பொய்யில்லா னுண்மைத்தூதே புன்மையன் பிணிக ணீக்கி
பொய்யணி கிருபை நல்கு முஹம்மது நபியுல்லாவே (16)

லாகிருய் பாத்தினாகி நவநிதங் கொண்டு முன்னம்
ஆகிரு யவ்வலாகி அவற் றிற்குச் சதாகத்தாகி
யாகிய மைபுமாகி அறிவுடன் றெளிவு மாகி
மோகமா மயிலுமான முஹம்மது நபியுல்லாவே (17)

இல்முடன் குதுறத்தோடு மிருதத்துங் கயாத்து நான்கும்
நல்மதி பொருந்துங் குன்பா னளிபெற வெழுந்தமூன்றும்
பன்முறை படைக்குங் கோமான் பண்புறு மிரஸூலாகி
முன்முறை யுதித்த கோவே முஹம்மது நபியுல்லாவே (18)

காரினி லிருக்கும் போதிற் கலங்கபூ பக்கருக்கு
வாரியும் வங்கத் தோடும் வள்ளமு மழைத்துத்தந்து
நேரிய லாக்குங் கோவே நினைப்புட னறிவுமீந்து
மூரியி னருளும் வண்மை முஹம்மது நபியுல்லாவே (19)

பகுமுடன் வகுமுந் துன்னும் பன்னிலை கியாலுஞ்சூழ்ந்து
மிகும்அகு லலைந்து போதா வேண்டிய வருளுமீந்து
தொகு நூந்தம் புகழேபாடத் துணைச்செய்வீ ரிணையில்லாத
முஹம்மதே முஸ்தபாவே முஹம்மது நபியுல்லாவே (20)

காயிமாய் நினைத்த வல்லோன் ககனரு மற்றுமுள்ள
மேய்தோர் சேர்ந்துஞ் சொல்லு மேன்மையின் சலவாத்தாகில்
நாயினுங் கடையேனுங்க ணவநிதங் காணற் காமோ
மாயிலாக் குணப்பண் புள்ள முஹம்மது நபியுல்லாவே (21)

காபுடன் கேயும் யேயும் ஐயுடன் சாதுமாகிக்
காபுடன் பேயுமாகிக் காமுத லைந்து மாகிக்
காபுட னூனு மாகிக் கலந்திடும் வாவுமாகி
மூபுவ னங்களான முஹம்மது நபியுல்லாவே (22)

லவுலாக்க ஆலமெல்லா நான் படையே னென்றோதும்
அவுலாகீ ராகையாலும் அறுவாகுக் குயிர் நீராலே

வவுலான துள்ளநோக்கிக் கட்கடை யென்பானேக்கும்
மவுலா அ்லா முளுதி முஹம்மது நபியுல்லாவே (23)

மாலிக்காய் நின்றவல்லோன் மணிமுத்தாய் விளங்கி நன்மை
காலிக்காள்வர்கள்காணுங் காட்சியாய்த் தவங்கள் செய்யுங்
கூலிக்காதர வுள்ளோனைக் கொண்டுய்ய வேண்டு மையா
மூலக் காரணமாய் நின்ற முஹம்மது நபியுல்லாவே (24)

நூறினிற் பிறந்த கோவே நும்பத நம்பும்பையல்
நூறிரண் டைம்பானூறு நோக்கிய இசுமி னுள்ளே
வேறிரண் டில்லா வண்ண மேவிடச் செய்யவேண்டு
மாறிலை யாகி நின்ற முஹம்மது நபியுல்லாவே (25)

வஹூதெனு மிறையோன் பையில் வருமொழி தானாய்நின்றே
ஹதீதுகள் பலவும் போற்றுங் காத்திமுல் லன்பியாவே
ஹதீதுள்ள ஆல்ங்காக்குஞ் சையிதே யெளியேன் பாலின்
மதா யிது புரியுமையா முஹம்மது நபியுல்லாவே (26)

காதியாய் முகை மிணுகிக் காவிக்காய் ருசிக்காகி
ஆதியாய் நின்ற வல்லோ னருளிய விருதுறைக்கும்
நீதியாய் நின்ற கோவே நெறியிலான தனக்குவெற்றி
மூதுரை யளிக்க வேண்டு முஹம்மது நபியுல்லாவே (27)

யாதுட னினைவும் பூண்டி யாவர்க்கு முதலாய்நின்ற
வேதியர் மூவருக்கும் விளக்கென விளங்கி யெங்கும்
போதகம் பெருமையான புன்மையன் றுன்ப மெல்லா
மோதிடா தகற்ற வேண்டு முஹம்மது நபியுல்லாவே (28)

இருவகை யெழுத்துமீனி னினமுமாங் கவிதை சொல்லுங்
திருவகை யருள்ஹபீபு முஹம்மதின் சிறந்த மைந்தன்
கருவகை யுணர்செய் கப்துல் காதிரென் றுரைக்கும்போான்
மருவகை கொள்ளு மையா முஹம்மது நபியுல்லாவே (29)

## நபியுல்லா பேரில் ஒருபா ஒருபஃது

### கட்டளைக் கலித்துறை

சத்தத் திருப்பயத் தாமனீ நாதன்றின் வல்லமையாற்
சுத்தத் திருப்பயத் தாமனத் திற்றெடர் காந்தமதிற்
பத்தத் திருப்பயத் தாமரு நேசப் பலனருள்வீர்
முத்தத் திருப்பயத் தாமரைப் பாத முஹம்மதுவே (1)

அழுக்கப் படிப்பித்த நாட்டிய தீமையினு லுணர்வே
மழுக்கப் படிப்பித்த ஞாயலையாது மன திரங்கிப்
பழுக்கப் படிப்பித்த ஞசையின் வஞ்சி பணிந்துவர
முழுக்கப் படிப்பித்த நாயகமே யெம் முஹம்மதுவே (2)

செப்பு விக்கும் மிடறேக முறையைச் செயவிலதா
லப்பு விக்கும் மிடறே கசக்கும்பொழு தவ்வினைக
டப்பு விக்கும் மிடறே கலிமாமொழி தந்தருளீர்
முப்பு விக்கும் மிடறே கவருமெம் முஹம்மதுவே (3)

பிடிக்குஞ் சாமடவா ரமனத்தர் பெரும் படையு
மிடிக்குஞ் சாமடவர் ரமர்நீந்தி யிசை படைத்தீ
ரடிக்குஞ் சாமடவா ரகமா மறுசைக் கடக்கு
முடிக்குஞ் சாமடவா ரணி யேத்து முஹம்மதுவே (4)

மின்னிற் கவந்தனடித் தமிழ்மேனி மென் பூமகளாற்
பொன்னிற்க வந்த னடித்துணை நுந்தம்புறத் தடைந்தேன்
பின்னிற்க வந்தனடித் துதிமன்னர் பெரும் படையுண்
முன்னிற்க வாதனடித் துயர் வேற்கை முஹம்மதுவே (5)

அதிரும் பலனை யகத்தருகாம தத்தம் புவியோ
டெதிரும் பலனை யகத்தரும் பெற்றி யிமையனியி
னிதிரும்பலனை யகத்தரு ஸ்மச்சர ணேந்து நின்றேன்
முதிரும் பலனை யகத்தருள் சோதி முஹம்மதுவே (6)

சுகத்துக் கவலைக் கணியுறு வேடன் கறுவியிட்ட
வகத்துக் கவலைக் கணியடர் மானி னறிவுழற்ற
மகத்துவக் கவலைக் கணியற் றரும்பின் மனத்திலென்றன்
முகத்துக் கவலைக் கணியரு டாரு முஹம்மதுவே (7)

திருக்கதரப் பரமார்க்க வுணர் வினர் சிந்தையினிட்
டுருக்க தரப் பரமாக வுரைக்கு முயாறியே
பெருக்க தரப் பரமானந்த நாளும் பெரும்புகழே
முருக்க தரப் பமாதர் துதிக்கும் முஹம்மதுவே (8)

அரணத் தமருமா பத்தளமு மழித்தளிகள்
காணத் தமருமா பத்தகையுங் கணிபுயத்தி
ரிரணத் தமருமா பத்தவமு மியைவிதத்தா
முரணத் தமருமா பத்தரேத்து முகம்மதுவே (9)

தித்திப்பதத்துக் கரும்பயலாச் செழுந்தேன் மறைகள்
சித்திப்பதத்துக் கரும்பய நோய்வினை தீர்த் தழகின்
சுத்திப்பதத்துக் கரும்பய லாக்கித் தொடர்பருள்வீர்
முத்திப்பதத்துக் கரும்பய ஞான முஹம்மதுவே (10)

## நபியுல்லாபேரில் இன்னிசை

பூவுலவு வாசம் பொருந்தியபோ லெவ்வுயிர்க்கும்
பாவுலவுமாதி பாரபரன் முன்னன் மணியாய்
மேவுலவி யெல்லாம் மிகவாக வந்துதித்த
மூவுலகுங் காக்கு முஹம்மதர் ரஸூல் நபியே (1)

நித்தமன வஞ்சகமு நெறிமேடுந் தீவினையும்
பத்தியுடன் பூண்டசிறு பையன் முகம் பார்த்தருள்வீர்
கத்தனருளா லடியார் கவலையறக் காத்தளிக்கு
முத்தியுயர் மீக்கா முஹம்மதுர் ரஸூல் நபியே (2)

என்போலப் பாவியர்க ளெத்தனைபே ராணலும்
முன்போற் இருபைவுள்ளா ரொருவரையுங் காணேனே
பொன்போ லருமணிபோற் பூங்கனிபோ லியாவருக்கு
முன்போ லுதித்த முஹம்மதுர் ரஸூல் நபியே (3)

வாதாடுங் கள்ளமன வஞ்சியர்கள் கஞ்சமுக
மீதாடு மாசைவினை மேலாட லெவ்விதமோ
கோதாடு புன்காபிர் கொண்டநிலைப் புண்டுவிழு
மூதாடு மின்சொன் முஹம்மதுர் ரஸூல் நபியே (4)

ஊரார் மனநோவ வுற்றூர் மனநோவப்
பேரார் மனநோவப் பேதகத்தார் போதாரோ
சீரார் மறைநாவின் செங்கனியா லிவ்வுலக
மூரார் புகழின் மக்கா முஹம்மதுர் ரஸூல் நபியே (5)

வன்மதியார் செய்வினையால் வண்மையிலா தாகமிகப்
புன்மதியா லெண்ணியெண்ணிப் பொங்கியுளம் வாடுவனே
நன்மதியே பூம்பாத நாடிவந்து தாழ்ச்சிசெயு
முன்மதியே பேறருளே முஹம்மதுர் ரஸூல் நபியே (6)

இழிக்காளர் வஞ்சநெறிக் கெட்டாமல் வந்தொரு
வழிக்காளர் மாண்டமண வாடைகொண்டு சூடாரே
மழைக்கா லசுகாபி வாய்ந்தவன மட்டாக
முழுக் காரணங்காட்டு முஹம்மதுர் ரஸூல் நபியே (7)

வேதநெறி யாதியுரை வித்தாக முத்திநிலை
பேதநெறி யென்றவொன்னர் போலைந்து பாரரோ
காதநெறி வீசுமுயர் கஸ்தூரி மேனியுங்கண்
மூதறிவு நல்கு முஹம்மதுர் ரஸூல்நபியே (8)

திக்கலருங் கீர்த்திமதி செல்வமுடன் பெற்றுலும்
அக்கன நுள் பெற்று மருள்பெறுத லெவ்விதமோ
மக்கநகர் வந்து மதீன நகர் நல்லரசு
முக்கியனாய் நின்ற வெங்கள் முஹம்மதுர் ரஸூல்நபியே (9)

மறையோர் நெறியோர் வழியோர் மொழிக்கிழவே
குறையோர் குறைநோய்கள் கொண்டனவை தெங்நாளே
நிறையோர் சபையிலுமை நிந்தைசெய்தோ னவர்காணு
முறையோது மெங்கள் முஹம்மதுர் ரஸூல்நபியே (10)

தீங்குடைய வஞ்சகர்தஞ் செய்கையினா லுள்ளயர்ந்து
பாங்குடனே யெந்நாளும் பாதவிப்ப தெவ்விதமோ
தேங்கமழுங் குங்குமப்பூஞ் செழும்புயத்தீர் வாய்வழங்கா
மூங்கனுய்யக் காத்தருளு முஹம்மதுர் ரஸூல்நபியே (11)

பொற்காட்டு நற்மேனிப் புன்காவி தந்தநகை
வற்காட்டிக் கண்காட்டும் வஞ்சியர்க்கே யாவேனோ
விற்காட்டும் வெள்ளிமூடி மேற்காட்டிச் சிபுரீல்க்கு
முற்காட்டு மூப்புடைய முஹம்மதுர் ரஸூல்நபியே (12)

பொய்யுரை யுஞ்சூதும் பொல்லாங்கு நிந்தனையுங்
கையுரைகோளுந் துனியர்க் கைபுரையி லாவேனோ
மையுரகம் பேசிப் பணிந்தழகு பெற்றுவா
மொய்யுரை கொடுத்தாளு முஹம்மதுர் ரஸூல்நபியே. (13)

சழக்குடையே மேன்மைகொண்டு சார்புபற்றிப் பொய்தொண்டு
வழக்குரைக்கு மொன்னார் மதிக்கேற்ப தெவ்வினையோ
வுழக்கரைகொண் மாவதனா லோராயிரர்க் குமுனா
முழக்குவித்த காரணத்தின் முஹம்மதுர் ரஸூல்நபியே (14)

வேட்டமுறமேவும் விபாமுடன் கொஞ்சிநயங்
காட்டமுத வாய்மடவார் கண்வலைப்பட்டேங்குவனோ
காட்டகத்தின் வேண்டமதி காணப்புலி நேர்வழியே
மூட்டவருண் மூட்டுவித்த முஹம்மதுர் ரஸூல்நபியே (15)

புன்னெஞ்சி சிரக்கமில்லாப் பொய்புரையா பாய்சென்றன்
னன்னெஞ்சி னுவலெல்லா நச்சியிட லெவ்விதமோ
கன்னெஞ்சிற் கொண்டோரைக் கைதாங்கும் வள்ளலுக்கு
முன்னெஞ் சுதைத்தழைக்கு முஹம்மதுர் ரஸூல்நபியே (16)

## கிலுறுநபிபேரில் ஒருபா ஒருபஃது.

திருவா யுலகமனைத் தினுக்குஞ் சிறந்த வொளியாய்த் தெளிவாகி
மருவா யெவையு மிகமருவு மலிந்தவுயிர்க ளிடையரிய
கருவா யமைந்த வல்லவன்றன் கருணைநபியா யெந்நாளு
முருவா யுயிராய் நின்றோங்கு முண்மை கிலுறு நன்னபியே (1)

எறியுந் திரைசூழ் புவியிடத்தி லிருக்கு மனுடர் பல்லருக்கு
வறியும் பொருளாய்க் காத்தோம்பி யரிதாய் நோக்கும் பெருங்கருணை
செறியு மதியீர் வண்மையெலாஞ் சிறந்த காத்திற் காமுனாச்
சிறியார்க் கன்பு மிகவுதவுந் தெளிவே கிலுறு நன்னபியே. (2)

திடரின் பவத்தி னுள்ளமெல்லாஞ் சோர்வுற் றறிவு மதிகலங்கி
யிடறி னுளன்ற சிறியவர் கட்கினிதி னெதிர்வந் துரைத்தருளு

மடல்சேர் பெருமை யுடையீசெம் மாகத்தலவுந் திருவொளிவே
கடல்சூழ் தீவு மற்றிடமிங் காக்குங் கிலுறு நன்னபியே (3)

எண்ணங் கலங்கி நினைவிழிந்தே யிரங்கும் பற்றொன் றில்லாமல்
வண்ணங் கலங்கு மரக்கலத்தும் வந்தாதரவுஞ் செய்யுங்கோவே
பண்ணு ழிழிவ் கோலத்திற் பலர்க்குமறிய வொருகப்பல்
நண்ணும் பகைஞர் தமைக்காக்கு நலஞ்சேர் கிலுறு நன்னபியே (4)

பொய்மை யுடைய வொலிமார்கண் மேன்மையுரிய ராகவின்ற
மைமைபேவ னிதமருளி யழகாம்பெருமை தருங்கோவே
கைம்மையுடைய மூச்சிதங் கருத்தின் மகிழ வல்லோனுஞ்
செய்மை யறிவின் மிகப்போற்றுஞ் சிறந்த கிலுறு நன்னபியே (5)

கற்றுங்கடலு முறுகுறிப்புங் காணுதிருக்கு மப்போதும்
வேற்றுத்துறையு மறியாத வேலைதானு மாதரிக்குக்
தேற்றப்பொருளே நிலையுயிரின் சிறந்தபுனலே மிகவிண்டு
போற்றப் பொலிந்த மணிவிளக்கே புகழ்சேர் கிலுறு நன்னபியே (6)

அச்சமகற்றித் துயரகற்றி யகந்தையகற்றி மேணிலையி
னிச்சைபெறவே யுதவிபுரிந் தின்பமருளு மணிமதியே
யுச்சப் பொருளாற் படுஞ்சுவரை யுயரநிறுத்தி மேனடக்கும்
விச்சை விளக்கு நாயகமே வென்றி கிலுறு நன்னபியே (7)

வாரியிடத்து மற்றிடத்தும் வனங்களிடத்துந் தீவிடத்தும்
பாரினிடத்து மற்றிடத்தும் பாதுகாத்து நிறநோக்குங்
காரிசனைய கொடைக்காக் கையைக்கொடுத்து விலைபட்டுச்
சீரின்மீண்ட பெருமானே செய்யகிலுறி நன்னபியே (8)

வாசமருவு முளத்தாலு மலர்ந்தவரிசை யொருவேந்த
னேசமருவு யுறவுமைச்சாய் நினைவினின்ற வறிவிடையீர்
பாசமகல வெளியோர்கள் பாத்தினாலு மிகவாய்ந்தே
தேசம்புகழக் காத்தோங்குந் தேவேகிலுறு நன்னபியே (9)

கரையுங் கடலுங் காட்டகத்துக் கலந்துவிரண்டு கடலிடத்துந்
தரையினிலவும பெருங்கோவே தவத்திற்சிறந்த நாயகமே
யரையவெவர்க்கும் போராசா யரியபொருள்கள் கைப்படுத்தி
கறையின் மனுடர் தமைக்காக்கு நீதகிலுறு நன்னபியே. (10)

திசையிலெவனுஞ் செல்லிடத்துந் திகைத்தவிடத்து மெளியவரை
நசைகொண்டு தவி புரிந்தாலு நண்புபெருகும் போராசே
யிசையும்பொருள் மிகவுணர்ந்தே யென்று முயிர்பெற் றினிதிருக்கும்
பசைகொணிதியே யுண்மதியே பலனேகிலுறு நன்னபியே (11)

## முஹ்யித்தீனாண்டவர் பேரில் முனாஜாத்து.

அதியத் திருந்தசோதி யுடங்கிலா வுகதத்தாகு
மிகுபுகழ் வாகிதிய்யா விளங்கிய வொளிவாய்நின்ற
நகைவளா ஹக்கானேன்பா னல்லகொள்ளும் பொருளேயெற்றுக்
ககனமிம் புவியும்போற்றுங் கவுதுயா முஹ்யித்தீனே (1)

பாத்தினுய் லாகிருகிப் பார்வையுங் கேள்வியாகி
யேத்ததோர் வாசமாகி யெடுத்ததோ ரின்பமாகித்
தோத்திரஞ் செய்யக்கூடாச் சொரூபமா யமர்ந்தசோதி
கார்த்ததோர் வடிவாய்வந்த கவுதுயா முஹ்யித்தீனே (2)

தபாவத்தோன் றில்லாநாயன் றனதின்ப மேவிவாழும்
நப்குள்ள தூறுல்குல்தில் நன்மணித் தொட்டின் மீதில்
சபுறுடன் றுயில்செய்கோவே தாக்கத்தில் லாதவேஷ
கயுலத்தை யகற்றுமையா கவுதுயா முஹ்யித்தீனே (3)

தானியாய் தூலிதாகிச் சாற்றவு மடங்கானுகி
மோனிபால் நாத்திக்காகி முடமுட னகமோடங்க
மேனியாய் ஜிசுமாமுன்ன மிதாலுமாய் நின்றவென்றன்
கியானியா யிலகும்வாஜ்வே கவுதுயா முஹ்யித்தீனே (4)

ஜாயிசும் வாஜிபோடு குஸ்தகீலான கோலம்
ஜாயிசு முஸ்தகீலுஞ் ஜாயிசாய் வாஜிபாகும்
பாயிசூ மென்றுசொல்லப் பசுவுட னறிவனுகக்
காயிசை யகற்றுமையா கவுதுயா முஹ்யித்தீனே (5)

காமிலா யிருப்பதென்னே காபிலா யிருப்பதென்னே
ஜாமிஆ யிருப்பதென்னே சாரிமா யிருப்பதென்னே
காமியா யிருப்பதென்னே நானில முழுதுந் தாங்கள்
காமிரா யிருப்பதாலே கவுதுயா முஹ்யித்தீனே (6)

காதிமாய் நாளுந்தங்கள் கதமென்றன் றலைமேல்வைத்து
காதிமா யிருப்பதென்னே நாடின பேர்களுள்ளம்
யாதுமா யிருதுமாகி யெங்குமோர் பொருளாய் நாளுங்
காதிமாய் நின்றகோவே கவுதுயா முஹ்யித்தீனே (7)

தாயிமாய் ஹம்துசொல்லுந் தகுதியு முடையானுகில்
வாயுமாய் வயிறுமாய்மேல் வழிவிடு நாவுமாகிப்
பாயமா யின்பத்துய்க்கும் பரிசுமாய் நிறைந்தகோவே
காயிமா யாளுமையா கவுதுயா முஹ்யித்தீனே (8)

தாத்திளில் சிபாத்துமாகித் தகைமையு முடையனுகி
லேற்றதோ ரிருதஞ்சேர்ந்த அருவாலும் அபுகாலும்போல்

பாத்துறு முடப் புங்கூடிப் பல்வினைக் காளாகாமற்
காத்தருள் புரியவென்றுங் கவுதுயா முஹ்யித்தீனே (9)

றத்தில்லா யீட்சியில்லா றப்பெனும் பெரும்பேரில்லா
லொத்தெனு மிறையோன் யார்க்குங் கத்தனுமெனுமோர்சத்த
மத்தல்லால் வேறுமுண்டோ மானிடர் துன்பத்திற்குக்
கத்தனு வீருப்பதென்னே கவுதுயா முஹ்யித்தீனே (10)

சாயிதர் வினையினாலுந் தயங்கியே நெறிநில்லாமல்
பாயிதாக் கானதாலோ பழையதென் றெண்ணத்தாலோ
நோயில்லர் வாழும்வாழ்க்கை நன்மையாமையாமெய்யா
காயிலாக் கிருபைசெய்யுங் கவுதுயா முஹ்யித்தீனே (11)

சறுயிலும் வெளியுமொன்றாய்த் தாங்கியே பெரியோனுள்ளந்
தறுயிருய்த் திரண்டசோதி தங்கரிப் பானதாலே
மறுயிரு னையோர்சைய்கு மனுமதி லாக்குதவித்த
கறுயிறில் கறுயிறேநீர் கவுதுயா முஹயித்தீனே (12)

ஷாகிதுக் கானபேர்கள் சாட்சியா மல்லால்வே
மாகுவா றுண்டோவாயா லறைகுவார் கலிமாப்போலாம்
வாகுட னடிமைநோதல் வழியிடஞ் சோரச்செய்யுங்
காகிறே காதிரிய்யே கவுதுயா முஹ்யித்தீனே (13)

சிபாத்தொரு வேழுஞ்சேரா கிபாத்தொரு வேழுமேழாய்
கபாத்தரு மறுத்தமாவுங் கலந்ததோர் தோற்றமேழும்
ஒபாகுமான் றன்னுணை யுடையவே சோரத்துன்பக்
கபாடத்தை யகற்றுமையா கவுதுயா முஹ்யித்தீனே (14)

லிறுறினுன் மனங்கொணைந்து நினைத்துள முருகிக்கண்ணாற்
கிறுறெடு மருவிபாயச் சிசுமெல்லாந் துயரமென்னு
முறுதுள வின்பந்துய்ப்ப முடுகுதல் தருமோவென்னுள்
கறுனுட னமருங்கோவே கவுதுயா முஹ்யித்தீனே. (15)

தாகிறுகிய் தோர்மாது தனதுரு மைந்தன்செத்துப்
போகவே யழுதவேனை புகழுட னெழுப்பியீந்த
போகவாழ் வுடையகோவே புண்ணியப் பொருளேயென்றன்
றாகநோய் போக்குமையா கவுதுயா முஹ்யித்தீனே. (16)

றல்மிலே நடந்துநித்தஞ் சொல்லொண்ணாப் பாவந்தேடி
இல்மில்லி யிணங்காதாக்கை யெடுத்ததோர் பிணியால்வாடி
நன்முனு சாத்துஞ்செய்ய நலந்தெரி யாதபாவிக்
கன்நோய் போக்குமையா கவுதுயா முஹ்யித்தீனே. (17)

ஆரிபி னானபேர்க ளடங்கலுந் துதிக்கத்தக்க
நேர்மையே கொண்டபாத நினைச்சுமுன் ஜெனனபாவந்

திருமே தங்கள்சாதிம் செய்லகு வாலேப்பார்க்கக்
காருமே கடைக்கண் பாருங் கவுதுயா முஹ்யித்தீனே. (18)

காயிதுக்கிருக்க வெண்ணுங் கருத்துள்ள செய்கைக்கூவி
வாயுரை கேட்பதாக மருங்கினில் விடுத்துத்துன்பத்
தீவினை யகற்றிவிட்ட தேவரீர் திருப்போணே
காம்பிணி போக்குமையா கவுதுயா முஹ்யித்தீனே. (19)

பகுமில்லா தொருஜின்கொண்டு போனதோர் பாவைதன்னை
யகமியப் பொருளைச்சொல்லி யவடந்தைக் கறிவித்தின்ப
மிகையுடன் றேவைகொண்டு மெல்லியுங் கிடக்கச்செய்த
கருதியே சரணமையா கவுதுயா முஹ்யித்தீனே. (20)

குற்றத்து ஐனியாகக் குவலயத் துதித்தவள்ளள்
துற்றத்துல் வைலாவானோர் பேர்வழித் தோற்றமல்ப
ம்ற்றத்து நாமஞ்சொல்லில் வருமொரு வுதவியென்றீர்
கற்றத்தொன் றிலாதகோவே கவுதுயா முஹ்யித்தீனே. (21)

ஹபீதுநீர் ஜிசமும்நீரே ஸ்மனுநீர் கல்பும்நீரே
சுபுகும்நீர் மிதாலும்நீரே கனதும்நீர் பறுலும்நீரே
அப்தும்நீர் அசலும்நீரே ஆலிம்நீர் இல்மும்நீரே
கபிறும்நீ ரானகோவே கவுதுயா முஹ்யித்தீனே. (22)

லாயிலா ஹாவைநீக்கி நாட்டமில் லல்லாதன்னில்
கூயிரு தத்திற்பூட்டிக் கூட்டித்தம் பன்னிரண்டின்
மாயில்லா தத்தைச்சேர்த்தி மன்னிய கல்பிலூன்றி
காயில்லா திருக்கச்செய்யுங் கவுதுயா முஹ்யித்தீனே. (23)

மீமதே முகம்மதாகி முகம்மதே அகுமதாகி
மீமில்லா தகதுமாகி மேவுமூன் றெழுத்தினின்றும்
ஆமெனுந் தொனியுஞ்சொன்ன அலிபிரு ஹுக்கத்துந்தானுய்
ஹாமிதும் ஹம்தும்நீரே கவுதுயா முஹ்யித்தீனே (24)

நூறினி ஞறும்நாறில் நண்ணிய பனலும்நீரிற்
கூறியமணலும் மண்ணிற் குறித்தெழும் ஆதமாகித்
தேறிய இசுக்கேஹவ்வாத் தியங்கிய வொடுக்கமக்கள்
காறியே யெதிலுநாளுங் கவுதுயா முஹ்யித்தீனே. (25)

ஒயிலெனு நரகந்துன்ப முயாத னின்பமாக
மயமுறு மிருளும்வெள்ளி மருவின வினையும்பற்றி
நயமுறவட்கை வைத்தால் நாடிய நபுகசிக்கிக்
கயமுலு மாகாக்காருங் கவுதுயா முஹ்யித்தீனே (26)

கூவதே கையுமாகிக் கூவதே காவிலாகிக்
கூவதே காதிருகிக் கூவதே ஹமீதுமாகிக்

கூவதே பசிறுமாகிக் கூமுத்தக் கல்லிமாகிக்
கூமுரீதான கோவே கவுதுயா முஹ்யித்தீனே (27)

ஏயதே மூலமாக வெடுத்ததோர் றாகுமேவுங்
காயமா மிதனைக்காணக் கருத்துட னறிவுநல்கி
மேயதோல் தீங்குருந்து மீறிய கிருபைநல்கிக்
காமிமா யாளுமையுங் கவுதுயா முஹ்யித்தீனே (28)

வான்வளர் வெள்ளியென்ன வரிசையி னிருபத்தேழாய்த்
தான்வரு மெழுத்தும்பற்றித் தகுதியின் பாடல்செய்தான்
கோனருள் அப்துல்காதிர் கொண்டன்மென் ஹபீபுலெப்பை
தேனிலு மினியபிள்ளை செய்கப்துல் காதிரன்றே (29)

## முஹ்யித்தீனாண்டவர்பேரில் இன்னிசை

ஆதியரு ளோர்ங்கு மண்ணல்நபு பேரரெனப்
பூதலங்க ளெல்லாம் புகழுவரும் புண்ணியமே
மாதவங்கள் செய்யு மகத்துவர்கள் கண்மணியாய்க்
காதகல வந்துதித்த கவுது முஹ்யித்தீனே (1)

உள்ளமிகக் கலங்கி யுண்ணு றுணர்வழிந்து
தள்ளுந் துயரும்பத் தாங்கா துழல்வதுவோ
கொள்ளைகொள்ளும் வெம்பூதக் கொடுமையொடு வஞ்சகமுங்
கள்ளமெல் லாம்போக்குங் கவுது முஹ்யித்தீனே (2)

ஊக்கமிகத் தளர்ந்தே யோயாது பாழுங்கவலை
யேக்கமது கொண்டிடியா ரேங்கித் தயங்குவரோ
தேக்குமுயர் மெய்ஞ்ஞானச் செழுஞ்சுடரா யிவ்வுலகங்
காக்குதற்கு வந்துதித்த கவுது முஹ்யித்தீனே (3)

நெஞ்சமிகக் கலங்கி நினையழிந்து நும்மடியார்
தஞ்சமொன் றுங் காணரிதாய்த் தவக்கங்கொண்டு நிற்பாரோ
மஞ்சு தவழ் பூஞ்சோலை பகுதாது நாயகமே
கஞ்சமலர்த் தாளாருங் கவுது முஹ்யித்தீனே (4)

சிந்தித்துஞ் சிந்தை செயலழிந்து நும்பாதம்
வந்தித்து முள்ள மறுகிக் கலங்குவதோ
சந்தித்துத் திண்டோட் டாரதிபரே நன்மையெல்லாங்
சந்தித்த நாயகமே கவுது முஹ்யித்தீனே (5)

வெம்பித்த வஞ்சனையின் வெங்கடியா லுள்ளமெல்லாஞ்
சம்பித் தவக்கங்கொண்டு தத்தளித்து வாடுவதோ
தம்பத்தின் வந்துதித்த தாபரமே பன்மையெல்லாங்
கம்பித்து நின்றவெங்கள் கவுது முஹ்யித்தீனே (6

வாட்டம் படமனமும் வன்மைபட வுள்ளமெல்லாங்
கோட்டம் படவடியார் கொண்டதுய ராற்றுவரோ
நாட்டப் படமகிழ்ச்சி நல்லுடலே வளம்பெறவே
காட்டும் பதிநிதியே கவ்து முஹ்யித்தீனே (7)

நீரா றொலித்தோட நெஞ்சகத்துங் கண்ணிடத்துங்
கோராற்றினு லெளியோர் கொள்ளுந்துயர் போக்குமையா
பாராருங் கீர்த்திப் பதிஜயிலான் மன்னவரே
காராரு நன்கருணை கவுது முஹ்யித்தீனே (8)

மைந்தரொடு மெந்தையருந் மக்களொடு சுற்றங்களுந்
தந்தமனமே வெறுக்குந் தற்காலம் போக்குமையா
சிந்தைவள ரானந்த ஜெயிலானி நன்னகரா
கந்தமலர்த் தாளருளுங் கவுது முஹ்யித்தீனே (9)

கோப்புடைய வெங்கடியின் கோட்டி யணுவும்வணுகா
நீர்ப்புடையா ருன்மையல்லா னீணிலத்தில் வேறிலையே
யேப்புடைய பூதமெல்லா மெப்புறத்து நாடாது
காப்புடைய வல்லவரே கவுதுமுஹ்யித்தீனே (10)

ஓராயி ரத்திலுங்க ளுயர்நாமமே யுரைத்தார்
தீராத வன்மையெல்லாந் தீர்ந்துமுன்ன மெய்துவனென்
றோரா ரமிர்தமொழி யப்படியா மிப்படியென்
காரார் தமப்பேறே கவுது முஹ்யித்தீனே. (11)

முற்றிற்று.

---

## முஹ்யித்தீ னண்டவர்பேரில் ஆசிரிய விருத்தம்

சீருலவு கருணையா லெவ்வுலகு மெந்தெந்த ஜீவஜெந்தும் புகலவே
செய்துதக் நிலையோ டிறம்காக்கு முறைவாழி தேடரிய மெய்மைவாழி
பாருலவு மன்பதைகள் மற்றநவக ணேசர்வழி பயின்றுநற் கதிபெறுகுவான்
பண்ணரிய மறைகொண்டு தூதாகி வந்தநம் பார்த்திவர் முஹம்மதுரஸூல்

பேருலவு தவமென்ன வருகின்ற பெண்பிள்ளை பெற்றபிள்ளைப் போராய்ப்
பேதகத் துழல்கின்ற சிறியோர்க ளுறுதிநிதி பேறென வருங்குரிசிலே
சூரியர் தவமன்னர் வாகுநகர் பகுதாதின் முச்சுடரி னின்றிலங்கு
முஹ்யித்தீன் முஹ்யித்தீ னென்றவரு மேத்தவரு முஹ்யித்தீன் முஹ்யித்தீனே

நன்னெறி பிழைத்துமற் றெந்நெறியி னுஞ்சிந்தை நனிகொண்டு வன்மையுநுல்
நானிலத் துறுபண்ட மேனயத் தவையென்ன நடைபூண்டு திரியுமெளியோர்
புன்னெறி யினைப்போக்கி யறிவா லெடுத்துவளர் புகழ்நெறியி லாக்குமாசே
புண்ணியத் துறைமீடயி னண்ணிநடனத்தகை புனைந்து விளை யாடுமொலியே

சொன்னெறியினுக்குவமை யாதவனன்மத்தனொரு தொல்லைவிதிகைக்கனவெனத்
தோற்றுவித் தறியாத காரணம் விளைத்தமெய்ச் சோதியே யாதிகுருவே
முன்னெறி விளக்குமுழு மதிமயமே பகுதிதாதின் முழுமணியி னோங்குநிதியே
முஹ்யித்தீன் முஹ்யித்தீ னென்றெவரு மேத்தவரு முஹ்யித்தீன் முஹ்யித்தீனே

கண்டபல விலையுறுதி யானடைகள் கணியாது கருதாது முயலுமனமுங்
கபடமொடு வஞ்சகமு நிந்தையவ ஞாயமுங் கணியாது கனியுமுணர்வுங்
தண்டனையி லாத்மத கரியென்ன வெட்டவெளி தனிலேறு மகவீரமுந்
தகையுடைய முதியவர்க டம்மோ டெதிர்க்குமொரு சண்டாள வன்குணமுமே

கொண்டவன் கடைகெட்ட பாவியான் றுயரினேழு கொடுமைக்கு னின்றுழல்
கொண்டாடி நம்பாத கெதியாக வந்தனன் குளிரன்பு தந்தருள்வீர் [பவன்
முண்டக மலர்த்தடஞ் சூழுமுயர் பகுதாது முதுநகர் புரந்தவொலியே
முஹ்யித்தீன் முஹ்யித்தீ னென்றெவரு மேத்தவரு முஹ்யித்தீன் முஹ்யித்தீனே

பாதகத் தொடரினான் மரியாதை யின்மையாற் பலபேருமுக் துய்த்தலாற்
பவகாரி யென்பதா லவகேடு நிலையினாற் பலனுறுதி யொன்றுமிலவாற்
றோதகப் புன்மையான் மடமாத ருறலினார் றுதிமுறைகள் பேணவிலதாற்
சோர்விதரு பிணிகளா னீர்விழி ததும்பலாற் றுயரமெனு மொருபாவியான்

மீதகத் தருளினா லன்பினா லாளுநவ மிக்குடைய குருநாதரே
மேன்மைதரு நம்பாத வுபயமே யபயமினி வேறில்லை வந்தடைந்தேன்
மோதகத் துணிபினால் வெகுநோய்க டீர்த்தவா முதியபதி தாதினரசே
முஹ்யித்தீன் முஹ்யித்தீ னென்றெவரு மேத்தவரு முஹ்யித்தீன் முஹ்யித்தீனே

வாடிமெலி பயிர்போல வெரியிலிடு தளிர்போல வலையிலிடு பறவைபோல
வளியிலுழல் புனைபோல நிலைதவறு மதிபோல வறுமையட ரிளமைபோல
வோடிமறு குழைபோல குழியில்விழு நரிபோல வொளியினதி ராவுபோல
வுணர்நிலை தடுமாற வுடலினிலை தடுமாற வுறுதிபெற வழியின்றியே

தேடியுரை குழறிநுக் தினமுகத் தோற்றமே தேறுமா தாரமெனவே
தெரிசிக்க வந்தனன் வந்தன னன்பினருள் செயகுவீர் சமயமிதுவே
மூடிய வருந்துயர்க ளியாவுமகல் வித்தபுகழ் முதியபகு தாதினரசே
முஹ்யித்தீன் முஹ்யித்தீ னென்றெவரு மேத்தவரு முஹ்யித்தீன் முஹ்யித்தீனே

சுத்தமா தவரொருவர் மல்வாதை சபையினிற் சுகமாக வருள்செய்தவா
சோரனுக் குள்ளஞ்சு முறைநீக்கி யொலியாய்த் துலங்கவா மருள்செய்தவா
சுத்தவார் பறவையைத் துண்டாக்கி யுயிரோடு தானேக வருள்செய்தவா
தடைகொண்ட முடவனுக் கடுபிணிக ளற்றவுட றந்தறிவு மருள்செய்தவா

கத்தனோ டெப்போது மகலாது தெளிவாற் கலந்தடைய தமையாளுநற் [மணியே
காவல்கொண் டுலகத்தை யொருநொடிப் பொழுதிலே கண்டுணருமென் கண்
முத்தியே யாயநகர் பகுதாதின் வள்ளலே முறைகேட் டெனையாள்குவீர்
முஹ்யித்தீன் முஹ்யித்தீ னென்றெவரு மேத்தவரு முஹ்யித்தீன் முஹ்யித்தீனே

உட்லெரிவு கைகால்க ளெரிவுநஞ் செரிவுமுட லுலர்தலொடு வெப்பமுழலு
முட்கார்ந்த லதிசார மீளையொடு பாண்டுகப் மூதைவலி குன்மமேகப்
படலமுக வர்தமது மேக்மிழி சூலைசொறி பங்கிவெடு புண்கிரந்திப்
பட்சவா கந்தாக மழிகுட்ட முதலாய பன்னோய்க ளெந்நாளுமே

கடலுலகி லுங்கடிரு கர்மத்தை யொருபோது கருதுவார்க் கும்மனுகிடாக்
காரணக் குருவென்றெ னுள்ளத்தின் மாறாது கனிவாய்த் ததிக்குமெளியேன்
முடலையுள பிணிபாவ நீக்கியருள் புரியுமெம் முதல்வரே பகுதாதில்வாழ்
முஹ்யித்தீன் முஹ்யித்தீ னென்றெவரு மேத்தவரு முஹ்யித்தீன் முஹ்யித்தீனே

மதிவிட்டு மேலவர்செ ரனிலைவிட்டு நல்வினையின் வகைவிட்டு மாறுங்கடயின்
வழிவிட்டு மானமுள முறைவிட்டு வேசியரின் மயல்விட் டிடாதபடியாற்
கொதிவிட்ட பாவவன லெதிரிட்டு வெம்பிணிகள் கொளவிட் டிடத்தியரெலாங்
குதிவிட் டுடற்பொறையை மிதியிட் டலைப்பவணர் சூலைவிட் டுழன்றலறியே

துதிவிட்ட பெயலிரு விழிவிட்ட நீரமழை சொரிந்திட்டு வாய்விட்டலறுத்
தொனிவிட்டு நும்மடியின் முறையிட் டடைந்தனன் றுணைவிட் டிடாதருள்செய்
முதுவிட் டிடாதுறவு தொடர்விட் டிடார்வளரு முக்யநகர் பகுதாதில்வாழ் [வீர்
முஹ்யித்தீன் முஹ்யித்தீ னென்றெவரு மேத்தவரு முஹ்யித்தீன் முஹ்யித்தீனே

நன்மறை விளக்குநபி நாயகர் பொருட்டினு னனிபொருள் பொருட்டினுலு
நானெறியி லுக்குரிய வொருமார் பொருட்டினு னுட்டிய தவப்பொருட்டாற்
புன்மதி கலங்கவரு வெம்பிணிகள் பல்வாதை புனையும் பலாய்களெல்லாம்
புறமே யகன்றொழிய வகமே மகிழ்ந்தினிய புகழே புகழ்ந்துகொளவே

வென்மதியி னுலிறை யிடத்தாற் பலன்பெற வியந்தருள் சுரந்தருள்குவீர்
வெப்புமுத லானவையை வேறிடத் தேகவழி விட்டவலு மைக்குரிசிலே [வாழ்
முன்மகிமையுள்ளவரு நம்மகிமை கொள்ளுமொரு மூதெழில்கொள் பகுதாதில்
முஹ்யித்தீன் முஹ்யித்தீ னென்றெவரு மேத்தவரு முஹ்யித்தீன் முஹ்யித்தீனே

வேதமொழி யாலறிவின் மேலவர்க ளாளெரிகண் வெகுநா வினர்களாலும்
மீறுமய லார்கற்பின் மடவியர்களால் ஜின்னின் வெம்மையாற் பிணியுணுகினும்
யாதுமுராணுகன் றப்புரங் காணு திரிந்தோட நுங்கருணையின்
இருவிழிக ளோடலர்ந் தெழுசந்த்ர மாமுகமெ னெதிர்காண வந்தருள்செய்வீர்

நீதநபி நாதர்மரு மகனுகி வுந்தவரு ணிமலரலி தம்போனுர்
நினைவுறுதி மாறு வாத்தபூ சாலிகுயர் நெறிவள்ள லீன்றமணியே
மூதறிஞர் போற்றவரு தீபமே பகுதாது மூவுலகு வொளிர்சோதியே
முஹ்யித்தீன் முஹ்யித்தீ னென்றெவரு மேத்தவரு முஹ்யித்தீன் முஹ்யித்தீனே.

### சாகுல்ஹமீ தாண்டவர்பேரில் முனாஜாத்து

அகதாய்க் குறிப்பொன் றில்லானு யளவுமறிவு மெட்டானுய்
காப் பொருளா மிறையவன்ற னெறிகொள் பெருமைக் குறுபொருளாய்

அருமதிரசூல் நபிபேர அவிலியாக்கள் கண்மணியாய்த்
தருதிபெருகுந் தொன்னாகை சாகுல்ஹமீது நாயகமே. (1)

பதரை யுண்ழத்து வகிர்ந்துபின்னும் படர்வானுப்பு நபிபிரஸூல்
புதல்வியீன்ற மணிவழியே புநுமைகொண்டு வருங்கோவே
நிசமேவிளங்குங் காரணமே நிலவுங்கருணைப் பெருங்கடலே
சதமேதங்க டிருப்ப[illegible]மே சாகுல்ஹமீது நாயகமே. (2)

தவுபாவென் றுங் குற்றநிலை தாங்குமாரி பீன்களெல்லா
நவமேகொள்ளுந் திருக்கழலே நாளும்நம்பு மடியவர்கள்
பவமேசெல்லு மருணயனம் பார்த்தேயிதங்க டாவேண்டுந்
தவமேநிதியே தென்னாகை சாகுல்ஹமீது நாயகமே. (3)

தாவிதாகுந் துறைநடுவே தங்குந்துறையி னசுமாக்கண்
மோவிலங்கூ லுகூருக முழங்குமணியா யம்மணியே
காலமுழுதுந் திகழ்சுடரே கவலையாவுஞ் செலுவருந்தே
சாலிகானோர் தவப்பயனே சாகுல்ஹமீது நாயகமே. (4)

ஜெவுகருகிக் கபூலாவாய்ச் சிறந்தஆரி லாயெது
குவிகொண்மிதாலா யவையோடுங் குன்னிற்பிலந்த றாகாகி
யெவையுமாகி நின்றவவர்த மினியபுதாரா யுதிராத
தவமும்பயனு மாகிநின்ற சாகுல்ஹமீது நாயகமே. (5)

ஹறமாம்பைத்துல் மகுமூறு வதுவாங்கஃபா நாடினவர்
திறமாம்படியே யருளுமருள் செய்யிதொலியே நம்பொருட்டால்
அறமாம்பலாய்கள் சதாயிதுக ளனுகாதடியார் தம்பாலிற்
றறைமேல்வாரா தகற்றுமையா சாகுல்ஹமீது நாயகமே. (6)

கசாயினை இவ்விடத்தில் கசித்ததுற்றத் துல்பைலா
மிசாய்ந்த மணியிற் றிருமணியாய் வித்தாய் முத்தாயெத்தாத
அசாவாற்கலை தனையெழுப்பு மறத்தன் முகத்தியாகிநித்தங்
தசாமாதவத்தி னாசுதவும் சாகுல்ஹமீது நாயகமே (7)

தாயிமாக சதுபுடையோர் சாலிக்கவுத்த ருனவர்கள்
காயிமாக விரண்டிடையார் கதிக்கும் விழியர்ப் விதிவிதிக்கும்
ஆயுங்கலைக ளுரைநாவா லாலம்பரிக்கும் பெருமானே
சாயுந்துன்பந் தென்னாகைச் சாகுல்ஹமீது நாயகமே (8)

தாத்தாய்சிபாத்தாய் அசுமகவாய்த் தங்குமறுவா குடன்கலந்த
பூத்தாய்சுபாத்தாய் அஜ்சாமகவாய்ப் புகழுமின்சான் காமிலுமாய்க்
கூத்தாயிவைகள் கூவாகிக் கொள்ளுமறிவாய் விளங்கி நிற்குஞ்
சாத்திரப்பயனே நயனுகும் சாகுல்ஹமீது நாயகமே (9)

ரகுமானென்னும் பியரிடத்தே நிலையுமறுகூ மடங்கலுக்கு
மகப்பாய்ப்புறமா யனுபவிக்கு மகுமதிரஸூல் வழிப்பொருளே

மிகவேநம்பு மடியார்கண் மிடிமைத் துயர்மணுகாமற்
றகைசேருட்கண் டருவீரே சாகுல்ஹமீது நாயகமே (10)

சீனத்துடைய துணியாலைச் சிறந்தமனைவி யெனக்கலந்து
மானத்துடைய ஆகிறத்தை மறக்கும் புல்லோர் நல்லோகின்
றீனத்துடனே யுறவாடி யிதயமறுகுஞ் சிற்றடியேன்
ரூனத்துடையீ ரபயமையா சாகுல்ஹமீது நாயகமே (11)

சிற்றிலவுசூது மலுகறுக்குஞ் சிற்றிலக்கீக்கா யெவைகளுக்குஞ்
சிற்றிலசுரு றல்மிடத்தில் சிற்றில்கதரு யிருதாவில்
சிற்றிலசுமா வுடையசபி திருக்கண்மணியே பெருமணியே
சற்றென்றணுகா தாண்டருளும் சாகுல்ஹமீது நாயகமே (12)

சவுனுஞ்சூழும் பெரும்பொருளே சைகுல்மஷாயி காகிநிற்குங்
கவுனுளடங்கு மிகுலூக்குக் கருத்துங்காட்டும் சுகூதுடையீர்
கவனமியாவு மணுகாமற் காக்குங்கிருபை நிறைகடலே
தவமுந்தகுதி யுடையவரே சாகுல்ஹமீது நாயகமே (13)

சிதுகுங்கிதுபுங் கலந்தவுடற் றினமும்பொருளை விருப்பமுற்றுக்
கதிகொண்டறியா துளவோர்தங் கவலைகற்றும் பாஞ்சுடரே
மதியேநிதியே பொன்னினெடு மலையேநிலையே நம்பினவர்
சதமேபதமே யருள்புரியுஞ் சாகுல்ஹமீது நாயகமே (14)

ஸலாலத்துடைய விருணீக்கி நன்மைவிளக்கு நிதிப்பொதியே
விலாயத்துடையோர்க்க கணக்குருவே மிடியோர்க்குதவு மகமேரே
கலாபந்திகழு மயில்வடிவங் காட்டுநயினர் மகமகவே
சலாமும்பேறும் பெறுமரசே சாகுல்ஹமீது நாயகமே (15)

தாகாவென்னு மகுமூதர் தம்பின்புடவிக் கிறையவன்சொல்
வாகாய்நிற்கும் படியாக வகுத்தேன் சிலமொன் றருளுடையோர்
மேகாங்குதுபாய் வருமரசே மோட்சப்பதிவாழ் பெருமானே
சாகாவரிசைத் துறையுலவும் சாகுல்ஹமீது நாயகமே (16)

முல்லாங்காட்டும் பேழையழு நறும்புழிசைத்தும் வெரும்படையிற்
கல்லாமனைவி விடுந்தசையிற் றெக்கும்விடத்தை யறுகாக்கு
நல்லாருவக்கு நபிபேரா நானுபுவக்கு மகமேரா
சல்லாபங்க ளுறைமணியே சாகுல்ஹமீது நாயகமே (17)

ஆதியாய நிலையதனி லடையுஞ்சப்பு முசப்பிடவும்
நீதியாகக் கண்டுயரு நெறியுங்குறியு முடையவர்க
ளோதியோதி யுவக்குநந்த மொளிர்தாண் மலரேயெனக்கறிவே
சாதிமேன்மை யுறுங்கோவே சாகுல்ஹமீது நாயகமே (18)

கப்பாயுள்ள பொருள்களெல்லாங் கண்டேயுணரு மகக்கண்ணும்
ஐப்பாவுள்ள காரியங்க ளனைத்துமறைக்கு மென்குருவே

மெய்பால்வியார மணுகாமல் விரும்பிகாளு மாண்டருளுஞ்
சய்பாயுருமைப் பெருங்கடலே சாகுல்ஹமீது நாயகமே (19)

பனுவல்பல்லவாந் துறையடைந்தார் பண்புந்தவமுந் தருங்கோவே
யதினையுணர்க்கும் சுகூதுடைய வருமைநிதியே பொன்னிதியே
சுனுவாமென்னு முஸ்கமென்னிற் கதித்ததெளியோன் முகம்பார்த்துத்
தணுதென்றவப்பாலெப்போதோ சாகுல்ஹமீது நாயகமே (20)

கிந்திவிட்டத்திற் சிறந்தவொளி கிளருமெகினி லெழுந்தகனி
சிந்தாகுலங் களிக்குமணிச் சேர்ந்தார் சுவர்க்கப் பெருஞ்சுடரே
நந்தாவரின்ச வளர்நாகை நாவூர்பாவூர் கோவூரே
சந்தாடவியே கற்பகமே சாகுல்ஹமீது நாயகமே (21)

காவேமுதலா யைந்தெழுத்திற் காட்டுநடுவே நாளாக
மேவுமுதற்பேர் புவியிடத்தும் விரிந்தபுறப்பேர் மற்றிடத்துங்
கோவாய்நிற்கு மாதியெனக் குறிக்கொள்வினையை யுடையவரே
தாவும்பெருமைத் தென்னாகை சாகுல்ஹமீது நாயகமே (22)

லாமும்கேபு மகாரமுமாய் நான்மூன்றாகி விளங்குவது
ஆமாமுண்டுமதின்மறைய வடக்கும்பொருளு முத்துறையாய்
நாமம்பெற்றோர் வழிபெற்றே நாட்டும்விலாயத் தியல்புபெற்றே
தாமம்பெற்றே வளர்ந்தோளீர் சாகுல்ஹமீது நாயகமே (23)

முகம்மதிரஸூல் மணிபோன்று முழுதுணர்ந்த குசைன்மாபிர்
புகழுமிருபா னொருவருள் புரிந்தசையிது கமீதுத்தீன்
மகவாம்பாத்தி மாவுதவு மணியாயணியா யுலகமெல்லாந்
தகைகொளமுத குணாலயமே சாகுல்ஹமீது நாயகமே (24)

நூறுமுதலாம் நான்குபொரு ளாற்றெண்ணான்கு பதிவியினி
லீறிலிருக்கு மடியார்க ளிதயமுணரு மணிவிளக்கே
வீறுந்தவமும் பெருஞ்செல்வம் வெற்றியனைத்து மருளுதுந்தந்
தாறுமணிப்பொன் றவுலாவின் சாகுல்ஹமீது நாயகமே (25)

வாசித்தாவாய வருநயினார் வழியிலொழுகு நெறிபூண்டு
நேசித்தனேக மாட்டாரை நினைவுட்படுத்திற் தவப்பேறே
பூசித்தறியாச் சிறியவனும் பொன்னின்பதமே கெதிகொண்டோன்
றூகூத்தொழிலே ஞானமையா சாகுல்ஹமீது நாயகமே (26)

ஹவாவிலெழுந்த நாதமதைக் காட்டுந்தகுதித் திருமணியே
உலாஹீம்தயாய் வரும்சைகு யூசுபினையே தானியென
ஜவாபினிறுத்தி முறைமுறையே தயவுபுரியுந் தென்னாகை
தவப்புரியும் ரவுலாவின் சாகுல்ஹமீது நாயகமே (27)

யாதுவளரு முளத்தூடு மினிமைபெருகுங் கண்ணூடும்
போதமமுதக் கனியறிவே பொங்குமென்றன் றவப்பயனே

கோதுவிளையாக் கொடுந்துன்பங் கொள்வரியாருஞ் சுகம்பெறவே
தாதுமலர்த்தா டரவேண்டுஞ் சாகுல்ஹமீது நாயகமே (28)

சிந்தைபெருகுங் களிபூண்ட செய்து அப்துல் காதிறென்பேரன்
வந்துதிக்கும் பயனுதவி மகவென்றுரைத்து நயனுதவும்
புத்திமகிழ்கா மாணிக்கப் பூர்வாழ் ஹுசன்குத் தாசுதவுஞ்
சந்தநிதியே தென்னாக் சாகுல்ஹமீது நாயகமே (29)

## இதுவுமது

அறிவிற்கறிவா யதினிலங்கு மரியவொளிவா யுலகனைத்து
நெறியிற்புரக்கும் வல்லவன்ற னிறைந்தகருணை யுறையகமே
பெறுதற்கரிய பெருந்தவத்திற் பிறந்தமுகம்ம திரஸூல்தஞ்
சறுகிற்கணியே நாகைவுளர் சாகுல்ஹமீது நாயகமே (1)

நவமேயுலகந் தனைப்படைத்து நடுவுநிலைகொண் டடையவைக்குந்
துவமேபுரக்கும் வல்லவன்பாற் சுகமேதுஆவின் பலனருள்வீர்
பவமேயணுகாத் தனையர்பலர் பயன்கொள்சாந்தா சாகிபுக்குந்
தவமேயருள நாகைவளர் சாகுல்ஹமீது நாயகமே (2)

ஓங்குமுள்ளப் பொருளனைத்து முதவுமகிமை பலகோடி
தாங்குமுகம்ம திரஸூல்மெய்ச் சுருதிகருதி விருதுடையீர்
தாங்குநிலைமை பெறமைந்தர் தவப்பேறுங்கள் காதிமுக்குப்
பாங்கினருள்க நாகைநகர் பதியேசாகுல் ஹமீதொலியே (3)

வரிசையோங்கு நெறிநான்கும் வழுவாதாளும் பெருங்கருணைக்
குரியமகமே யெவ்வுலகு மொளிருந்தூண்டா மணிவிளக்கே
தருவேசெல்வந் தழைத்தோங்குஞ் சந்தாசாகி யென்பவர்க்குஞ்
சரணேபேறு பேறருள்புரிக சாகுல்ஹமீது நாயகமே. (4)

உங்கள்பாதந் தனைவிளக்கி யுளமேகொள்ளத் தொண்டியற்றித்
தங்குமடிமை களிலெளிய தகைமை யுடையாதலினு
லங்கங்கவலைக் காகாம லகத்தின்மகிழ்ச்சி குலவிவாச்
சங்கையருள்வீர் வன்னாகை சாகுல்ஹமீது நாயகமே. (5)

விளங்கும்பொருளிற் சிறந்தமறை வேதக்கடலாகிய நயினார்
வளங்கொள்பே ரெனவிளங்கும் வழியிர்கன்மை யொழியீரே
துளங்குஞ்செல்வப் புதல்வரோடு சுகமேபயில்வா னன்னவர்க்குக்
களங்கமிலதா யருணாகை கவுதுஹமீது நாயகமே. (6)

பெருகுநபிமார் பொருட்டாலும் பேறுமொலிமார் பொருட்டாலு
மூரியமூமி னவராலு முண்மையுறைந்த மறையாலுங்
கருணையிறையோன் பாலீந்து கவுதுமுகம்ம தென்பவர்க்குந்
திருமருவு மருணாகை செயிதுஹமீது நாயகமே, (7)

செஞ்சிறு வலைப் பிணிநீங்கி நினைத்தும் பொருளும் பெருஞ்செல்வந்
தஞ்சையரசன் பெறவளித்த தவமேயெங்கண் ணருமணியே
வஞ்சமறவுட் களிப்பேற வளருஞ்சாந்நா சாகிபுக்குந்
தஞ்சநிழலே நாகையுள்ளார் சாகுல்ஹமீது நாயகமே. (8)

### இதுவுமது அகவல்

ஆதிமெய்ப்பொருளா யுயிரெல்லாஞ், சோதிமெய்ப்பொருளிற் றுலங்கியவறியும்
பற்பலகோடிப் பயனெலாமுணர்ந்து சொற்பயனாகித் தோற்றியவருளு
மின்பமுந் துயரு மிதற்குளவினையு, மன்புளஜீவ னனைத்தினுங்காட்டி
யொன்றியுமொன்று வுறுபொருளாகி, நின்றவன்கருணை நிறைதருமணியின்

காரணமாகிக்கணக்கறுந்தொகையும், பூரணமாகிப்பொலிவு கொண்டெங்கும்
பொறையுமறிவும் புநிதமுமிரக்க, நிறையுநடுவு நீதியுங்குணமு
மானமுந்துயவு மாட்சிமையியல்புந் தானமுந்தவமுந் தாங்கியநபிநூர்
முழுமதியென்னுமுகம்மதுநபிதந், மொழில்பேறும்பேறெனவிளங்குமாசே

குருவேநவமே குலந்தருநிதியே, திருவேயருளே செவ்வியவாழ்வே [யே
விளக்கொளிச்சுடரே வேதமெய்ப்பலனே, களக்கறுஞ்செந்தேன் கமழ்தருங்கனி
கருத்தொருமதியே கண்ணின்மணியே, பொருத்துஞ்செயலே பூரணப்பண்பே
நந்நபிபொருட்டால் நாயகனிடத்தில், முன்னிநல்லது ஆவே முற்றருண்முறையே

நாடொறுங்கேட்டு நயனருள்புரிக, வீறுமடியா ரெவ்வமதகற்றிப்
பேருடற்றுன்பம் பிணிகளச்சங், காழற்குணமற் றகன்றினிந்நாமந்
தோத்திரஞ்செய்யத் துணையாயிணையிற், பாத்திரம்பெற்றுப் பாக்கியம்பெறவே
முந்திசேர்நாகை முதுநகர், தத்துவம்பூண்ட சாகுல் ஹமீதே.

### சிலேடைமாலை (இருபொருள்)

### கட்டளைக் கலித்துறை

ஆரணத்தானரு ளோங்கியமக்கத் தருமதுதம்
பூரணத்தானுயர் பேரிசைபல பொங்களித்தென்
வாரணத்தார்பகு தாதுபதிமலர் நாகைவருங்
காரணத்தார்திரு மின்னளித்தாரப்துல் காதிறுவே. (1)

முட்டுப்படும்பிணி யானொந்துடல் முழுதயர்ந்தே
தட்டுப்படுமவ னுங்கெழிலாறுந் தடமுந்தருங்
கிட்டுப்படுங்குறட் டாற்றுயர்போக்குங் கிளர்பகுதாத்
[illegible]ட்டுப்படும்புகழ் நாகையருளப்துல் காதிறுவே. (2)

வேட்டுமுணவு கறியிடும்வாரண மீண்டுலவ
வீட்டுமெழி லியனுகையதிக விருள்பெருக
லோட்டும்மறையத னல்லையாவொலி யோங்குநிதி
காட்டுபணிபகு தாதுயர்மன்னாப்துல் காதிறுவே. (3)

பூகமடன்மண நாகையரும்புகழ் பூண்மணியி
ணுகநிறைபகு தாதுயர்செல்வத் தாசர்சுகம்
போகவசத்தினிற் போகாதிருந்தவன் பூவிலருள்
தாகவிழிமணி யொன்றியவனப்துல் காதிறுவே. (4)

வீறியனஞ்சுக வெஞ்சகார்ச்சுடு வேகமிக்கு
மீறியபுன்செர்லிற் றஞ்சியமூரி வெளியிறப்பக்
கூறியசோக மழித்தருணுகைகொண் டேற்றவண்மை,
யாறியவ்பிற்றரு வீர்பகுதாதப்துல் காதிறுவே. (5)

நாதந்தருமின் பகுதாதுதிபுகழ் நாளுநின்றீர்
போதந்தரும்புண்ணி யத்துறையீர்பஞ்ச பூதவுடற்
கோதந்திருஞ்செய லுள்ளிரிந்தோடக் கொடுமைகொன்று
காதந்தாராது கதிநாகையீரப்துல் காதிறுவே (6)

மயிலாநனிநட மார்கரிணுசை நறுநிழலிற்
செயிலானுலவிய நாகூர்புகழிற் சிறப்புடையீர்
பயிலாத்தவனைப் பயிற்றிவைத்தீர்பதி நேர்மைபெறக்
கயிலாதவனுக்குங் கைகொடுப்பீரப்துல் காதிறுவே (7)

சொற்பகுதாது பலனிறைவாகத் துதிக்கும்படி
நற்பகுதாபதர் நாகூர்புகழ்ச்சி நாதிபரே
பொற்பகுதாகிய மண்மகணீக்கிய போதவின்பங்
கற்பகுதாவரு ளாலுணர்ந்தீரப்துல் காதிறுவே (8)

முனாஜாத்துகள் முற்றிற்று.

## ஜைனபைதா அல்லது பழிக்குப் பழி

(ஒரு சிறு கதை)

நமது தாய்நாட்டின் விமோசனத்துக்காக அரும் பாடுபட்டு வரும் இரு முஸ்லிம் வீர சிங்கங்களாகிய அலி சகோதரர்களுள் இளையவரான மௌலானா முஹம்மதலி அவர்கள் தமது தேசீயப் பத்திரிகையாகிய "காம்ரேடி"ல் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையைத் தழுவித் தமிழில் நமது "தாருல் இஸ்லாம்" ஆசிரியர் ஜனாப், பா, தாவூத்ஷா சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட ஓர் அருமையான உபதேசக் கதையாகும். இதனால் ஏழைகளின் துயரத்தைக் கவனியாமல் எதேச்சாதிகாரம் செலுத்தும் ஜமீன்தாரர்கள் இறுதியில் அடையும் அதோகதியையும், மக்களிடம் பெற்றோர்களுக்குள்ள வாஞ்சையானது செல்வவான்களுக்கும் ஏழைகளுக்கும் ஒரேதன்மையை யுடையதென்பதையும், இட்டார்க்கிட்ட பலன்தான் கிடைக்குமென்பதையும் அறிந்துகொள்ளலாம். இப்புத்தகம் இருபாலரும் வாசித்துணருமாறு எளிய தமிழ் நடையில் சுத்தமாக அச்சிட்டு மிக அழகாகப் பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. இது சிறந்த கருத்துக்களைக் கொண்டிருப்பதனால் எல்லோருக்கும் அத்தியாவசியமானது. விலை அணா 4 தான் வேண்டுவோர் 5 அணா ஸ்டாம்பு அனுப்ப.

இ. செ. முஹம்மது இப்றாஹீம்,
புஸ்தக வியாபாரம், நாப்பாளையத் தெரு, மதுரை.

# முஸ்லிம்களின் மூதாதைகள்

**பெரிய எழுத்துகள். படங்களுள்ளது.**

(இரண்டணா முதல் எட்டணாவரையி லுள்ள தமிழ் புத்தகங்கள்)

ஆதம் நபி (அலை)
சீது நபி (அலை)
இத்ரீஸ் நபி (அலை)
நூஹ் நபி (அலை)
ஹூது நபி (அலை)
சாலிஹ் நபி (அலை)
இப்ராஹீம் நபி (அலை)
இஸ்மாயீல் நபி (அலை)
இஸ்ஹாக்கு நபி (அலை)

யாகூப் நபி (அலை)
யூசுபு நபி (அலை)
அய்யூபு நபி (அலை)
துல்கிப்லி நபி (அலை)
ஷுஐபு நபி (அலை)
மூஸா நபி (அலை)
கிலுறு நபி (அலை)
இல் யாசு நபி (அலை)
அல் யசஉ நபி (அலை)

அஸ்மயீல் நபி (அலை)
தாவூது நபி (அலை)
சுலைமான் நபி (அலை)
யூனுசு நபி (அலை)
ஈசா நபி (அலை)
ஸக்ரிய்யா நபி (அலை)
யஹ்யா நபி (அலை)
மர்யம் (அலை)

முஹம்மது நபிகள் ஸல்
கதீஜா நாயகி ரலி
ஆயிஷா நாயகி ரலி
பாத்திமா நாயகி ரலி

அபூபக்ர் ரலி
உமர் ரலி
உதுமான் ரலி
அலி ரலி

இமாம் ஹஸன் ரலி
இமாம் ஹுஸைன் ரலி
முஹம்மது ஹனீபா
கர்பலா யுத்தம்

முஹையதீன் அப்துல் காதிர் ஜைலானி (ரலி)
இப்ருஹீம் இபுனு அத்ஹம் (ரலி)
ராபியத்துல் அதவிய்யா (ரலி)
மைமூனத்துல் பதவிய்யா (ரலி)
நாகூர் ஷாகுல் ஹமீத் (ரலி)

ஆப்கன் அரசாங்கம்
மிஸர் தேச சரித்திரம்
இப்னு ஸூது அரசாங்கம்

அமீர் அமானுல்லாகான்
அமீர் நாதர்கான்
அமீர் அப்துல் கரீம்
ஹைதராபாத் நிஜாம்

ஈரான் அமீன்
முஸ்தபா கமால்பாஷா
அன்வர் பாஷா

**மானேஜர்—நயினா முஹம்மது புத்தகசாலை,**

திருப்பரங்குன்றம், மதுரை ஜில்லா.

## நான் யார் தெரியுமா?



ஒரு வருஷத்திற்குள் 8000 பிள்ளைகளைப் பெற்றவன் நான்! என்னைப்பற்றி எந்த ஊரிலே பே[illegible]னாலும் கேளுங்கள். எங்கப்பன் மாதா மாதம் வந்து என்னைக் குதூஹலப் படுத்திவிட்டுப் போகிறானென்று பெருமையோடு சொல்லிக்கொள்வார்கள். தினசரி முப்பது அல்லது [illegible]ற்பது புதிய பிள்ளைகளைப் பெற்றுவருகிறேன். இன்னும் சலிக்காமல் இருக்கிறேன். குறைந்த பட்சம் 3[illegible],000 பிள்ளைகளையாவது பெறவேண்டுமென்பது நோக்கம். ஆனால், அப்பனைப் பார்க்கவேண்டுமானால் காசு கொடுத்துத்தான் பார்க்க வேண்டும். வருஷா வருஷம் 1 ரூபாய் கொடுத்தால் என்னை வருஷத்திற்குப் பன்னிரண்டு முறை பார்க்கலாம். ஒரு தடவை மீர்திரியாகப் பார்க்கவேண்டுமானால் அரையணா செலவு செய்து ஒரு கார்டு எழுதுங்கள். மறுநாளே உங்கள் இருப்பிடம் தேடிவந்து குதித்திடுவேன். என் பெயர் படத்தில் பாருங்கள்.

## முந்துங்கள்!

**ரூபா 2-12-0 தான்** **ரூபா 2-12-0 தான்**

### 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி

**சாமான்களின் விபரம்**



14 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா, ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சாட் பொத்தான்கள் செட் 12, ஷை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6, நேர்த்தியான முகக் கண்ணாடி 1, அழகிய தந்த சீப் 1, நேர்த்தியான கத்தி 1, காமினேஷன் நூதன சாவிவளையமும் செயின் 1, உயர்ந்த பென்சல்கள் 12, பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1, பலாக பென் ஹோல்டர்கள் 6, உயர்ந்த நிப்புகள் 12, மணிபர்ஸ், ஜெர்மன் இங்கிபுட்டி 1, இங்கி மாத்திரைகள் 12, செண்ட் புட்டி 1, தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 34, அழகிய பலாக சேப்டி பின்கள் 24, ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 2-12-0.

## ரூ. 2-15-0 பௌண்டன் பேனா ரூ. 2-15-0



**நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!**

இங்கிலாந்தில் செய்து மாக்ஷிமை தங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கிரவர்த்தியால் புகழ்ப்பெற்றுப் பிரக்யாதி யடைந்த ரிஜிஸ்டர்டு W. B. பவுண்டன் பேனா தங்க ப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட் வாட்சு இனாமாய் அனுப்பப்படும். W. B. பவுண்டன் பேனாவும் கடிகாரமும் விலை ரூ. 2—15—0.

ஒரே காலத்தில் இரண்டு பேனாக்களுக்கு ஆர்டர் கொடுத்தால், பாக்கெட் வாட்சுக்குப் பதிலாக ரோல்டுகோல்டு ரிஸ்டு வாட்சு இனாம். படத்திலுள்ளது போல் எந்த கேஷ் ரிஸ்டு வாட்சு வேண்டுமோ நெம்பர் குறித்து எழுதவும்.




THE KRISHNA AGENCY,
119, G. P. O. Madras.

10-ம் பதிப்பு! வெளி வந்துவிட்டது!!

# ஆங்கில ஆசான்

தமிழ் நாட்டில் சுமார் 5,75,000 ஐந்து லட்சத்தி எழுபத்தையாயிரம் ஜனங்களுக்கு உபாத்தியாயர் இல்லாமல் 60-நாளில் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும் உலகமெங்கும் புகழ் வாய்ந்ததும், சென்னை சட்டசபை வித்தியா இலாகா கனம் மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு உயர்தர நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றதும் இன்னும் அநேக பெரியோர்களிடமிருந்து ஏராளமான நற்சாக்ஷி பத்திரம் வாங்கப்பட்டதுமான, எங்கள் ரிஜிஸ்டர்ட் லேடி டிரேட் மார்க் போட்டுள்ளதைக் கவனித்து வாங்குங்கள். மோசம் போகாதீர்கள், இதைக் கவனியுங்கள்.

இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும், அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புட்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம், உயில் பத்திரங்கள், கல்யாண சீமந்த கருமாதி நோட்டீஸ்கள் முதலிய இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும் சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுளுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. மாதர்களுக்கும், சிறுவர் சிறுமியர்களுக்கும், வியாபாரிகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும், பட்லர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், கங்காணிமார்களுக்கும், கான்ஸ்டேபில்களுக்கும் மிகவும் முக்கியமானது. 800 பக்கங்களுக்கு மேல் சீமை காலிகோ பயிண்டு விலை ரூ. 2. ஷை தெலுங்கு பாஷை புத்தகம் விலை ரூபா 2.

# அமிர்த குணபோதினி

**மஹா உன்னதமான நூதன தமிழ் மாதப் பத்திரிகை**

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை, இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. எல்லாம் கருத்து, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே, யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசனமழை. 64-பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும் கிடையாது. 30,000 சந்தாதாரர்கள் உள்ளது. மாதிரி காபி இனும்.

வருட சந்தா உள்நாடு ரூபா 1. வெளிநாடு ரூபா 1-8-0.

"அமிர்த குணபோதினி" ஆபீஸ்,

நெ. 302, தங்கசாலை வீதி, சென்னை.

"முஸ்ஹபுல்மலிக்" என்னும்

# அழகிய மிஸ்ரி குர்ஆன்

நமது குர்ஆனே மஜீத் முழுதும் சாதாரண புஸ்தக சைஸில அதாவது $5\frac{1}{2} \times 7\frac{1}{2}$ அளவில் வெகு அழகாக அச்சிடப்பட்டு ஒவ்வோர் ஆயத்துக்கும் நம்பர் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் பெயரே "அரசர்களின் குர்ஆன்" எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இதைப் பார்வையிட்டாலே அரசர்கள் ஓதக்கூடியதென்பதில் சந்தேகம் தோன்றாது. குர்ஆன் முழுதும் கில்டினால் அழகிய பூவேலை செய்து முழு கில்ட் பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரும் அழகு வாய்ந்தது. தினசரி கையில் வைத்து ஓதத் தகுந்தது. இது ஒவ்வொரு முஸ்லிமின் கையிலும் ஹஸ்த பூஷணமாக விளங்கத் தக்கது. ஏற்கனவே இக் குர்ஆன் பம்பாய் போன்ற விடங்களில் ரூ. 6 விற்றுவந்தது. இப்பொழுது நாம் மிஸ்ரினின்றும் நேரே வரவழைத்ததால் மிகவும் சகாயமாகவே ரூ. 2-8-0 க்குக் கொடுக்கிறோம். மிஸ்ரிலிருந்து இப்பொழுதுதான் நேரே தருவித்திருக்கிறோம். இதைப் பார்த்த பிறகே இதன் அழகும் மேன்மையான பைண்டும் இவ்வகைத்தென விளங்கும். இந்தக் குர்ஆனுக்கு மிஸ்ர் அரசர் பூவாதும் சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார். இன்றே எழுதுங்கள்.

## பாக்கெட் சைஸ் அரபில் அழகிய குர்ஆன்

நமது திருவேதமாகிய குர்ஆன் ஷரீப் முழுதும் பாக்கெட் சைஸில் அடக்கி மிஸ்ரில் அச்சிடப்பட்டு அழகிய முழு கில்ட் பைண்டும் செய்து சில காப்பிகளே வந்திருக்கின்றன. முத்துப் போன்ற சிறு எழுத்துக்களும் அதன் சிறிய அளவும் காணக் கண்ணைக் கவரும் தன்மையில் மிக அழகாக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமின் கையிலும் இருக்கத்தக்கது. கிரயம் ரூபா 1—4—0 தான். வி. பி. வேறு. முந்துங்கள்! முந்துங்கள்!!

**இ. செ. முஹம்மது இப்ராஹீம் காதிரி,**

புஸ்தக வியாபாரம்

நாட்பாளையத் தெரு, மதுரை. (தென்னிந்தியா)

முஸ்லிம்களுக்கு

# அவசியமான நூல்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| குர்ஆன் ஷரீபின் தமிழ் மொழிபெயர்ப்பும் அதன் விரிவான வியாக்யானமும் காலிகோ பைண்டு ... | 3 | 0 |
| நபிகள் நாயகமும் நான்கு கோமான்களும் ... | 1 | 4 |
| இஸ்லாம் சித்திரப்படத்துடன் (4-ம் பதிப்பு) ... | 1 | 0 |
| நாயகவாக்கியம் 551 (3-ம் பதிப்பு கில்ட் பைண்டு) ... | 0 | 14 |
| ஷை அரபுத் தமிழில் ... ... | 1 | 4 |
| இஸ்லாம் எப்படிச் சிறந்தது! ... ... | 0 | 14 |
| ஈமான் (2-ம் பதிப்பு) ... ... | 0 | 6 |
| முஸ்லிம்களின் முன்னேற்றம் ... ... | 0 | 6 |
| ஆரியருக்கொரு வெடிகுண்டு (2-ம் பதிப்பு) ... | 0 | 12 |
| ஆரியசமாஜிக் கர்ப்பணம் ... ... | 1 | 0 |
| தாஜ்மஹால் (பல படங்களுடன் 2-ம் பதிப்பு) ... | 0 | 6 |
| மருகமலம் (12 வியாசங் கொண்டது)... ... | 0 | 8 |
| ஜுபைதா அல்லது பழிக்குப் பழி (அழகிய சிறு கதை)... | 0 | 4 |
| மஹேந்திர ஜாலம் (பாதிரி ரஸ்புட்டீன் சரிதை) ... | 0 | 12 |
| நூர்ஜஹான் படத்துடன் ... ... | 0 | 8 |
| சுவாசமே உயிர் (படங்களுடன், காலிகோ பைண்டு) ... | 1 | 8 |
| கௌஹர்ஜான் 1 & 2 பாகம் பாகம் 1-க்கு ... | 1 | 8 |
| பாயிஜுர் ரஹ்மானி என்னும் முஹம்மதியலா ... | 0 | 14 |
| நமது பிரதகண்டம் 1 & 2 பாகம் பாகம் 1-க்கு ... | 1 | 14 |
| முஹம்மத் நபிகள் ஸல் ... | 0 | 4 |
| அபூபக்ர் ஸித்தீக் ரலி ... ... | 0 | 6 |
| இயேசுவின் இரகசியம் ... ... | 1 | 8 |
| மலைவிழுங்கிய மகாதேவன் ... ... | 0 | 6 |

ப. முஹைய்யத்தீன் பிச்சை சாயபு,
புஸ்தகம், படம் வியாபாரம்,
நெ. 190, செட்டித்தெரு, கொழும்பு.